எங்கெங்கு காணினும் சக்தியடா

சக்தி

பெண்ணிதழ்

பெண்ணே மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்- 05 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | ஜனவரி 2026

மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி | கொடுமுடி பாலாம்பாள் சுந்தராம்பாள் | மெட்ராஸ் லலிதாங்கி வசந்த்குமாரி | ஊஞ்சலூர் ராமாயம்மா ஜீவாத்மம்

கட்டுரை

மனிதநேய மருத்துவத்தின் முன்னோடி- டாக்டர்.வி.சாந்தா
மேனகா நரேஷ்,

A review on Kavinjanin kaathali-Tamil translation of Sonnets from Portugese'
Dr. B. Nagalakshmi

முதியோர் காதல்!
மேகலா இராமமூர்த்தி

தொடர்கதை

Aranyeni
Vijeni
தைரியலட்சுமி
வை.மு.கோதைநாயகி

கதை

இப்போதுதான்...
சசிகலா விஸ்வநாதன்

அடிமைப் பெண்ணின் உரிமைக்குரல் (கிராமத்துச் சிறுகதைகள்)
மு. செந்தாமரை

கவிதை

கைக்காட்டி மரம்
இரம்யா நடராஜன்

கொஞ்சம் நீ வேறுமாதிரி இருந்திருக்கலாம்
ரிஸ்கா முக்தார்

இன்னும் பல...

எங்கெங்கு காணினும் சக்தி
பெண்ணிதழ்

மலர் -2 இதழ் - 05 ஜனவரி 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்(சிட்னி)

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ)

உள்ளடக்கம்

1. **தை** — 2
மு.செந்தாமரை

2. **மனிதநேய மருத்துவத்தின் முன்னோடி-டாக்டர்.வி.சாந்தா** — 3
மேனகா நரேஷ்,

3. **பெண்** — 11
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்

4. **திருமதி.மேகலா ராமமூர்த்தி, ஃப்ளோரிடா** — 14
மேனகா நரேஷ்,

5. **கைகாட்டி மரம்** — 23
இரம்யா நடராஜன்

6. **கணியான் கூத்து** — 24
தமிழ் மாமணி புலவர், பூங்கொடி பராங்குசம்

7. **விமலா எங்கே போகிறாள்?** — 28
உமா தமிழ்

8. ***God is Love*** — 35
Menaka Naresh

9. **இப்போதுதான்...** — 36
சசிகலா விஸ்வநாதன்

10. ***ARANYANI*** — 41
VIJENI

11. **எத்தனை எத்தனையோ பார்த்துட்டோம்** — 49
- சக்தி சுரேஷ்

12. **முதியோர் காதல்!** — 50
- மேகலா இராமமூர்த்தி

13. **ஒரு கவளமும் ஒரு கவிதையும்-உண்ட மயக்கம்** — 52
இரம்யா நடராஜன்

14. **A review on Kavinjanin kaathali-Tamil translation of Sonnets from Portugese'** — 58
Dr. B. Nagalakshmi

15. **தைரிய லக்ஷ்மி** — 60
வை.மு.கோதைநாயகி அம்மாள்

16. **குயில் தோப்பிலிருந்து ஒரு குரல்** — 64
வித்யா மனோகர்

17. **அடிமைப் பெண்ணின் உரிமைக்குரல் (கிராமத்துச் சிறுகதைகள்)** — 69
மு.செந்தாமரை

18. **தாலி கட்டச்சொன்ன பெரியார்** — 71

19. **குடிகாரக் கணவனுக்கு....** — 72
...கா.ரஹ்மத்துல்லாஹ்..

20. **தன் பிள்ளை தானே கெடும்** — 74
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

21. **கொஞ்சம் நீ வேறுமாதிரி இருந்திருக்கலாம்** — 80
ரிஸ்கா முக்தார்

22. **பெண்ணின் பிரிவுகள் (குல மகளும் விலைமகளும்)** — 81
சோஃபியா சாக்ரட்டீஸ்

23. **விளைவறிந்த விழிப்போடு வாழ்க!** — 94
முனைவர். இல.ஜெயந்தி

தை

தைமகளே வருக!
தைத்திங்களே வருக!

எத்திக்கும் இன்பம் பெருக!
தமிழர் திருநாளே வருக!

நம் குலம் தழைக்க!

உழைக்கும் உழவர் தம் வியர்வைக்கும்
நம் இயற்கைக்கும்

நன்றி நவில நல்கும்
நன்னாளாம்!

கதிரவன் உதிக்க!
செங்கதிரசைய

எம்மண் காக்கும் வீரர் தம் உழைப்பைப் போற்ற;

தித்திக்கும் கரும்பும்
பனை வெல்லமும்
பச்சரிசியும் கலந்து!

கூடிக் குலவையிட்டு பொங்கலிட்டு!

மண் போற்றும் உழவுக்கு வந்தனம் செய்வோமே!
தன் வலது கையாய்
வாழ்நாள் முழுதும் தேர் இழுக்கும்
வடமாய்!

என் தோழனாய்
இருக்கும் கால்நடைகளுக்குப் பொங்கலாம்!
மாட்டுப் பொங்கல்!

மணமகள் போல்
மணமகன் போல்
சிங்காரமிட்டு
கொம்பு சீவி
வர்ணமிட்டு
அழகு பார்த்து தொழுவத்தில் பொங்கலிட்டு
வணங்குவமே!

நம் தமிழின் மரபு!
நம் தமிழனின் வீரம்!
அறம்!
மறம்!
திறம்!
எனப் போற்றும்
வீரவிளையாட்டு

இளம் காளைகளுக்கும்
கன்னியருக்கும்
கொண்டாட்டம்!
ஏறு தழுவி
மார் நிமிர்ந்து
மாடு பிடித்து
வாகைசூடுவான்!

ஊர் வந்து விழா கண்ட
உற்றார்கள்
ஒன்று கூடி இன்பம்
பொங்க!
ஒற்றுமை தங்க!

கும்மியடித்துப்
பாட்டுச் சொல்லி
பாரம்பரியம் தாங்கி
வரும் தலைமுறை
விழாத்தொடர

வித்திடும்
பொங்கலே காணும்
பொங்கல்!
மகிழ்ச்சி
பொங்கும் பொங்கலாய்
அன்பு பொங்கட்டுமே!
ஒற்றுமை ஓங்கட்டுமே!

பொங்குக பொங்கல்!
பொங்கலோ
பொங்கல்!

மு.செந்தாமரை

இந்தியப் பெண் விஞ்ஞானிகள்- 9

மனிதநேய மருத்துவத்தின் முன்னோடி- டாக்டர்.வி.சாந்தா

மேனகா நரேஷ்,
நியூ ஜெர்சி

இந்தியாவின் புகழ்பெற்ற புற்றுநோய் மருத்துவ நிபுணராகத் திகழ்ந்தவர் டாக்டர் விஸ்வநாதன் சாந்தா. அறிவியல் துறையில் பெரும் பங்களிப்புகளைச் செய்த குடும்பத்தில் பிறந்த சாந்தா, அந்தச் சூழலால் ஊக்கமடைந்து மருத்துவத் துறையைத் தேர்ந்தெடுத்தார். 1955ஆம் ஆண்டுச் சென்னை புற்றுநோய் நிறுவனத்தில் (Cancer Institute) சேர்ந்த அவர், தன் அர்ப்பணிப்பால் அந்த நிறுவனத்தை உலகப் புகழ்பெற்ற புற்றுநோய் சிகிச்சை மையமாக மாற்றினார். நாட்டில் தரமான, மலிவான புற்றுநோய் சிகிச்சையைப் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யச் சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டார். மனிதநேயத்தை தனது வாழ்வின் அடிப்படையாகக் கொண்டு மருத்துவ சேவையில் ஈடுபட்ட சிறந்த மருத்துவராக டாக்டர் வி. சாந்தா விளங்குகிறார்.

ஆரம்பகால வாழ்க்கை

டாக்டர் சாந்தா 1927 ஆம் ஆண்டு, மார்ச் 11 ஆம் தேதி மெட்ராஸ் நகரில் (தற்போதைய சென்னை) விஸ்வநாதன் – பாலபார்வதி தம்பதியருக்குப் பிறந்தார். அறிவியலும், மருத்துவப் பாரம்பரியமும் வலுவாகக் கொண்ட குடும்பத்தில் அவர் வளர்ந்தார். விஞ்ஞானி சர்.சி.வி.ராமன் இவரது தாத்தாவின் சகோதரர். நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி டாக்டர் எஸ். சந்திரசேகர் இவரது தாய்மாமா. இவரது தாத்தா தீவிரமான வாசிப்புப் பழக்கம் கொண்டவர். இத்தகைய சூழல் சிறுவயதிலிருந்தே அறிவியல் துறையில் ஆழ்ந்த ஆர்வத்தை அவருள் விதைத்தது.

தேசிய மகளிர் உயர்நிலைப் பள்ளியில் (தற்போதைய பி.எஸ். சிவசாமி ஐயர் மகளிர் மேல்நிலைப் பள்ளி) பள்ளிக் கல்வியை முடித்தபோது, மருத்துவத் துறையில் சேர வேண்டும் என்ற உறுதியான முடிவை அவர் எடுத்திருந்தார். பள்ளியின் தலைமையாசிரியரான மிஸ்.வீல் அவர்கள், ஒழுக்கம்,

நேர்மை, அக்கறை போன்ற பண்புகளைப் பற்றித் தொடர்ந்து வலியுறுத்தி, அவருள் வலுவான ஒழுக்க உணர்வை விதைத்தார். இது டாக்டர் சாந்தாவின் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

1943 ஆம் ஆண்டு, 17 வயதில் இடைநிலை கல்வியை முடித்த அவர், வயது வரம்பை எட்டாத காரணத்தால் ஒரு வருடம் மருத்துவக் கல்லூரியில் சேராமல் காத்திருந்தார். மருத்துவக் கல்லூரியில் சேர வேண்டும் என்ற கனவுடன் இருந்த அந்த ஒரு வருடத்தில் அவர் நிறைய இலக்கியப் படைப்புகளை வாசித்தார். மருத்துவக் கல்லூரியில் சேர்ந்த பின் அவ்வளவு விரிவாக வாசிக்க முடியாத நிலையில், அந்த ஓர் ஆண்டு அவரது அறிவுச் சிந்தனையையும், பார்வையையும் விரிவாக்கிய முக்கியமானக் காலகட்டமாக அமைந்தது. 1944 ஆம் ஆண்டு அவர் மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார்.

மருத்துவப் படிப்பு

சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவில், பெரும்பாலான பெண் குழந்தைகள் பள்ளிக் கல்வி பெறுவதற்கே வாய்ப்பில்லாத சூழல் நிலவியது. ஆனால் டாக்டர் வி. சாந்தாவின் குடும்பம் அறிவாற்றல் மரபு கொண்ட ஒன்றாக இருந்ததால், அக்குடும்பத்தில் பெண்கள் கல்வி பெறுவது வழக்கமாக இருந்தது. இருப்பினும், கல்வி பெற்ற பின்னர்ப் பெண்கள் தொழில்முறை வாழ்க்கையைத் தேர்வு செய்வது அரிதான ஒன்றாகவே கருதப்பட்டது. பெரும்பாலானோர் பட்டம் பெற்றவுடன் திருமணம் செய்து கொண்டு இல்லத்தரசிகளாக வாழ்வதைத் தங்களின் இறுதி இலக்காகக் கொண்டிருந்தனர். சிலர் சமூகச் சேவைகள், கற்பித்தல் அல்லது செவிலியர் பணிகளில் ஈடுபட்டாலும், மருத்துவம் போன்ற உயர் தொழில்முறை துறையில் ஒரு பெண் முழுமையாகத் தன்னை அர்ப்பணிப்பது, அவரது குடும்பச் சூழலில் இதுவரை அறியப்படாத ஒன்றாக இருந்தது.

இந்த வழக்கமான எதிர்பார்ப்புகளை மீறி, டாக்டர் சாந்தா தனித்துவமான பாதையைத் தேர்ந்தெடுக்க விரும்பினார். அவரது வாழ்க்கைப் பார்வையை வடிவமைத்த முக்கியமான தூண்டுதல்களாக லேடி டஃப்ரின் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி போன்ற முன்னோடி பெண்கள் அமைந்தனர். அவர்கள் சமூகத்திற்காகச் செய்த தன்னலமற்ற சேவைகளும், மருத்துவத் துறையில் பெண்கள் வகித்த முன்னணிப் பங்களிப்புகளும், டாக்டர் சாந்தாவின் மனதில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி, மருத்துவத்தை வாழ்க்கைப் பணியாக ஏற்கும் அவரது தீர்மானத்தை உறுதிப்படுத்தின.

1949 ஆம் ஆண்டு, நூறு மாணவர்கள் கொண்ட வகுப்பில், பத்துப் பெண் மாணவிகளில் ஒருவராக இருந்து, டாக்டர் சாந்தா எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்றார். ஒழுக்கம், நேர்மை, சேவை ஆகியவற்றைத் தங்கள் வாழ்க்கைத் தத்துவங்களாகக் கொண்ட சிறந்த ஆசிரியர்களின் வழிகாட்டுதல் அவருக்குக் கிடைத்தது.

அது மருத்துவ அறிவியல் வேகமாக வளரத் தொடங்கிய காலம்; பெனிசிலின் மருத்துவப் பயன்பாட்டிற்குப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு, அரிய வளமாகக் கருதி

பூட்டி வைத்துப் பாதுகாக்கப்பட்ட ஒரு காலகட்டம். அத்தகைய காலச் சூழலில், டாக்டர் சாந்தா 1952 ஆம் ஆண்டு டி.ஜி.ஓ. (D.G.O.) பட்டத்தையும், 1955 ஆம் ஆண்டு மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவத்தில் எம்.டி. (M.D.) பட்டத்தையும் பெற்றார். தொடர்ந்து, டொராண்டோவில் புற்றுநோய் மருத்துவத்தில் (Oncology) மேம்பட்ட பயிற்சியும், இங்கிலாந்தில் எலும்பு மஜ்ஜை மாற்றுச் சிகிச்சை (Bone Marrow Transplantation) குறித்த சிறப்புப் பயிற்சியும் பெற்று, தனது மருத்துவ அறிவையும் திறனையும் உலகளாவிய அளவில் விரிவுபடுத்தினார்.

சென்னை புற்றுநோய் நிறுவனத்தில் பணி

1955 ஆம் ஆண்டு, அவர் சென்னை புற்றுநோய் நிறுவனத்தில் (Cancer Institute) பணியில் இணைந்தார். அந்நிறுவனம் அப்போது அடிப்படை வசதிகளுடன் கூடிய ஆரம்ப நிலையிலேயே இருந்தது. சென்னைப் புற்றுநோய் நிறுவனம் 1954 ஆம் ஆண்டு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களால் தொடங்கப்பட்ட நிறுவனமாகும். டாக்டர் சாந்தா அங்குச் சேர்ந்த காலத்தில், மனிதவளமும் வசதிகளும் குறைந்த ஒரு இளம் நிறுவனமாகவே அது இயங்கிக் கொண்டிருந்தது.

டாக்டர் சாந்தாவின் இடைவிடாத உழைப்பு, ஆழ்ந்த அர்ப்பணிப்பு, மனிதநேய சேவை ஆகியவற்றை உள்ளடக்கிய மருத்துவப் பணியின் காரணமாக இந்த நிறுவனம் பல முன்னேற்றங்களைக் கண்டது. டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆகியோருடன் தோளோடு தோள் நின்று, முழுமையான புற்றுநோய் சிகிச்சை முறைமையை உருவாக்க அவர் அயராது பாடுபட்டார்.

புற்றுநோயியல் துறையில் அவர் செய்த சாதனைகள்

டாக்டர் சாந்தா அவர்களின் புற்றுநோயியல் துறைக்கான பங்களிப்புகள் அளவுகோலற்றவை. இந்தியாவில் முதன்முறையாகப் பல மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்திய முன்னோடியாக அவர் விளங்கினார்.

கதிரியக்க சிகிச்சை, இரசாயன சிகிச்சை, குழந்தைகள் புற்றுநோய் சிகிச்சை ஆகிய துறைகளில் அவர் ஆழ்ந்த தடம் பதித்தார்.

இந்திய புற்றுநோயியல் வரலாற்றில் முக்கியத் திருப்புமுனையாக, முதல் கோபால்ட்-60 கதிர்வீச்சுக் கருவியைப் பெற்றதில் அவர் முக்கியப் பங்கு வகித்தார். உலகளவில் இரசாயன சிகிச்சை இன்னும் பரிசோதனை நிலையில் இருந்த காலத்தில், அதை இந்தியாவில் முதன்முதலாகப் புற்றுநோய் நிறுவனத்தில் நடைமுறைக்குக் கொண்டு வந்தவர் டாக்டர் சாந்தா.

ஏழைகளுக்குப் புற்றுநோய் சிகிச்சையை அணுகக்கூடியதாகவும், மலிவானதாகவும் மாற்றினார்; பிராந்திய புற்றுநோய் மையங்களை நிறுவினார். இந்திய நோயாளிகளுக்கு ஏற்ற சிகிச்சை நெறிமுறைகளை உருவாக்கினார். இதன் விளைவாக, குறிப்பாக லூகேமியா

மற்றும் லிம்ஃபோமா போன்ற புற்றுநோய்கள் தாக்கியவர்கள் உயிர்வாழும் விகிதம் கணிசமாக உயர்ந்தது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் சவால்களை உணர்ந்த அவர், புற்றுநோய் நிறுவனத்தில் சிறப்பான குழந்தைகள் புற்றுநோயியல் சேவைகளை நிறுவி, எண்ணற்ற குழந்தைகளின் உயிர்களைக் காப்பாற்றினார். இதன் மூலம் நோயுடன் போராடும் குடும்பங்களுக்கு நம்பிக்கையின் ஒளியையும் அவர் கொடுத்தார்.

மேலும், நோயாளிகளின் முழுமையான நலனுக்காக, உளவியல் ஆலோசனை, ஊட்டச்சத்து ஆதரவு மற்றும் இறுதிக்காலப் பராமரிப்பு போன்ற பல்வேறு திட்டங்களை அவர் நிறுவினார். அவருடைய இந்த முயற்சிகள், சிறப்பான சிகிச்சை முறைகளை நோயாளிகளுக்கு அளித்ததோடு மட்டுமல்லாமல், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் மகத்தான மனிதநேய சேவையாகவும் திகழ்ந்தன.

ஆராய்ச்சி, கல்விசார் பங்களிப்புகள்

டாக்டர் சாந்தாவின் கல்விசார் பங்களிப்புகள், அவரது அளப்பரிய மருத்துவச் சேவைகளுக்கு இணையான முக்கியத்துவம் கொண்டவை. அவர் எழுதிய எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகள் தேசிய, சர்வதேச இதழ்களில் வெளிவந்து, இந்தியாவில் புற்றுநோயின் பரவல், சிகிச்சை முறைகள் , தடுப்பு உத்திகள் குறித்த அறிவை பெரிதும் விரிவுபடுத்தின.

இந்தியாவில் புற்றுநோய் ஏற்படும் அளவு, பிராந்திய ரீதியான வேறுபாடுகள், சமூக-பொருளாதாரக் காரணிகளின் தாக்கம் , நோயின் தோற்றம் ,வளர்ச்சி முறை ஆகியவற்றை ஆழமாக ஆராய்ந்து, பொதுச் சுகாதாரக் கொள்கைகளையும், எதிர்காலத் திட்டமிடலுக்குத் தேவையான அடிப்படைத் தரவுகளையும் அவர் வழங்கினார்.

இந்தியப் பெண்களிடையே அதிகமாகக் காணப்படும் மார்பகப் புற்றுநோய் , கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் தொடர்பான ஆராய்ச்சிகளில் டாக்டர் சாந்தா தனித்துவமான ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். இத்துறையில் அவர் செய்த முன்னோடி ஆய்வுகள், நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் திட்டங்களுக்கும், பொதுமக்கள் விழிப்புணர்வு இயக்கங்களுக்கும் வழிவகுத்து, நாட்டின் பொதுச் சுகாதார நிலையை மேம்படுத்தின.

மேலும், மருத்துவப் பரிசோதனைகளிலும் *(Clinical trials)*, ஆதார அடிப்படையிலான *(Evidence based)*சிகிச்சை நெறிமுறைகளிலும் அவர் ஆழ்ந்த ஆர்வம் கொண்டிருந்தார். புற்றுநோய் நிறுவனத்தில் பல மருத்துவ ஆய்வுகளை அவர் தொடங்கி, நேரடியாக வழிநடத்தினார்.

இவ்வாய்வுகளின் பயனாக, இந்தியா முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே மாதிரியான சிகிச்சை வழிகாட்டி நெறிமுறைகள் உருவாக்கப்பட்டன.

டாக்டர் சாந்தா, தேசிய அளவிலும், சர்வதேச அறிவியல் இதழ்களிலும் 95-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டதுடன், புற்றுநோயியல் தொடர்பான பல நூல்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

மேலும், இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ICMR) தேசிய புற்றுநோய் பதிவேடு திட்டத்தின் கீழ், மருத்துவமனை அடிப்படையிலான புற்றுநோய் பதிவேடும் (Hospital-Based Cancer Registry), மக்கள்தொகை அடிப்படையிலான சென்னை மாநகரப் புற்றுநோய் பதிவேடும் (Madras Metropolitan Tumor Registry) அவரது தலைமையின் கீழ் நிறுவப்பட்டன.

வளங்கள் குறைந்த சூழலில் புற்றுநோய் சிகிச்சை அணுகலை விரிவுபடுத்துதல்

கடுமையான நிதிச்சவால்களைத் தொடர்ந்து எதிர்கொண்ட போதிலும், அனைவருக்கும் சமமான சிகிச்சை வழங்க வேண்டும் என்ற அதன் அடிப்படை இலக்கில் இருந்து சென்னை புற்றுநோய் நிறுவனம் ஒருபோதும் விலகியதில்லை. இதற்காக டாக்டர் சாந்தா அவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் அளப்பரியது.

இன்றும், இங்குச் சிகிச்சை பெறும் நோயாளிகளில் சுமார் 60% பேருக்கு முழுமையாக இலவச சிகிச்சை வழங்கப்படுகிறது. மேலும், பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நோயாளிகளுக்கான பயணச் செலவுகளை ஏற்றுக்கொள்வதோடு, இலவச தங்குமிட வசதியையும் இந்த நிறுவனம் வழங்கி வருகிறது.

12 படுக்கைகள் கொண்ட ஒரு சிறிய மருத்துவமனையாகத் தொடங்கிய இந்த நிறுவனம், டாக்டர் சாந்தாவின் அர்ப்பணிப்பின் பயனாக இன்று 650 படுக்கைகள் கொண்ட, நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய ஒரு முன்னணி புற்றுநோய் சிகிச்சை நிறுவனமாக உயர்ந்துள்ளது.

டாக்டர் சாந்தா அவர்களின் தொலைநோக்கு சிந்தனையும் தன்னலமற்ற தலைமைத்துவமும் இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தளமாக அமைந்தன என்றால் அது மிகையாகாது .

முதன்மைகளின் மரபிற்கு வித்திட்டவர்

அணு ஆற்றல் ஒழுங்குமுறை வாரியம் (Atomic Energy Regulatory Board) வழங்கிய ஆதரவுடன், கோபால்ட்–60 கதிர்வீச்சு கருவியான எல்டோராடோ A-வை 1956 ஆம் வருடம் நிறுவியதன் மூலம் அடையாறு புற்றுநோய் நிறுவனம் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியது. இதன் மூலம் தென்கிழக்கு ஆசியா முழுவதிலும் இந்தக் கருவியை நிறுவிய முதல் நிறுவனம் என்ற பெருமையைப் பெற்றது. கதிர்வீச்சுச் சிகிச்சை துறையில் இது ஒரு புரட்சிகர முன்னேற்றமாக அமைந்து, புற்றுநோய் சிகிச்சைக்கான புதிய பாதையை அமைத்தது.

அதே ஆண்டில், புற்றுநோய் துறைக்கான நாட்டின் முதல் அணு மருத்துவத் துறை *(Nuclear Medicine Department)* நிறுவப்பட்டு, நோயறிதல், சிகிச்சை திறன்களைப் பெரிதும் மேம்படுத்தியது.

1960-கள் காலகட்டத்தில், அடையாறு புற்றுநோய் நிறுவனத்தில் நாட்டின் முதல் குழந்தைகள் புற்றுநோய் சிகிச்சை நிறுவனம் *(Pediatric Oncology Institute)* தொடங்கப்பட்டு, இளம் வயதிலுள்ள புற்றுநோய் நோயாளிகளுக்கான சிறப்புச் சிகிச்சை தேவையைப் பூர்த்திச் செய்தது.

1971 ஆம் ஆண்டில் நாட்டின் முதல் மருத்துவப் புற்றுநோய் சிகிச்சை பிரிவு *(Medical Oncology Unit)* மற்றும் இரத்த கூறுகள் பிரிவு *(Blood Component Unit)* உருவாக்கப்பட்டு, முழுமையான புற்றுநோய் பராமரிப்பை மேலும் விரிவாக்கியது.

புதுமை என்ற தனது பாதையைத் தொடர்ந்து, *1976* ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் நேரியல் வேகமூட்டியை *(Linear Accelerator – LINAC)* நிறுவி, துல்லியமான கதிர்வீச்சு சிகிச்சையை வழங்குவதில் ஒரு முக்கிய முன்னேற்றத்தை நிறுவனம் ஏற்படுத்தியது.

அவரது அயராத அர்ப்பணிப்பு, *1984* ஆம் ஆண்டில் நாட்டிலேயே முதல் முறையாக மருத்துவப் புற்றுநோயியல் மற்றும் அறுவை சிகிச்சை புற்றுநோயியல் துறைகளில் முனைவர் பட்ட *(Postdoctorate)* பயிற்சி திட்டங்களைத் தொடங்கச் செய்தது. இதன் மூலம் புற்றுநோயியல் நிபுணத்துவத்திற்குப் புதிய தரநிலைகள் உருவானது.

அவரது தொலைநோக்கு தலைமையின் கீழ், *2000* ஆம் ஆண்டில், இந்தியாவின் முதல் மரபணு சார்ந்த புற்றுநோய் கிளினிக்*(Hereditary Cancer Clinic)* நிறுவப்பட்டு, மரபணு காரணமாகப் புற்றுநோய் அபாயத்தில் உள்ளவர்களுக்கு முக்கியமான ஆலோசனை மற்றும் சிகிச்சை வழங்கப்பட்டது.

தலைமைப் பொறுப்புகளில் நிகழ்த்திய சாதனைகள்

புற்றுநோய் மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய துறைகளில் டாக்டர் வி. சாந்தா அவர்கள் தலைமை வகித்த பதவிகளில் சிறப்பாகச் செயல்பட்டு பல சாதனைகளை நிகழ்த்தினார்.

இருபதாண்டுகளுக்கும் மேலாகப் புற்றுநோய் நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றிய அவர், அதன் நோக்கத்தையும் , பணிமுறையையும் வடிவமைக்க முக்கியப் பங்காற்றினார்.

2005 மார்ச் மாதம் வரை உலகச் சுகாதார அமைப்பின் *(World Health Organization)* புற்றுநோய் ஆலோசனைக் குழுவின் உறுப்பினராக இருந்து, உலகளாவிய புற்றுநோய் கட்டுப்பாட்டு உத்திகளுக்கு அவர் முக்கியப் பங்களிப்பு வழங்கினார்.

தமிழ்நாடு மாநில சுகாதாரத் திட்டக்குழுவில் உறுப்பினராக இருந்து சுகாதாரக் கொள்கைகளை வடிவமைப்பதில் முக்கியப் பங்கு வகித்தார். மாநிலப் புற்றுநோய் ஆலோசனை வாரியத்தின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்பட்டு, பொதுச் சுகாதாரத் திட்டமிடலில் புற்றுநோய் சிகிச்சை முக்கியத்துவம் பெறுவதை உறுதிப்படுத்தினார்.

இந்தியா–அமெரிக்கா இணைந்த லிம்பாய்டு நியோபிளேசியாஸ் *(INDO-US Collaborative Group on Lymphoid Neoplasias* – இந்திய அத்தியாயம்) குழுவின் தலைவராக அவர் பணியாற்றி, இந்தியா மற்றும் அமெரிக்காவுக்கிடையிலான முக்கிய ஆய்வு ஒத்துழைப்புகளை ஏற்படுத்தினார்.

மருத்துவ ஆராய்ச்சியை முன்னேற்றுவதில் அவரது அர்ப்பணிப்பு, இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் *(ICMR)* அமைப்பின் பல குழுக்களில் உறுப்பினராக இருந்ததன் மூலம் மேலும் வெளிப்பட்டது. குறிப்பாக, இந்தியா முழுவதும் புற்றுநோய் பதிவேடுகளை நிறுவுவதில் முக்கியப் பங்கு வகித்த *ICMR* பதிவேடு பணிக்குழுவின் *(Task Force on Registries)* உறுப்பினராக அவர் செயல்பட்டார்.

மேலும், அண்ணா பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினராக இருந்து சுகாதார அறிவியல் துறையின் கல்வி விவாதங்களில் பங்களித்தார்.

தொழில்முறை அமைப்புகளிலும் அவரது தலைமைத்துவம் விரிந்தது. *1988* முதல் *1990* வரை இந்திய புற்றுநோய் சங்கத்தின் *(Indian Society of Oncology)* தலைவராகவும், *1997* முதல் *1999* வரை ஆசிய–பசிபிக் புற்றுநோய் கட்டுப்பாட்டு அமைப்புகளின் கூட்டமைப்பின் *(Asian and Pacific Federation of Organizations for Cancer Control)* தலைவராகவும் பணியாற்றினார்.

கூடுதலாக, கூடங்குளம் அணுமின் நிலையத் திட்டம் தொடர்பான பொதுமக்களின் அச்சங்களைத் தீர்க்க அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் உறுப்பினராக இருந்து, பொதுச் சுகாதாரக் கோணத்தில் விளக்கங்கள் அளித்து நம்பிக்கையை ஏற்படுத்தினார்.

விருதுகளும் கௌரவங்களும்

டாக்டர் வி. சாந்தா அவர்கள் மருத்துவத்துறையிலும், புற்றுநோய் கட்டுப்பாட்டுத் துறையிலும் ஆற்றிய ஒப்பற்ற சேவைகளுக்காகப் பல உயரிய விருதுகளால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

1986 ஆம் ஆண்டு இந்திய அரசால் வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதைப் பெற்ற அவர், *1997* ஆம் ஆண்டு இந்தியாவில் புற்றுநோய் பதிவேடுகளை உருவாக்கிய சிறப்பான பணிக்காகச் சர்வதேச புற்றுநோய் பதிவேடுகள் அமைப்பின் *(International Association of Cancer Registries)* விருதையும் பெற்றார்.

தொடர்ந்து, வளங்கள் குறைந்த நாடுகளில் புற்றுநோய் கட்டுப்பாட்டிற்கான முன்னோடியான சேவையை அங்கீகரித்து *2002* ஆம் ஆண்டுப் பிரசெல்ஸில் நாஸ்லி கத்-

எல்-மாவ்லா *(Nazli Gad-el-Mawla)* விருது வழங்கப்பட்டது. தேசிய மருத்துவ அறிவியல் அகாடமியின் *(National Academy of Medical Sciences)* தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் *(Fellow)* என்ற பெருமையும் இவருக்கு உண்டு .

2005 ஆம் ஆண்டு ஆசியாவின் மிக உயரிய விருதாகக் கருதப்படும் ரமோன் மக்சேசே விருதைப் பெற்ற டாக்டர் சாந்தா அவர்கள், அந்தப் பெருமையைத் தமது நிறுவனத்திற்கே அர்ப்பணித்தார்.

இந்தியாவின் உயரிய விருதுகளான பத்ம பூஷண் விருது *2006* ஆம் ஆண்டும், பத்ம விபூஷண் விருது *2016* ஆம் ஆண்டும் அவருக்கு வழங்கப்பட்டது. நாயுடம்மா நினைவு விருது, அவ்வையார் விருது, அன்னை தெரசா விருது உட்பட ஏராளமான விருதுகளை இவர் பெற்றுள்ளார். விருதுகள் மூலம் கிடைக்கும் தொகை முழுவதையும் மருத்துவமனை வளர்ச்சிக்கே செலவு செய்வார்.

முடிவுரை

டாக்டர் வி. சாந்தாவின் வாழ்க்கை இந்திய மருத்துவ வரலாற்றில் ஒரு ஒளிமயமான அத்தியாயம் என்றால் அது மிகையல்ல. புற்றுநோய் சிகிச்சையை இந்தியாவில் அனைவருக்கும் எளிதாகவும் தரமானதாகவும் மாற்றுவதற்காக, தனது வாழ்க்கையின் சுமார் *65* ஆண்டுகளை அர்ப்பணித்த ஒரு அபூர்வமான பெண் அவர். டாக்டர் சாந்தா, நோயாளிகளை வெறும் நோயாளிகளாகப் பாரக்காமல், மனிதர்களாகக் கண்டார். அன்பும் கருணையும் அவரது சிகிச்சையின் அடித்தளமாக அமைந்தது. ஒரு சிறந்த நிர்வாகியாக, அவர் புற்றுநோய் சிகிச்சை, ஆராய்ச்சி, கல்வி ஆகியவற்றை ஒரே கூரையின் கீழ் கொண்டு வந்து, இந்தியாவை உலகப் புற்றுநோய் சிகிச்சை வரைபடத்தில் உயர்த்தினார். ஆராய்ச்சியாளராக, புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, எதிர்கால மருத்துவ முன்னேற்றங்களுக்கு வலுவான அடித்தளத்தை அமைத்தார். புற்றுநோயைச் சுற்றியிருந்த பயமும் சமூகத் தடைகளும் உடைய வேண்டும் என்பதற்காக அவர் போராடினார். கருணையுடன் கூடிய அறிவும், சமூகப் பொறுப்புணர்வும் இணைந்தால் மருத்துவம் எவ்வளவு உயரத்தை எட்டும் என்பதற்கான நிரந்தர எடுத்துக்காட்டாக டாகடர் வி. சாந்தாவின் வாழ்க்கை என்றும் நிலைத்திருக்கும்.

பெண்

முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்
சிட்னி, ஆஸ்திரேலியா

1.
வீழ்ந்திடுவாய் ! வீழ்ந்திடுவாய் !!
என்றே அச்சுறுத்தியே அடக்கினாய்.
வீழ்ந்திடுவேனோ? வீழ்ந்திடுவேனோ?
என்ற அச்சத்துடன் தான் உலகைப் பார்த்தேன்.
வீழ்ந்திட மாட்டேன்! வீழ்ந்திட மாட்டேன் !!
என்ற நம்பிக்கையில் தான் எட்டு வைத்தேன்
வீழ்ந்து விடவில்லை ; வீழ்ந்து விடவில்லை ;
என்று உணர்ந்த போதே உச்சம் எட்டினேன்.
'வீழ்வேன் என்று நினைத்தாயோ?'
என்று கேட்கும் நிலையில் நான்,
நீயோ , அதே இடத்தில்.

2
தந்தையோடு கல்வி
போகவில்லை
தாயோடு அன்பும்
போகவில்லை
ஆனால் உன்னோடு
எல்லாமே போனதென்னவோ
உண்மைதான்.

3.
முகம் நோக்கி
உண்மைகள் சொல்வதற்கு
முதுகெலும்பு இல்லாமல்,
புறம்பேசி
முதுகில் குத்தும்
புல்லர்கள்.

4.
பெண் தெய்வங்களுக்கு
கொடுக்கும் இடத்தில்,
ஒரு புள்ளியைக் கூட
வீட்டில் இருக்கும்
பெண்களுக்குத்
தருவதற்கு மனமில்லா
மூடர்கள்.

5.
பேசும் வாய்ப்புக்குக்
காத்திருந்த போது
சொன்னாய்,
வாய் திறக்கு முன்
பொறுமையும் அடக்கமும்
பூண்டு கொள் என்று
கேட்கும் தருணம்
வந்த போது
சொன்னாய்
திறந்த மனமும்
மௌனமும்
அணிந்து கொள் என்று

தேர்ந்தெடுக்க வாய்ப்பு
வந்த போது
சொன்னாய்

விட்டுக் கொடுப்பதும்
விருப்பம் தவிர்ப்பதும்
நல்லது என்றாய்

வாழ்வது என்று
வந்தபோது
சொன்னாய்
பிழைப்பது கடினம்
அனைத்தையும் தாங்கக்
கற்றுக்கொள் என்று
அம்மா !
உன்னுடைய
அனுபவத்தை,
என் மீது
ஏன் திணிக்கிறாய்?

6
பெண்ணென்று எனக்கு
கருணை காட்டத் தேவையில்லை;
பெண்ணென்று எனக்கு
சலுகை தரத் தேவையில்லை;
பெண்ணென்று எனக்கு
எவ்வித கழிவிரக்கமும் தேவையில்லை;
பெண்தானே.....
என்று ஒரு பார்வை
இல்லாமல் இருந்தாலே போதுமானது.

7
என்னைக் கொல்லும்
உன் ஒவ்வொரு சொல்லும்
உன்னை விட்டு விலக
பின்னோக்கி நான்
ஓரடி எடுத்து வைக்க
உதவும் சொல்
என்பதை
நான் தொலையும் வரை
நீ உணர மாட்டாய்.

8
இந்த உலகம்
இப்படி
என்னைச் செதுக்கி எடுத்தது
வாய் மூடி
இருந்த
என் முன்னவர்கள்
சொல்லமுடியாமல்
போனதைச்
சொல்ல வைக்கத்தானோ?

9
அது அப்படியே
கிடக்கட்டும்
அவை அப்படியே
போகட்டும்
எது எப்படியோ
நடக்கட்டும்
உன் முயற்சி
மட்டும் தொடரட்டும்.

10
உடைத்து போட்டவன்
காலடியில்
விழுந்து
ஒட்ட வைக்கச் சொல்லி
கெஞ்சிக் கொண்டிருக்கும்
முட்டாள் நீ

11
பெண்களின் உடல்களை
விளையாட்டுத் திடல்
என்று நினைக்காதீர்கள்,
உள்ளே
எரிமலை ஒன்று
உறங்கிக் கொண்டு
இருப்பதை அறியாமல்.

12
வெப்பத்தை வெறுக்கும்
நீ,
என்னை மட்டும் ஏன்
உனக்குள் ஒளித்து
வைக்க விரும்பினாய்?
நெருப்பென்று
அறிந்து கொள்ளாமலேயே.

13
குறைகளால் குளிப்பாட்டி
தன்னால் மட்டுமே
உன்னை முழுமைப்படுத்த
முடியும் என்றே,
ஏமாற்றிக் கொண்டிருக்கும்
எதிர்ப்பால்

கூட்டத்தை நம்பி,
எதிர்க்காமல்
சார்ந்திருப்பதற்குப்
பழகிப் போய்விட்ட உன்
குறைகளை நிறைகளாக்க
முயற்சி செய்.

14
எல்லோருக்கும் நல்லவன்
என்று
விளம்பரப்படுத்திக் கொள்பவன்
ஒருத்தருக்கும் உண்மையாக
இருப்பதில்லை
என்பதே உண்மை

15
தன்னையேக் காதலிக்கத்
தெரியாதவனிடம்,
உன்னைக் காதலிக்க வேண்டும்
என்பதை
எப்படி எதிர்பார்த்தாய் ?

16
கண்மூடித் தூங்கி எழுந்தவுடன்
பட்டாம்பூச்சி
ஆகிவிடுவாய் என்று
.கனவுகளில் மூழ்கியிருக்காதே
கண்மணி!
கூட்டு புழு என்ற
நிலையைத் தாண்ட வேண்டும்
மறந்து விடாதே.

17
ஒற்றை வெற்றி
உலகத்தின் வெற்றியாகாது.
உன்னுடைய வெற்றியை
இந்த உலகத்தின்
வெற்றியாக
மாற்றிக்காட்டு

18
அசைக்க முடியாத
ஒன்றென்று
உலகம் நினைத்திருப்பதை,
ஒரு முறை அசைத்துப் பார்
இந்த உலகம் உன்னோடு
அசைந்து விடும்.

19
வீழ்வதற்கான
பலவீனத்துடன்
பிறந்திருப்பாயானால்
வாழ்வதற்கான
வலிமையுடனும்
தான்
பிறந்திருப்பாய்.

19
எந்த முன்மாதிரியும்
இல்லை என்பதால்,
என்னை
எனக்குத் தேவையான படி,
நான்
வடிவமைத்துக் கொண்டுள்ளேன்.
உதவாவிட்டாலும் கூட
உடன் வந்து
கொண்டாடக் கூடத்
தயக்கமா?

20
முன்பு பேசப்படாத எதையும் நான் பேச வரவில்லை
.
முன்பு எழுதப் படாத எதையும் நான் எழுத
வரவில்லை.
முன்பு சொல்லப்படாத கருத்து எதையும் நான்
சொல்ல வரவில்லை .
முன்பு கோரப்படாத உரிமை எதையும் நான் கோர
வரவில்லை .
முன்பு மாற்றப்படாத எதையும் நான் மாற்ற
வரவில்லை .
ஆனால் நான் எழுத விரும்புகிறேன்,
என் எழுத்தும், பேச்சும், கருத்தும்,
உரிமைகளை உணர்த்தி,
கருத்துகளிலும்
செயல்களிலும்
மாற்றங்களைக் கொண்டு வந்தால்
நான் எப்படிப் பொறுப்பாக
முடியும்?

அமெரிக்கத் தமிழ்ப் பெண் ஆளுமைகள்

திருமதி. மேகலா ராமமூர்த்தி, ஃப்ளோரிடா

மேனகா நரேஷ்,
நியூ ஜெர்சி

தமிழ் ஆர்வலர், கல்வியாளர், பேச்சாளர், கவிஞர், எழுத்தாளர் என பன்முகத் திறமையுடன் செயலாற்றிவரும் திருமதி மேகலா ராமமூர்த்தி அவர்களை "சக்தி" இதழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் பெருமைக் கொள்கிறேன்.

அவரது பேட்டி இதோ உங்களுக்காக.

1.உங்களைப் பற்றிய அறிமுகத்தை வாசகர்களுக்குக் கூறுங்கள்.

சக்தி இதழ் வாசகர்களுக்கு வணக்கம்.

என் பெயர் மேகலா இராமமூர்த்தி. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான புனிதவதியார் அவதரித்த காரைக்கால் மண்ணில் நானும் பிறந்ததைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன். என் தந்தையார் காலஞ்சென்ற, முனைவர் இராம. இராமமூர்த்தி அவர்கள் மிகச்சிறந்த தமிழறிஞர். தாயார் திருமதி ஜெயலட்சுமி அவர்களும் தமிழார்வம் மிக்கவர். அதனால் குழவிப் பருவத்திலேயே எனக்குத் தமிழில் ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது.

காரைக்காலிலுள்ள 'விவேகானந்தா வாலிபர் சங்கம்' எனும் அமைப்பு நடத்திய திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் கலந்துகொண்டு எனது 10-ஆவது வயதில் 1330 திருக்குறளையும் ஒப்பித்து, உரூ. 1000 மதிப்புள்ள வெள்ளிக் காசுகள் அடங்கிய, பொற்கிழியைப் பரிசாய்ப் பெற்றிருக்கின்றேன்.

பள்ளியில் பேச்சுப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் பலவற்றில் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றுள்ளேன். என் கல்லூரிக் காலம் தொடங்கி இதுநாள் வரை, முனைவர் சத்தியசீலன், முனைவர் அறிவொளி, முனைவர் அ. வ. இராஜகோபாலன், முனைவர்

சிவச்சந்திரன், முனைவர் சிவசங்கரன், திரு. சாரங்கபாணி, முனைவர் சாலமன் பாப்பையா, மகாகவி ஈரோடு தமிழன்பன், திரு. சுகி. சிவம், முனைவர் கு. ஞானசம்பந்தன், தமிழிசை ஆய்வாளர் திரு. நா. மம்மது, திரு. இராஜா போன்ற தமிழ் ஆளுமையர் பலரின் தலைமையில் பேசக்கூடிய அரிய வாய்ப்புகள் அமைந்தன.

இயற்பியலில் இளங்கலைப் பட்டமும் *(B.Sc. Physics)*, கணினிப் பயன்பாட்டியலில் முதுகலைப் பட்டமும் *(M.C.A)* பெற்றுள்ளேன். தமிழார்வத்தின் காரணமாகத் தமிழில் முதுகலை *(M.A. Tamil)*, ஆய்வியல் நிறைஞர் *(M.Phil. Tamil)* பட்டங்களைப்பெற்று, இப்போது தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர்ப் பட்ட ஆய்வில் *(PhD in Tamil)* ஈடுபட்டுள்ளேன். இவற்றோடு மருத்துவப் படியெடுத்தல்/திருத்துநர் படிப்பில் சான்றிதழும் *(Medical Transcription Editor)* பெற்றுள்ளேன்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்கவாசியாக இருந்துவரும் நான், புளோரிடாவிலுள்ள லேக்லாந்தில் *(Lakeland, Florida)* குடும்பத்தோடு வசித்துவருகின்றேன். புளோரிடா பல்தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் இயற்பியல்துறைப் பேராசிரியராக *(Physics Professor in Florida Polytechnic University)* பணியாற்றிவருகின்றேன்.

2. உங்கள் தமிழ்ப் பற்றிற்கு வித்திட்டவர் யார்?

மிகச் சிறந்த தமிழ் ஆளுமையரான என் தந்தையே என் தமிழ்ப்பற்றுக்கு வித்திட்டவர்; ஆனால் அதற்கு நீரூற்றி வளர்த்தவர்கள் என் பெற்றோர் இருவருமே. இன்னும் சற்று விளக்கமாகச் சொல்வதென்றால் என் தமிழ்ப்பற்றுக்கும் புலமைக்கும் உதவியவர் என் தந்தை; 'நான் தமிழிலும் முறையான உயர்கல்வி பெறவேண்டும்; அப்போதுதான் என் தமிழ்ப்பேச்சும் எழுத்தும் சிறக்கும்' எனச் சொல்லி நான் தமிழில் பட்டங்கள் பெறுவதற்கு ஊக்கமூட்டியவர் என் தாய்.

3. உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு முன்னுதாரணமாக இருப்பவர் யார்?

முன்னுதாரணமாக ஒருவரை மட்டும் சொல்ல இயலாது. சிறந்த வாழ்க்கைக்குத் தேவையான வெவ்வேறு திறன்களுக்கு வெவ்வேறு மனிதர்கள் எனக்கு முன்னுதாரணங்களாகத் திகழ்ந்துவருகின்றனர்.

பிள்ளைகளுக்கு முதல் *"role model"* யார்? அவர்களின் பெற்றோர்! அதற்கு நானும் விதிவிலக்கல்லள். எனக்கும் என் பெற்றோரே முதல் முன்னுதாரணம். தமிழ்ப்புலமை, தமிழார்வம், நேர்மை, ஒழுக்கம், எளிமை ஆகியவற்றுக்கு என் தந்தையையும், குடும்பத்தைத் திறம்பட நிர்வகித்தல், பிறரின் திறனறிந்து ஊக்குவித்தல், சமையல் கலை, இசை ஆகியவற்றுக்கு என் தாயையும் முன்னுதாரணங்களாகக் கருதுகின்றேன்.

தமிழறிஞர்களான வ.சுப. மாணிக்கனார், மு.வரதராசனார், அ.ச. ஞானசம்பந்தன் போன்றோரைத் தமிழாய்வுக்கும், நெல்லை கண்ணன், வலம்புரி ஜான், சொ. சொ. மீனாட்சிசுந்தரம், சேலம் உருக்மணி, சுகி. சிவம், சுதா சேஷையன், சுமதி, பாரதி பாஸ்கர்

போன்றோரை மேடைப்பேச்சுக்கும், கல்கி கிருஷ்ணமூர்த்தி, தி.ஜானகிராமன், நா. பார்த்தசாரதி, இராஜம் கிருஷ்ணன், இலட்சுமி, அம்பை, சு. வெங்கடேசன் போன்றோரைக் கதைகளுக்கும், மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன், கண்ணதாசன், ஈரோடு தமிழன்பன், அப்துல் இரகுமான், கல்யாண்ஜி போன்றோரைக் கவிதைகளுக்கும் என் முன்னுதாரணங்களாகக் கொண்டிருக்கிறேன்.

4. இன்றைய தமிழ் இலக்கியத்தின் மாற்றங்களை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகை யினானே" என்று கி.பி. 12ஆம் நூற்றாண்டிலேயே நன்னூல் எனும் இலக்கணநூல் நவின்றிருக்கின்றது. எனவே பழையன கழிந்து புதிய மாற்றங்களை இலக்கியம் எதிர்கொள்வதென்பது காலத்தின் கட்டாயம்.

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு (கி.மு. 500 – கி.பி. 300) காதலையும் வீரத்தையும் போற்றி எழுதப்பட்டன சங்கப் பாடல்கள்; அதனைத் தொடர்ந்துவந்த காலத்தில் (கி.பி. 300 – 600) அற இலக்கியத்தின் வளர்ச்சி அபரிமிதமாக இருந்தது. அதன்பின்னர் பக்தி நூல்கள் (கி.பி. 600 – 900), காப்பியங்கள் (கி.பி. 900 – 1200), உரைநூல்கள், சாத்திர நூல்கள் (கி.பி. 1200 – 1500), புராண, சிற்றிலக்கிய நூல்கள் (கி.பி. 1500 – 1800) எனப் பல்வேறு இலக்கிய வகைமைகளைத் தமிழிலக்கியம் தனதாக்கிக் கொண்டது. கி.பி. 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் தாக்கத்தால் சிறுகதை, புதினம் முதலிய உரைநடைசார் இலக்கிய வகைமைகள் தமிழுக்கு அறிமுகமாயின. இருபதாம் நூற்றாண்டில் இவை எழுச்சியுற்றன; அத்தோடு, மரபுத் தளையிலிருந்து விடுபட்டு உணர்ச்சிகளுக்கு முதன்மைதரும் புதுக்கவிதைகளும் தோன்றி 'வானம்பாடி'களாய் வானில் சிறகுவிரித்துப் பறந்தன.

ஈரோடு தமிழன்பன் போன்ற கவிஞர்கள் பிறநாட்டுக் கவிதை வடிவங்களான ஹைக்கூ, சென்ரியு, லிமெரிக், லிமரைக்கூ, கஜல் போன்றவற்றைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தி அவ்வகைமைகளிலும் கவிதைகள் புனைந்து தமிழிலக்கியத்தைச் செழுமைப்படுத்தினர்.

இன்றைய 21ஆம் நூற்றாண்டில் மேலும் பல இலக்கிய வகைமைகள் தோன்றியுள்ளன. பெண்களின் உணர்வுகளைப் பேசும் பெண்ணிலக்கியம், ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாய் ஒலிக்கும் தலித் இலக்கியம், அறிவியல் புனைகதைகள், நுண்புனைவுகள், சிறுகதையினும் சுருங்கிய வடிவுகொண்ட ஒருநிமிடச் சிறுகதைகள், மைக்ரோ கதைகள் என விரிந்துசெல்கின்றது நவீன இலக்கியப் பரப்பு. புதுக்கவிதைகளும் புதிய பொருண்மைகளில் பலரால் விருப்பத்தோடு படைக்கப்பட்டுவருகின்றன.

அம்மட்டோ? செய்யறிவும் (Artificial Intelligence) இப்போது இலக்கியம் படைப்பதற்குத் தேவையான தரவுகளை உடனுக்குடன் வழங்கிப் பேருதவி புரிந்துவருகின்றது.

இவ்வாறு காலத்திற்கும், சமூகத்தின் தேவைக்கும் சூழலுக்குமேற்பத் தமிழிலக்கியம் தன்னைப் புதுப்பித்துக்கொண்டு வருவது அதன் உயிர்ப்புத்தன்மையையும், மாற்றங்களை

ஏற்று வளரும் அதன் தகவமைப்பையும் காட்டுவதாகவே நான் பார்க்கிறேன். மொழியின் தொய்வுபடாத தொடர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் இவை இன்றியமையாத கூறுகளாகும்.

படைப்புத்துறையில் நான் காணுகின்ற மாற்றங்களையும் இங்கே சுட்ட விரும்புகின்றேன். படைப்பாளிகள் முன்பு தம் படைப்புக்களை அச்சு ஊடகங்களான நாளிதழ், வார/மாத இதழ்களுக்கு அனுப்புவர்; அவ்விதழ்கள் பிரசுரித்தால் மட்டுமே அப்படைப்புக்கள் சமூகத்தின் பார்வைக்குத் தெரியவரும். ஆனால் இந்த எண்ணிம யுகத்தில் அச்சு ஊடகங்களின் ஆதரவுக்கோ, அங்கீகாரத்துக்கோ படைப்பாளிகள் காத்திருக்க வேண்டியதில்லை. தம் படைப்பைப் பிறரின் உதவியின்றித் தாமே வெளியிட்டுச் சமூகத்தின் பார்வைக்குக் கொண்டுசெல்லச் சமூக ஊடகங்கள் *(social media)*, வலைப்பூக்கள் *(blogs)* போன்றவை பெருந்துணை செய்கின்றன.

படைப்பை வெளியிடப் பதிப்பாளர் கிடைக்கவில்லையா? கவலையில்லை! படைப்பாளி தன் படைப்பை அமேசான் கிண்டில் *(Amazon Kindle)* போன்ற இணைய தளங்களில் தானே மின்னூலாக *(E-book)* வெளியிட்டுவிடலாம். காட்சி ஊடகமான வலையொளியில் *(YouTube)* படைப்பைக் காணொளியாக வெளியிட்டுப் பிறருக்குப் பகிரலாம். ஆக, தமிழிலக்கியத்துறையில் மட்டுமல்லாது பதிப்புத்துறையிலும், படைப்புத்துறையிலும் பல புதிய மாற்றங்களை நாம் சந்தித்துவருகின்றோம்.

இவ்விடத்தில் என் விமர்சனப் பார்வையொன்றையும் வைக்க விரும்புகின்றேன். படைப்புக்களை உருவாக்கிச் சமூகத்தின் பார்வைக்குக் கொண்டுசெல்வதும் பதிப்பிப்பதும் இந்நாளில் எளிதாகிவிட்டதனால் தரமற்ற, சொல்வளமும் பொருட்செறிவுமற்ற, பிழைமலிந்த சரக்குகள் பல கவிதை, கதை, கட்டுரை எனும் பெயர்களில் புற்றீசல்கள்போல் புறப்பட்டுவருவதையும் காணமுடிகின்றது. ஈசலைப்போலவே இவையும் அற்ப ஆயுளில் அழியக்கூடியவை.

ஆதலால் சமூக மேம்பாட்டிற்கு உதவும் வகையில் கருத்துச் செறிவும், படைப்புத் திறன் வெளிப்படும் வகையில் கற்பனை வளமும், பிழையில்லாத செம்மாந்த மொழிநடையும் கொண்ட படைப்புக்கள் உருவாக்கப்படுமானால் அவை காலங்கடந்து வாழும். இதனைப் படைப்பாளிகள் மனத்தில் கொள்வார்களாக!

5. நவீனத் தமிழ் இலக்கியத்தில் அயலகக் குரல்கள் எவ்வளவு முக்கியம்? அவற்றின் தனித்துவம் பற்றி உங்கள் கருத்து என்ன?

தமிழர்கள் புலம்பெயர்ந்து அயலகங்களில் வாழத்தொடங்கிப் பல பத்தாண்டுகள் ஆகிவிட்டன. எனவே "அயலகத் தமிழ்" என்பது தமிழிலக்கியத்தின் தவிர்க்கவியலாத வகைமைகளில் ஒன்றாகிவிட்டது; அதனை நீக்கி நாம் நவீனத் தமிழிலக்கியத்தை மதிப்பிடமுடியாது என்றே எண்ணுகின்றேன்.

புலம்பெயர்ந்துசென்று இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, ஜெர்மனி, நார்வே, பிரான்ஸ் எனப் பல நாடுகளிலும் குடியேறியுள்ள தமிழர்கள் தம் வாழ்வியலை, அனுபவங்களை, ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை, சவால்களை வெளிப்படுத்தி உயிரோட்டமுள்ள படைப்புக்கள் பலவற்றை உருவாக்கியுள்ளனர்.

சிங்கப்பூர்வாழ் தமிழ்ப் படைப்பாளிகளான மா. இளங்கண்ணன், இராம. கண்ணப்பன், நா. கோவிந்தசாமி போன்றோரின் படைப்புக்கள் வாயிலாகச் சிங்கப்பூர்த் தமிழர்களின் வாழ்வியலை, அவற்றிலுள்ள சிக்கல்களை நாமறிந்துகொள்கின்றோம்.

மலேசியப் படைப்பாளிகளில் மா. இராமையா, வீ. செல்வராஜ் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழகக் கவிஞர்கள் கைவிட்டுவிட்ட மரபுக் கவிதை வடிவத்தைக் கைவிடாது, அதில் மலேசியத் தமிழர் நிலையைக் கவி வடிக்கும் சங்கு சண்முகம் போன்ற கவிஞர்களும் அங்குண்டு.

இலங்கையிலும் அயலகங்களிலும் வாழ்ந்த, வாழ்ந்துவருகின்ற ஈழத்தமிழரின் பங்களிப்பு தமிழிலக்கியத்துறையில் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, பேராசிரியர் க. கைலாசபதி போன்றோர் இலங்கையிலே வாழ்ந்து தமிழிலக்கியத்திற்குப் பெரும் பங்களிப்பைச் செய்தோராவர்.

புலம்பெயர்ந்து சென்று தமிழிலக்கியத் துறையைச் செழுமைப்படுத்தி வருவோரில் இலங்கையைத் தாயகமாகக் கொண்ட அ. முத்துலிங்கம் குறிப்பிடத்தக்கவர். பேராசிரியர் க.கைலாசபதியால் எழுத்துலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட இவர், இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகளில் பணிநிமித்தம் தங்கியிருந்து, தற்போது கனடாவில் வசித்துவருபவர். தமிழர் வாழ்வியல், எண்ணிம யுகத்தில் தமிழர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என அனைத்தையும் அங்கதச் சுவை மிளிர எழுதுவதில் வல்லவர் இவர். பிரான்சில் வசித்துவரும் எழுத்தாளர் ஷோபாசக்தி, புலம்பெயர் வாழ்வின் வலியை வார்த்தைகளாக்குவதில் வித்தகர். இவருடைய 'கொரில்லா' உள்ளிட்ட புதினங்களும், சில சிறுகதைகளும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

ஜெர்மனியில் வசித்துவரும் மலேசியத் தமிழரான முனைவர் க. சுபாஷிணி அவர்கள், தமிழ் மரபு அறக்கட்டளை எனும் அமைப்பினைத் தோற்றுவித்துத் தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் ஆவணங்களை, ஓலைச்சுவடிகளைச் சேகரித்தல், அவற்றை எண்ணிம மயமாக்கி அனைவரும் பயன்கொள்ளும் வகையில் சேமித்தல் முதலிய ஒப்பற்ற பணிகளை ஆற்றித் தமிழ்மொழிக்கும் தமிழிலக்கியத்திற்கும் பெருந்தொண்டு புரிந்துவருகின்றார்.

தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்து அமெரிக்காவில் குடியேறிய தமிழர்கள் கணிசமான எண்ணிக்கையினராவர். இவர்களிலும் படைப்பாளிகள் பலர் இருக்கின்றனர். அமெரிக்கவாழ் தமிழ் எழுத்தாளரான கீதா பென்னட் அவர்கள், புலம்பெயர்ந்த தமிழரின் கலாசார, பண்பாட்டுச் சிக்கல்களைத் தம் எழுத்துக்களில் பதிவு செய்தவர். இவரின்

சிறுகதைகள் ஆனந்தவிகடன், மங்கையர் மலர், குமுதம் உள்ளிட்ட இதழ்களில் வெளிவந்து நல்ல வரவேற்பைப் பெற்றவை.

அமெரிக்கவாழ்தமிழரானஅமரர்அழகப்பாஇராம்மோகன்அவர்கள், திருக்குறளின்பால் தீராக் காதல்கொண்டு 'திருக்குறள் தமிழ்ப்பண்பாட்டுக் கையேடு' எனும் நூலை உருவாக்கித் தமிழிலக்கியத்தின் பெருமையை உலகுக்குப் பறைசாற்றியுள்ளார்.

தமிழரின் பெருமைமிகு நூலான திருக்குறளின் கருத்துக்களை ஆங்கிலத்தில் கட்டுரை வடிவிலும், வினா-விடை வடிவிலும் நூல்களாக்கி, உலகத்தவர் அனைவரும் படித்தின்புறும் வகையில் படைத்தளித்த பெருமைக்குரியவர் அமெரிக்கவாழ் தமிழரான, முனைவர் இர. பிரபாகரன் அவர்கள். அண்மையில் *"Documentary on Thirukkural"* எனும் பெயரில் திருக்குறள் கருத்துக்களையும் திருவள்ளுவரின் சிறப்பையும் ஆவணப்படமாக்கித் தமிழரின் சிறப்பை உலக மாந்தரும் அறிந்துகொள்ளச் செய்துள்ள இவர், சங்க இலக்கிய நூல்களுக்கு எளிய தமிழில் புத்துரையும் வரைந்துள்ளார்.

அமெரிக்காவின் ஹவாயியில் வசித்துவரும் திருமிகு வைதேகி ஹெர்பர்ட் அவர்கள், சங்க இலக்கியப் பாடல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், முத்தொள்ளாயிரம், பாண்டிக்கோவை போன்றவற்றை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்துள்ளார். கனடாவிலுள்ள தமிழ் இலக்கியத் தோட்டம் எனும் அமைப்பு வழங்கிய மொழிபெயர்ப்புக்கான விருது, தமிழக அரசு வழங்கிய ஜி.யு.போப் விருது உள்ளிட்ட பல விருதுகளைத் தம் தமிழ்ப்பணிகளுக்காகப் பெற்றுள்ளார் இவர்.

அட்லாண்டாவில் வசித்துவரும் இராம்பிரசாத் அரங்கசாமி எனும் இளைஞர், அறிபுனை கதைகள் *(Science Fiction)*, கணிதக் கதைகள் *((Math Fiction)* போன்ற புதிய வகைமைகளில் சிறுகதைகள், புதினங்கள் படைத்துவருகின்றார். இவருடைய 'வாவ் சிக்னல்' எனும் நூல் தமிழக அரசின் பரிசினை வென்ற முதல் அறிவியல் புனைவுச் சிறுகதைத் தொகுப்பு நூலாகும். அறிவியல் புனைவு, கற்பனைப்புனைவு எழுத்தாளர் சங்கத்தின் *(Science Fiction & Fantasy Writers Association - SFWA)* இணை உறுப்பினராகவும் *(Associate Member)* இவர் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த மதிப்புறு அங்கீகாரத்தைப் பெற்ற முதல் தமிழ் எழுத்தாளர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

ஈதொப்ப, அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர்கள் பலர் கவிதை, கதை, கட்டுரை எனத் தமிழிலக்கியத்தின் பல்வேறு வகைமைகளிலும் ஆர்வத்தோடு படைப்புக்களை உருவாக்கி வருகின்றனர்.

இவ்வாறு, புலம்பெயர்ந்துவாழும் தமிழர்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் நவீனத் தமிழிலக்கியத்திற்குத் தனித்துவமான தம் பங்களிப்பை நல்கித் தமிழிலக்கியத்தில் அயலகத் தமிழுக்கு அசைக்கமுடியாத ஓர் இடத்தை உருவாக்கியிருக்கின்றனர் எனில் மிகையில்லை.

6. நீங்கள் ஆற்றிவரும் தமிழ்ப்பணிகள் குறித்துக் கூறுங்கள் ?

நான் வசித்துவரும் லேக்லாந்தில் தமிழ்மன்றத்தை *(Lakeland Tamil Mandram)* உருவாக்குவதற்கு முனைப்போடு செயற்பட்டேன்; இப்போது அம்மன்றத்தில் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டு வருகின்றேன்.

தாம்பா விரிகுடாத் தமிழ்க்கல்விக் கழகத்தில் *(Tampa Bay Tamil Academy – TBTA)* தன்னார்வத் தமிழாசிரியராகச் சில ஆண்டுகள் பணியாற்றினேன்; இப்போது அக்கல்விக்கழகத்தின் புதிய பாடத்திட்ட வடிவமைப்பில் ஆலோசகராக உள்ளேன்.

அமெரிக்கவாழ் தமிழர்களுக்கு இணைய வழியில் சிலப்பதிகாரம், திருமந்திரம் ஆகியவற்றில் தொடர்வகுப்புகளும், தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்குத் தமிழிலக்கண வகுப்புகளும் நடத்தியுள்ளேன்.

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் மேனாள் தலைவர், திரு. நாஞ்சில் பீற்றர் அவர்களின் ஆக்கம் மற்றும் வடிவமைப்பில், ஒவ்வோராண்டும் பேரவை விழாவில் நடைபெறும் இலக்கிய விநாடிவினா நிகழ்ச்சியில் பயிற்றுநராகச் செயற்பட்டு விநாடிவினாவில் பங்குபெறுவோரைப் பயிற்றுவித்து வருகின்றேன்.

*2023*ஆம் ஆண்டு ஜூலை *7, 8, 9* தேதிகளில் சென்னையிலுள்ள செம்மஞ்சேரியில் நிகழ்ந்த *11*ஆவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு, *2024*ஆம் ஆண்டு ஏப்ரல் *5, 6, 7* தேதிகளில் சிகாகோவில் நிகழ்ந்த *5*ஆவது உலகத் திருக்குறள் மாநாடு இரண்டிலும் நேரடியாகக் கலந்துகொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகள் வழங்கியுள்ளேன்.

*2024*ஆம் ஆண்டு ஜூன் *10*ஆம் தேதி, நாமக்கல் பாவை கல்விக் குழுமத்தின் தமிழ்விழாவில் கலந்துகொண்டு, இலக்கிய விநாடிவினாவை நிகழ்த்தினேன். அந்நிகழ்வு மாணவர்கள் இடையேயும் நோக்கர்கள் இடையேயும் பெரும் வரவேற்பைப் பெற்றது.

*2025*ஆம் ஆண்டு, அக்டோபர் *5*ஆம் தேதி வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சங்க இலக்கியச் சொற்பொழிவுகள் எனும் தொடர்நிகழ்வில் நற்றிணை குறித்து விரிவான உரை வழங்கினேன்.

அண்ணா பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், பிஷப் ஹீபர் கல்லூரி, மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச்சங்கம் ஆகியவற்றில் உரைகள் நிகழ்த்தியுள்ளேன். அமெரிக்காவில் தாம்பா தமிழ்ச்சங்கம், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தமிழ்மன்றம் *(*டெலவர்*)*, பாரதி கலைமன்றம் *(*டெக்சாஸ்*)*, தமிழ்மாலை *(*சிகாகோ*)* ஆகியவற்றில் உரையாற்றியுள்ளேன்.

வல்லமை எனும் இணைய இதழின் ஆசிரியர் குழுவிலும், மதிப்பாய்வுக் குழுவிலும் இடம்பெற்றுள்ளேன். மயிலைத் திருவள்ளுவர் தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராக இருந்து அவர்களின் தமிழ்ப்பணிகளுக்கு உதவி வருகின்றேன்.

வட அமெரிக்கத் தமிழ் எழுத்தாளர்களுக்கென, 2025 சனவரியில், தொடங்கப்பெற்ற நடவு (North America Tamizh Writers Organization – NATAWO) எனும் அமைப்பில் துணை ஒருங்கிணைப்பாளராக (Vice Coordinator) பணியாற்றிவருகின்றேன்.

7. உங்கள் எழுத்துப்பணியைப் பற்றிக் கூறுங்கள்?

தினமணியின் இணைப்பான தமிழ்மணி, வல்லமை, திண்ணை, தென்றல்முல்லை, மக்கள் மனம், வணிகக் குரல், சாயல் மின்னல், வாங்க பேசலாம், பண்புடன் உள்ளிட்ட பல இதழ்களில் என்னுடைய கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வெளிவந்திருக்கின்றன.

பன்மணிக்கோவை, அறிவோம் அறிஞர்களை (மின்னூல் - இரு தொகுதிகள்), குறுந்தொகை நறுந்தேன் ஆகிய நூல்களை வெளியிட்டுள்ளேன். செல்சுடர் நெடுங்கொடி எனும் நூல் இப்போது அச்சில் உள்ளது.

8. நீங்கள் இதுவரை பெற்ற விருதுகள் பற்றி?

சிகாகோ பெண்கள் அமைப்பினர் வழங்கிய 'பெண்' விருது, புதுச்சேரி ஒருதுளிக் கவிதை அமைப்பினர் வழங்கிய 'தமிழன்பன் 80' விருது, தமிழ்ப்பட்டறை மகளிர் பேரவை எனும் பன்னாட்டு அமைப்பினர் வழங்கிய 'செந்தமிழ்ச் செல்வர்' விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளேன்.

9. அயலகத்தில் வாழும் தமிழ் பிள்ளைகள் தங்கள் மொழி மற்றும் கலாசார அடையாளத்தைப் பேணுவதற்கு நீங்கள் வழங்கும் பரிந்துரைகள் என்ன?

அயலத்தில் வாழும் தமிழ்க் குழந்தைகள் தங்கள் மொழியை, கலாசாரத்தைப் பேணுவதற்கு அவர்களது பெற்றோரின் முயற்சி முதன்மையானது. நம் சொந்த மொழியை நாம் தாய்மொழி என்றுதான் அழைக்கின்றோம். ஒரு குழந்தை தன் தாய்மொழியை அறிந்திட உதவுபவள் தாய்; அவளே குழந்தையின் முதல் ஆசிரியை. எனவே அயலகத்தில் வாழும் தமிழ்த் தாய்மார்கள் தம் குழந்தைகளிடம், தாய்மொழியான தமிழில்தான் உரையாட வேண்டும். தமிழைக் குழந்தைகளுக்குப் பயிற்றுவிப்பதில் தந்தையும் தாய்க்குத் துணைபுரிய வேண்டும். அப்போது அக்குழந்தைகளின் மனத்தில் தமிழ்மொழி நன்கு பதியும்; அவை சரளமாகத் தமிழில் உரையாடத் தொடங்கும்.

குழந்தைகள் தமிழில் பேசுவதோடு மட்டுமல்லாமல் எழுதவும் படிக்கவும் வேண்டும்; புதிய தமிழ்நூல்களைக் கற்க வேண்டும் என்று விரும்பும் பெற்றோர் அவர்களைத் தம் பகுதியில் இருக்கும் தமிழ்ப்பள்ளியில் சேர்த்துப் பயிற்றுவிக்க வேண்டும்.

பெற்றோரைப் பார்த்தே குழந்தைகள் பலவற்றைக் கற்றுக்கொள்கிறார்கள். எனவே பெற்றோர் தம் வீட்டில் தமிழர் விழாக்கள், பண்டிகைகள் போன்றவற்றைத் தவறாது கொண்டாடுவது, தமிழரின் பாரம்பரிய உடைகளை அணிவது, குழந்தைகளுக்கும் அணிவிப்பது, தமிழர் உணவு வகைகளைச் சமைத்து உண்பது, குழந்தைகளுக்கும் அவற்றை

உண்பிப்பது போன்றவற்றைத் தொடர்ந்து செய்வதன் மூலமும், தம் பகுதியிலுள்ள ஏனைய தமிழ்மக்களோடு இணைந்து தமிழ் விழாக்களைக் கொண்டாடுவதன் மூலமும் அயலகத்தில் வாழும் தமிழ்க் குழந்தைகள் தமிழரின் கலாசாரம், பண்பாடு போன்றவற்றை அறிந்து அவற்றைப் பேணுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

10. அயலகத்தில் பல்கலைக்கழகப் பேராசிரியராகவும் , தமிழ்மீது பற்றுள்ளவராகவும் இயங்கி வருகிறீர்கள். இந்த இரண்டு அடையாளங்களிலும் உள்ள சவால்களை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?

என் நிலையை ஆங்கிலத்தில் சொல்வதானால்...*I am a professor by profession and a Tamil enthusiast by passion.* வார நாள்களில் எனக்குப் பல்கலைக்கழகத்தில் வகுப்புகள் இருக்கும்; அவற்றுக்குத் தயார் செய்வேன். வார விடுமுறை நாள்களைத் தமிழ்ப்பணிகளுக்குச் செலவிடுவேன். எனவே இப்பணிகள் ஒன்றையொன்று பாதிப்பதில்லை. இவ்விரு பணிகளையும் நான் கட்டாயத்தின் அடிப்படையில் செய்யாமல் விரும்பியே செய்வதால் இவை எனக்குச் சவால்களாகவும் தோன்றுவதில்லை. சொல்லப்போனால் வார நாள்களின் உழைப்புக்கும் அலைச்சலுக்கும் இந்தத் தமிழ்ப்பணிகள் இளைப்பாறலாகவும் புத்துணர்ச்சி தருவனவாகவுமே அமைகின்றன என்பேன்.

பன்முகத் திறமைகளின் சங்கமமாகத் திகழும் திருமதி மேகலா ராமமூர்த்தி அவர்கள், தமிழ் மொழி, கல்வி, இலக்கியம் , சமூக சிந்தனை ஆகிய துறைகளில் தனது அளப்பரிய பங்களிப்புகளால் தனித்த அடையாளம் பதித்துள்ளார். தமிழ் ஆர்வலர், கல்வியாளர், பேச்சாளர், கவிஞர், எழுத்தாளர் எனப் பல்வேறு தளங்களில் அவர் வெளிப்படுத்தும் ஆற்றலும் அர்ப்பணிப்பும், இன்றைய தலைமுறைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக விளங்குகின்றன.

அவரது அனுபவங்களும் கருத்துகளும், தமிழ் மொழியின் வளமையையும் சமூகத்தின் மேம்பாட்டையும் நோக்கி நம்மை சிந்திக்கத் தூண்டுகின்றன. "சக்தி" இதழ் வாசகர்களுக்கு அவரது சிந்தனைகளையும் பார்வைகளையும் நேரடியாகக் கொண்டு சேர்க்கும் இந்தப் பேட்டி, நிச்சயமாக ஊக்கமளிக்கும் ஒன்றாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தமிழுக்கும் சமூகத்திற்கும் அவர் செய்துவரும் சேவைகள் மேலும் விரிந்து, எதிர்காலத் தலைமுறைகளுக்கும் பயனளிக்க வேண்டும் என்ற நல்வாழ்த்துகளுடன், இந்தப் பேட்டியை வாசகர்களின் கரங்களில் பெருமையுடன் ஒப்படைக்கிறோம்.

-பேட்டியாளர்
மேனகா நரேஷ்
நியூ ஜெர்சி

கைகாட்டி மரம்

வந்து வந்து மோதும்
தண்டவாள இசையில்
பயண நினைவுகள்
கண்ணுக்குள் நுழைந்து
கருத்தில் உரசிச்சென்ற
முகங்கள் எங்கோ
பனி மூடிய மலைகளாய்
விரிந்திருக்கும் நிலப்பரப்புகளில்
நிமிர்ந்திசைக்கும்
மனத்தின் ஸ்வரங்கள்
கடந்துபோகும்
ஒவ்வோரு பெட்டிக்குள்ளும்
ஆயிரமாயிரம் நிறங்களில்
வெளிர் கனவுகள்
கண்டும் காணாமல்
எதையும் கொள்ளாமல்
இருப்பது தான் அதன்
இயல்பின் இனிமை
கடந்து சென்ற
ரயிலின் அதிர்வில்
ஆடி நின்றாலும்
ஒரு பறவையின்
அமர்வு ஏந்தி அங்கேயே
அசைவற்றதாய்
இனி அடுத்து வரும்
ரயிலின் காலடிக்காய்
ஒரு காத்திருப்பு
இதுவும் தவமென
தனித்த இருத்தலில்
இப்புவியில்
கைக்காட்டி மரத்தின் பயணமும்

-இரம்யா ஈடராஜன்

கணியான் கூத்து

தமிழ் மாமணி புலவர், பூங்கொடி பராங்குசம்

கணியான் என்னும் பழங்குடி இனத்தவரால் நடத்தப்பெறும் ஆட்டமே கணியான் கூத்து எனப்படும். இசக்கி அம்மன், சுடலைமாடன், பிச்சைக்காலன், செங்கிடாக்காலன் போன்ற சிறுதெய்வங்களின் கோவில்களில் கொண்டாடப்பெறும் திருவிழாக்களில் நடைபெறும் பாடல், ஆடல் நிகழ்ச்சிகளில் கணியான் கூத்தும் ஒன்றாகும். இக்கூத்தின் அடிப்படைக்கு இசையே முதன்மையதாகும். இந்நிகழ்வில் கிராமிய இசையும், கருநாடக இசையும், கல்யாணி, முகாரி, தோடி, பூபாளம், நாட்டை, பைரவி போன்ற பண்களும் விரவிப் பாடுவதால் ஆட்டமும் காண்பவர்களைக் களிகொள்ளச் செய்யும்.

கணியான் கூத்துப் பற்றிய இத்தகைய நிகழ்வுகளை முக்கூடற்பள்ளு, விறலிவிடு தூது போன்ற சிற்றிலக்கிய வகை நூல்களில் காணமுடியும். ஒரு கதையை எளிமையாக, இசைவடிவில் பாடிச் சொல்வதே கணியான் கூத்தின் அடிப்படையாகும். அவ்வாறு இசையும், கதையும் ஆடலும் கொண்டு அமையப்பெறும் இந்நிகழ்ச்சி, உயிரோட்டமான நிகழ்வாகவே காணும் வகையில் அமைவது இக்கூத்தின் சிறப்பாகும்.

தமிழ்நாட்டில் வாழும் தென்பகுதியைச் சேர்ந்த மக்களால் பெருமளவில் நடத்தப்பெறும் திருவிழாக்களில் விரும்பிக் காணும் கலைகளில் ஒன்றே இக்கணியான் ஆட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் சுட்டிக்காட்ட வேண்டிய தெய்வம் சுடலைமாடன் என்பது. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சீவலப்பேரி என்ற ஊரின்கண் வீற்றிருக்கும் சுடலைமாடன் உருவம் மிகவும் கம்பீரமானது. துடியான தெய்வம் சுடலைமாடன் என்பதைக், "காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளம் கவர் கள்வன்" என்று திருஞான சம்பந்தர் தம்முடைய நூலில் சுடலையைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்."சீவலப்பேரிக்குள் யாருக்கும் பணியான் கணியான் " என்று சொல்லப்படும் வழக்கொன்றுண்டு. இப்படிப்பட்ட பெருமையுடைய சுடலைத் தெய்வம்தான் தென் மாவட்டங்களின் இடுகாட்டில் காவல் நிற்கும் தெய்வமாகும்.

சுடலைத் தெய்வத்தை மண் , சுண்ணாம்பு, செம்மண் சேர்த்துக் கலந்த சாந்தால் செய்வார்கள். காலம் காலமாக இந்நிலையிலேயே பிறப்பெடுத்த சுடலையின் சிலைகள், காலமாற்றத்தால் தற்போது கற்சிலைகளாகவும் காட்சியளிக்கின்றன.

அம்மன் கோவில்கள் அத்தனையிலும் சுடலைத் தெய்வத்திற்கென்று தனி இடமும் உண்டு.

புதியதாக ஓர் ஊரில் சுடலைமாடனைச் சிலைவடிக்க வேண்டுமென்றால், முன்னதாகச் சுடலைமாடன் குடிகொண்டிருக்கும் கோவிலிலிருந்து மண் கொண்டு வந்துதான் புதிய சுடலைமாடனை உருவாக்குவார்கள். கீழ்ப்பாகம் அகலத்துடனும் மேலே செல்லச் செல்லக் குறுகியும் இருக்கும் சுடலையின் உருவம். தலையோ ஒரு பெரிய கருநிறம் கொண்ட பாறையின் வட்டமான பாகத்தைப் போன்றிருக்கும். இச்சிலையானது மழையிலும், வெயிலிலும் மேற்கூரையின்றித் திறந்த நிலையிலேயே காணப்பெறும்.

தமிழர் இசைக்கருவிகள் - மகுடம்
மகுடம் - பூவரசு, வேம்பு, மஞ்சணத்தி மரங்களில் வளைவு செய்து பெண் எருமைத் தோலால் போர்த்தப்படும். தென் தமிழகத்தில் கணியான் கூத்திலும் நாட்டார் தெய்வ கோவில்களிலும் இசைக்கப்படும்.

சுடலைத் தெய்வத்திற்கு மற்ற தெய்வங்களுக்கு நடப்பது போன்று அன்றாடம் பூசை என்பது கிடையாது. வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் சுடலையின் உடலுக்குக் களபம் என்னும் கலவைச் சாந்து பூசி, முகத்திற்கு மஞ்சள் தடவி , அரளிப்பூ அல்லது செவ்வந்திப் பூக்களால் மாலையிட்டுத் தலையில் பிச்சிப் பூவைப் பரிவட்டமாகக் கட்டி, அரைத்த சந்தனத்தால் கண், மூக்கு வைத்து அலங்கரிக்கப்படும்.

சுடலை அலங்காரம் முடிந்தபின், கோழியோ அல்லது ஆடோ உயிர்ப்பலி கொடுக்கும் பூசை நடைபெறும். இதில், குறிப்பாகப் பெட்டைக் கோழியையோ அல்லது பெண் ஆட்டையோ என்றுமே உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கமில்லை. சேவற்கோழியை உயிர்ப் பலியாக்கினால் சுடலைக்குக் கறி படைப்பதில்லை.

எத்தனைக் கோழிகள் அல்லது எத்தனை ஆடுகள் அறுத்தாலும் மாடனுக்குப் பாலும் அடையுமே பிடித்தமான படையலாகும். பச்சரிசி மாவுடன் சர்க்கரை, வாழைப்பழம் சேர்த்துப் பிசைந்து நெய்விட்டுச் சிறிய அடைகள் சுட்டுப் படைப்பார்கள். குடிப்பதற்குப் பசும்பால் காய்ச்சிக் குவளைகளில் வைப்பார்கள். இது ஒரு கட்டுப்பாடான விழாவாகும். சேவலை உயிர்ப்பலியாக்கினால் கூட்டாகச் சேர்ந்து உண்ண மாட்டார்கள். காரணம், அவ்வாறு கூட்டாகச் சேர்ந்து சேவல் கறியை உண்டால் , உறவில் விரிசல் கண்டு ஒற்றுமை குறைந்து விடும் என்று மக்கள் நம்புவார்கள்.

திருவிழாக்களில், முதல்நாள் நிகழ்வாகக் காப்புக் கட்டும் நிகழ்ச்சியும் மறுநாள் கைவெட்டு நிகழ்ச்சியும், அன்று நள்ளிரவு திரளைக்கூத்து நிகழ்ச்சியுமாக நடந்து முடிந்த பின்னரே, கணியான் ஆட்டம் தொடங்கும். இதில் திரளை வீசும் நிகழ்ச்சி என்பது, முரசு அடிப்பவர், சாமியாடி, கணியான் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து சுடுகாட்டில் சுடலைத் தெய்வத்தின் முன் ஆடு, கோழி முதலியவற்றைப் பலியிட்டு, அவற்றின் குருதியைச் சோற்றில் கலந்து வானம் பார்த்து மேலே நோக்கி வீசுவர். இதுவே திரளை வீசுதல் என்பதாகும்.

கணியான் ஆட்டம் நடத்துவதற்கு ஆட்டக் குழுவினர் கூட்டமாகச் சேர்ந்து வருவர். இவர்கள் பகுதிப் பகுதியாகத் தம் வேலைகளைச் செய்வர். இவர்களில் மிகவும் முதன்மையானவர் அண்ணாவி என்று சொல்லக் கூடியவர். இவர் ஒரு கதையை எளிமையான இசைவடிவில் பாடி இடையிடையே விளக்கம் சொல்வார். இவர் பாடியதைப் பின்பாட்டாகப் பாடுதற்கு ஒருவர் துணைநிற்பார். இந்தப்

பாடலுக்கு இருவர் மகுடம் வாசிப்பார்கள். மகுடம் என்பது, வட்ட வடிவினதாகிய தப்பட்டை என்பதாகும். எருமைக் கன்றின் தோலைத்தான் இந்தத் தப்புக்குப் பயன்படுத்துவார்கள். மகுடம் வாசிப்பவரில் ஒருவர் உச்சமாகவும், மற்றொருவர் மந்தமாகவும் வாசிப்பார்கள். சில நேரங்களில் மகுடம் வாசிப்பவர்களும் அண்ணாவியுடன் சேர்ந்து பாடுவார்கள். அப்படிப் பாடும்போது இடையிடையே இரண்டு ஆண்கள், பெண் வேடமிட்டு ஆட்டம் ஆடுவார்கள்.

இந்தக் கூத்து அல்லது கச்சேரி நடைபெறும்போது , கணியான் பாடுவதற்கும், ஆடுபவர்கள் ஆடுவதற்கும் போதுமான இடம்விட்டுத் திருவிழாவைக் காண வந்தவர்கள் சுற்றி அமர்ந்துகொண்டிருப்பார்கள். மகுடக்காரர்கள் பனை ஓலைகளைக் கொளுத்தி, அவை சத்தத்துடன் வெடித்து எரியும்போது, உச்சத்தையும், மந்தத்தையும் கூடாக்கிச் சுதி சேர்ப்பார்கள். பிறகு இடுப்பில் மேளத்தை வைத்து விழாமல் கட்டிக்கொண்டு ஒரு கையை மேல் பக்கமாக வைத்தும், மற்றொரு கையை நேரடியாக வைத்தும் மேளத்தை வாசிப்பர். இடையே ஆண்வேடம் பூண்ட கணியான்கள், குனிந்தவாறே சுழன்று ஆடும்போது அங்குப் பரப்பப்பட்டிருக்கும் மணல், முன் வரிசையில் அமர்ந்திருப்பவர் மீது வாரி இறைக்கப்படும். அந்த அளவிற்கு ஆடுபவர்கள் சுழன்று, சுழன்று ஆடுவது அனைவரின் உணர்வைத் தூண்டுவதாக அமையும்.

அண்ணாவி பாடும் பாடல் பெரும்பாலும் சிறுதெய்வங்களின் கதைகளாகவே இருக்கும். அவை வழி வழியாகப் பேசப்பட்டுப் புழக்கத்திலிருக்கும் கதைகளாகவே பெரும்பாலும் இருக்கும். அக்கதைகள் புலமாடன் வரலாறு, சப்பாணிமாடன் வரலாறு, முண்டன்சாமி வரலாறு, சுடலைமாடன்சாமி வரலாறு, கரடிமாடன்சாமி வரலாறு, நீலி அம்மன்கதை, முத்தாரம்மன் கதை, முத்துப்பட்டன் கதை போன்ற கதைகளை இசைப்பாடல்களாக எளிதில் மக்களைச் சென்றடையும் வகையில் பாடப்படுகின்றன.

நம்மைச் சுற்றிப் பல பண்பாட்டுச் சிதறல்கள் இன்றும் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருவதற்கு இப்படிப்பட்ட திருவிழாக்களே சான்றுகளாக அமைகின்றன.

விமலா எங்கே போகிறாள்?

உமா தமிழ்
சென்னை

“என்ன ஆச்சு அவங்களுக்கு"?

மன நல டாக்டர் கேட்க

“மேடம் . ரெண்டு மாசமா அவ நார்மலா இல்லை. உளறல். சாமான்களை தூக்கி வீசறது இப்படி. பைத்தியம் போல நடந்து க் கிறா. நீங்க நல்ல மன நல டாக்டர் னு கேள்வி பட்டு அதான் அழைஇத்து வந்தேன் "என்றார் நடராஜன்.

“ஓ. அப்படியா எவ்வளவு நாளா இப்படி இருக்காங்க. மிஸ்டர் நடராஜன்"

“ரெண்டு மாசங்கள் டாக்டர்"

“உங்களுக்கு கல்யாணம் எப்போ ஆச்சு. விவரமா சொல்லுங்க"

“எங்களுக்கு கல்யாணம் ஆகி 25 வருஷங்கள் ஆகிறது. 14 வயசுல பொண்ணு 10வது படிக்கிறாள். பையன் சின்னவன் 7 வது படிக்கிறான். கூட்டு குடும்பம். என்னோட அப்பா 70 வயது அம்மா 65 வயசு. எல்லோரும் ஒன்னா இருக்கோம்.

நான் ஒரு பிரைவேட் கம்பெனி யில் பெரிய போஸ்ட் ல இருக்கேன். சொந்த வீடு. கார் வசதி. அவளுக்கு ஒரு குறையும் வைக்க ல" என்றார்.

“அப்படியா. ஏம்மா. உன் பேர் என்ன"?

டாக்டர் கேட்க

பதில் சொல்லல.

“அவ பெயர் விமலா. வயது 45 டாக்டர். எனக்கு 48.” இது நடராஜன்

“என்னமா உனக்கு குறை விமலா"? டாக்டர் கேட்க

தாரை தாரை யாக விமலா கண்ணீர் கொட்ட,

“ஏம்மா அழறே"?

பதில் வரல.

"நடராஜன் நீங்க வெளிய போய் வெயிட் பண்ணுங்க. நான் தனியா இவங்க கிட்ட பேசறேன் "

"நான் கூப்பிடும் போது வாங்க "

"டாக்டர் .எதுக்கு" னு நடராஜன் எச்சிலை விழுங்க,

"அதெல்லாம் ஒன்னும் இல்லை. ஒரு மன நல டாக்டர் என்கிற முறையில் இது நார்மல் பார்மலிட்டி கேள்விகள் தான் "

நடராஜன் வெளியே போனார்.

அந்த மன நல மருத்துவர். சிவகாமி. சென்னையில் பிரபலபான அந்த மன நல மருத்துவ மனையில் இவங்களும் ஒரு டாக்டர்.

விமலா சொன்னதை கேட்டு வெல வெலத் து போய்விட்டார்.

20 வயதில் திருமண ம். பெரியவர்கள் பார்த்து முடித்த திருமண ம். விமலா அவங்க பெற்றோரு க்கு ஒரே பெண். நடராஜன் படித்தவன். வசதி. ஒரு தங்கை. அப்பா அம்மா இப்படி கூட்டு குடும்பம்.

திருமண வா ழ் க்கை முதல் ஒரு வருடம் நல்லா தான் போயிருக்கு

பின்னர் விமலாவுக்கு குழந்தைகள் பிறக்க

நடராஜன் வேலை விஷயமா அடிக்கடி வெளியூர் மற்றும் ட்ரான் ஸ் பரில் போக விமலாவுக்கு தான் எல்லா பாரமும்.

காலை யில் எழுந்து இரவு 11 மணி வரை வேலை. ரெஸ்ட் இல்லை.

காலை யில் எல்லோருக்கும் காபி குடிக்க தயார் செய்து அப்புறம் பிரேக் பாஸ்ட். நடராஜனுக்கு எல்லாம் செய்து சாப்பாடு கட்டி தரனும். பசங்களு க்கு எல்லாம் பிரேக்

பாஸ்ட் பின் சாப்பாடு. மாமனார் மாமியார் கொஞ்ச கூட அசரமாட்டாங்க. அவங்களுக்கு பிடித்தாற் போல செய்து டைனிங் டேபிளில் சர்வ் செய்து பின் சாமான் துலக்கல். மத்தியானம் அவங்களுக்கு சாப்பாடு செய்து உபசரிக்க. பின்னர் துணி துவைக்க. மாதம் மாதம் போன் பில், எலக்ட்ரிகல் பில், பேப்பர் பில் தினம் மார்க்கெட் போய் காய்கறி. அப்புறம் ப்ரொவிசன் வாங்க. இப்படி எல்லா சுமை." நீ சாப்டியா?உடம்பு எப்படி இருக்கு "என கேட்க ஆள் இல்லை. அப்பா அம்மா கிட்ட பேச கூடாது. அவங்க ஊரு க்கு போக கூடாது.

ஆறு மதத்திற்கு வந்து டேரா போடும் நாத்தனார் குடும்பத்திற்கு எல்லாம் செய்யணும். இந்தியாவில்

எல்லா வீட்டுலபெண்களுக்கும் நடக்கிறது தான்.

இதை பற்றி எதுவும் தெரியாது போல இருக்கும் நடராஜன். விமலா பசங்கள். கொடூரம் காட்டும் மாமனார் மாமியார்.

25 வருடங்கள்

என்ன சித்ராவத்தை இது!

எப்படி விமலா தாங்கி கொண்டாள்!?

டாக்டருக்கு எப்படி அவளை தேற்று வது னு புரியல

அந்த நரகத்தில் இருந்து அந்த பெண்ணை காப்பாற்ற வேண்டும் என தோன்றியது.

ஒரு முடிவுடன் நடராஜனை கூப்பிட்டார்.

நடராஜன் வந்தார். விமலா வை பார்த்தார். எந்த வித சலனும் இல்லை.

"நடராஜன் அவங்களை பல தடவை கேட்டுட்டே ன். ஒன்னும் சொல்ல மாட்டாறாங்க. அழறாங்க."

"இப்படித்தான் பண்றா அவ

. குணப்படுத்த என்ன வழி டாக்டர்?

உங்களை பெரிதும் நம்பி இருந்தேன்."

"நடராஜன். அவங்களை மருந்து மாத்திரைகள் கொடுத்து குணம் படுத்த முடியாது"

"அப்ப எப்படி"?

"நல்ல கவுன்சலிங் கொடுக்கிற மருத்துவ மனை. 3 அல்லது 4 மாசங்கள் அங்கே தங்கி இருந்து வீட்டு சூழ்நிலை இல்லாமல் நல்ல பசுமை நிறைந்த இடம் இது போல இடத்தில் தங்க வைத்து குணப் படுத்த முடியும் என எனக்கு நம்பிக்கை இருக்கு"

"அப்படியா டாக்டர். உங்களுக்கு தெரிந்த அப்படி ஒரு கவுன்சில்லிங் இடம் சொல்லுங்க"

"எனக்கு நேரிடையாக தெரியாது. தாம்பரத்தில் அப்படி ஒரு இடம் இருக்கு. போன் நம்பர் தரேன். விசாரித்து சேர்க்க ட்ரை பண்ணுங்க"

"தேங்க்ஸ் டாக்டர்" என்று சொல்லி விட்டு விமலாவை கூட்டிட்டு போனார்.

விமலா கண்களால் சிவகாமிக்கு நன்றி சொன்ன போது அவளுடைய முகதில் ஒரு தெம்பு தெரிந்தது

"இரண்டு மாதங்கள் ஓடி போச்சே. இதற்கு பிறகு விமலா என்ன ஆனாள் என தெரிந்து கொள்ள சிவ காமிக்கு ஆவல் இருந்தும் நடராஜனி டம் கேட்க தயக்கம் இருந்தது.

மேலும் விமலாவுக்கு தன்னால் உதவ முடியவில்லை எனவும் ஒரு குற்ற உணர்ச்சி வேறு.

தாம்பரம் மன நல காப்பகத்திற்கு விசாரிக்கவும் தயக்கம் வேறு.

"டாக்டர் உங்களுக்கு போன்" என ரிசப்ஷன்ல இருந்து கொடுக்க

அந்த கால் தாம்பரம் மன நல காப்பகத்திடம் இருந்து வந்து இருக்கு என தெரிந்து உடனே பேச

"வணக்கம் டாக்டர் நான் சாவித்திரி இங்கே தாம்பரம் மன நல காப்ப கத்தின் டாக்டர் மற்றும் நிர்வாகி பேசறேன் "

"வணக்கம் சொல்லுங்க."சிவகாமி தன்னை அறிமுகம் செய்து கொள்ள சாவித்திரி தொடர்ந்தாங்க

"நீங்க ரெகமெண்ட் செய்த விமலா னு ஒருத்தர் இங்கே இருக்காங்க அவங்க வந்த இரண்டு மாதங்கள் ஆகிறது

அவங்க முழுவதும் தேறி பழைய நிலை வந்துட்டாங்க. நல்ல பெண்மணி"

"அவங்களால் இந்த காப்பகத்திற்கு பெருமை. அவங்களால் பல இளம் துளிர்கள் வளர ஆரம்பித்து இருக்கு" என்றார்

"ஒன்னும் புரியல டாக்டர் "

"இருங்க. விமலாவே உங்ககிட்ட பேசறேன் சொன்னாங்க இதோ லைன் கொடுக்கறேன். பேசுங்க"

"டாக்டர் நான் விமலா. ஞாபகம் இருக்கா. "

"இருக்கு மா. உன்னை பற்றி தான் இந்த ரெண்டுமாசமா நினைத்து கொண்டு இருந்தேன்."

"டாக்டர். உங்களால் நான் ஓரளவு சரியா இருக்கேன்"

“என்னால"?

நீங்க சொன்னதால் அவர் இந்த மன நல காப்பகத்தில் சேர்த்தார். இந்த காப்பகத்துடன் இணைந்து ஒரு பெண்கள் சிறுமி காப்பகம் இருக்கு அதையும் சாவித்திரி அம்மா தான் பார்த்து கொள்ளறாங்க. ஒரு ஆபீஸ் கிளெர்க், ஆபீஸ் வேன் டிரைவர் ரெண்டு வாட்ச்மேன் இவர்கள் தான் ஆண்கள். மற்ற படி இங்கே எல்லோரும் பெண்கள் இங்கே நாங்க ஒரு குடும்பம் போல இருக் கோம்"

“ஆதரவற்ற சிறுமிகள் 6 வயது முதல் 15 வயது வரை 20 பேர்கள் இருக்காங்க"

“ஓ.ரொம்ப கேட்க மகிழ்ச்சி யா இருக்கு"

“போன புதிதில் கொஞ்சம் சிரமம் பட்டேன்.நாள் ஆக ஆக ஒரு சுதந்திரம் உணர்வு பிறந்தது. அதை வெளி கொணர்ந்தவங்க சாவித்திரி அம்மா"

கல்யாணத்திற்கு முன் நான் சுதந்திரமா இருந்தவள். நல்லா கதை கவிதை எழுதுவேன். பாடுவேன். டானஸ் தெரியும் நல்லா ஓவியம் வரைவேன். இப்படி பல கலைகள் தெரிந்தும் என் திருமண வாழ்க்கைக்கு பிறகு எல்லாம் போச்சு. எதுவும் செய்ய கூடாது. ஒரு அடிமை மாதிரி நடத்த பட்டேன்.

என் வாழ்ககை நரகமானது. இதிலி ருந்து மீள எங்காவது ஓடி போய் இருக்க வேண்டும். அல்லது தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணியவள் "

“என் பெற்றோர்களுக்ககாக அதை செய்ய வில்லை மேடம்"

“உண்மை தான்"

“இங்கே வந்தவுடன் என் நிலை தெரிந்து சாவித்திரி அம்மா என்னை சுதந்திரமா விட்டாங்க. அப்புறம் எழுதினேன். பத்திரிகையில் வெளி வந்தது. படம் வரைய போட்டியில் வென்று பரிசு கிடைத்தது. இங்கே யுள்ள சிறுமிகளுக்கு பாடல்கள் சொல்லி தரேன். ஆர்ட். டான்ஸ் சமையல், யோகா இதெல்லாம் சொல்லி தரேன். நடனம் கற்று கொண்ட மாணவி பள்ளயில் நடனம் ஆடி பரிசு வென்றாள். அதே போல சமையல் பற்றி யூ டியுபூ மூலம் ரெஸிப்பி போட்டேன். விமலா சமையல் சேனல் ஹிட்"

“கேட்கவே ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு. விமலா ஒன்னு கேட்கறேன்.

இதெல்லாம் கேள்வி பட்டு உன்னை கூட்டிட்டு போக உங்க வீட்டுல வரலியா"

“வந்தாங்க. என்ன கேட்டாங்க தெரியுமா. பையன் நீ நல்லா ஓவியம் வரைவியாமே. எனக்கு சொல்லிக்கொடு. பொண்ணு அம்மா எனக்கு டான்ஸ் சொல்லிக்கொடும்மா. நான் பெரிய டான்சர் ஆகணும்

என் வீட்டுகாரர் நல்லா கதை எழுதறே. என் பிரண்ட்ஸ் உன்னை பாரர்க்கணும்னு சொன்னாங்க.

மாமனார்,மாமியார் உன் சமையல் பற்றி உலகமே பேசுது. இனி நீ வீட்டுக்கு வந்தா தினம் வித விதமான சமையல் தான். வாம் மா "

" இப்படியா சொன்னாங்க"

"ஆமாம் டாக்டர். நான் ஒரே வார்த்தையில் கேட்டேன்"?

"மேடம். இவங்கல்லாம் யாரு. எதுக்கு வந்து இருக்காங்க" னு

மேடம் சாவித்திரி திகைக்க,

குடும்பம் வெல வெலத்து போய்

"என்ன மேடம் இவ சரியாகிட்டாள் னு கூட்டிட்டு போக வந்தா பைத்தியம் அப்படியே தான் இருக்கு" சொல்லிக்கொண்டே போனார்கள்

"ஏன் அப்படி சொன்னே விமலா"?

"எஸ் டாக்டர் எனக்கு அங்கே போய் இருக்க பிடிக்கல. அதான் அப்படி சொன்னேன். எஞ்சிய வாழ்நாள் முழுவதும் இங்கேயே இருந்து இந்த பெண்களை நல்ல படிக்க வைத்து ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு வரணும். அவர்களுக்கும் என்னை விட்டு பிரிய மனமில்லை. "அம்மா அம்மா' னு கூப்பிட்டு என்னை அன்புடன் பார்த்து கொள்ளுதுங்க. சாவித்திரி மேடம் கிட்ட சொல்லி எனக்கு வர வருமானம் முழுவதும் இந்த காப்பகத்திற்கு தான். என்னை அனுப்பாதீங்க மேடம் "என்றதும் அவங்களுக்கு புரிந்து போய் என்னை கட்டி அணைத்து கொண்டாங்க நான் செய்தது சரி தானே டாக்டர்"

"விமலா யூ ஆர் கிரேட்"

"வீட்டுக்கு போகணும் னு தோன்றினால் அவங்களை பார்த்து விட்டு வருவேன் "

நான் சொல்வதற்கு ஒன்னும் இல்லை.

"உன்னை போல தைரியம் எல்லோருக்கும் வருமா தெரியல"

"அந்த தைரியம் 20 வருடங்களுக்கு பிறகு தான்"

"ஒன்னு கேட்பேன். இதான் வாழ்க் கை முறையா. இப்படியே இருந்திட முடியுமா. உனக்கு குழந்தை கள் இருக்காங்க அவங்களுக்கு கல்யாணம் இதெல்லாம் செய்யவேண்டமா"?

முடிக்கும் முன்

இடை மறித்து,விமலா

“அதே தான் நான் கேட்க்கிறேன். கல்யாணம் குழந்தை குட்டி அவங்களுக்கு கல்யாணம் தாத்தா பாட்டி பேரன் பேத்தி.

இதுல என்ன சுகம் இருக்கு. என்னோட சுதந்திரதுக்கு இது தடை னு சொல்ல மாட்டேன். என் உணர்வு களுக்கு மதிப்பு அளித்து இருந்தால் நான் இதையும் மற்றும் குடும்பத் தையும் பார்த்து கொண்டு இருந்து இருப்பேன ”

“இப்போ யார் செய்வாங்க ”

“அவர் பார்த்து கொள்வார். அவங்களும் தங்கள் வாழ்க்கையை நிர்ணயம் செய்ய மன பக்குவம் வரும். வந்தாச்சு”

“எப்படி லாம் யோசிக்கற. இரும்பு மனுஷி”

“அப்படிலாம் இல்லை டாக்டர். உங்களுக்கு பிடித்த வாழ்க்கை வா ழுங்கள் என சொல்கிறேன்”

“இது பொறுப்புகளை தட்டி கழிக்கற செயல் அல்லவா”

“அப்படி இல்லை டாக்டர். பெண் சுதந்திரம் னு பேசினால் போதாது. அது நிஜ வாழ்க்கைனு வரும் போது தான் அதன் கடுமையான துயரம் எல்லாம் தெரிய வரும்”

“ம். புரிகிறது விமலா வாழ்த்துக்கள்”

“உங்களை பார்க்க வருவேன் டாக்டர்”

“அதற்கு அவசியம் இருக்காது விமலா. நானே அங்கே வருவேன். உங்க காப்பகத்தில் ட்ரீட் மென்ட் எடுக்க.”

“என்ன சொல்றீங்க டாக்டர்.”?

விமலா கேட்க

போனை வைத்து விட்ட சிவகாமி யின் மனசுல இருந்த வார்த்தைகள்

“உன்னை போல தான் நானும் விமலா. நீ சரியான நேரத்தில் போய் சேர்ந்துட்ட.

நான் மன நல மருத்துவ டாக்டர் என்றாலும் என் குடும்ப வாழக்கை உன்னோடது போல தான். அதான் அங்கே வருவேன் என சொன்னேன்”

விமலாவுக்கு இப்போ கேட்க போவது இல்லை.

God is Love

If only I had the power
To sense a fake smile
If only I could feel
The coldness in a handshake
I would have saved myself
From countless heartaches
I would never have given excuses
To miss the fun
I would not have chosen solitude
Not in a million years!
For this is how anguish fights back
Through silence , closing all doors
So profound is the message
That it is hardly understood
By hearts pumping arrogance
In every throbbing beat!
If only I could preach
To every smirk that I see
All I would say is be as welcoming
As all the mighty seas
Be so generous, be so kind !
The sea never rejects the rivers
It neither tells them apart
Nor it judges their worth
This is the language of love
That is love's alchemy
Even the sacred scriptures
Undoubtedly say " God is love"
I pray that condescension reads!

Menaka Naresh

இப்போதுதான்...

சசிகலா விஸ்வநாதன்

ஸ்பூர்த்தி யோசனையில் ஆழ்ந்தாள்.அவளால் வீட்டில் இருக்க இயலவில்லை. வீட்டை விட்டு எங்கே போவது? தன் வீடு தவிர வேறு எங்கேயாவது போக முடியுமா; ஒருவரால்?முன்னும் பின்னும் நினைவலைகள் அவளைப் பந்தாடின; இல்லை.. இல்லை.. பழைய நினைவுகள் அவளை ஆழத்தில் போய் அமிழ்த்தின. ஆழ் நினைவுகள் எல்லாம் அம்மா ஜயத்தைச் சுற்றியே இருந்தன. 'அம்மா! அம்மா!' என்றே மனம் அரற்றியது.

ஏதேதோ தெளிவில்லா வினாக்கள் ; விடைகள் இல்லாமல் தவித்தன. கையில் இருந்த காகித உறை பாறாங்கல் போல் கனத்தது. அழுதால் மனபாரம் குறையலாம்; ஆனால் மனம் உறைந்து கிடக்கிறதே!எந்த உணர்வுக்கும் இடமின்றி வெறுமை வெறும் வெறுமையில் மனம் துவண்டு துவள்கிறது. சோர்வினால் நொந்து போனவளை, உறக்கம் ஆட்கொண்டது.

** ** ** ** ** ** ** **

இன்று அப்பாவும் அம்மாவும் திருமண நிகழ்வு ஒன்றுக்கு அதிகாலையில் தாம்பரம் சென்றிருந்தார்கள். காலை தாமதமாக உறக்கம் கலைந்து எழுந்தவள்; அம்மா ஜயம் தயாரித்து வைத்திருந்த டிகாஷனில் பாலை நுரை பொங்க காய்ச்சி. அம்மா சொன்ன அளவில் சர்க்கரையை சேர்க்க நறுமண காஃபி தயார். காஃபி நாவுக்கு சற்று ஏறக்குறைய சுவையாக இருந்தாலும், மனதிற்கு அந்த காஃபி சேர்மானதாய் இல்லை. அம்மா போல் தனக்கு ஒரு காஃபி கூட தயாரிக்கத் தெரியவில்லை; என்பதை ஒத்துக் கொள்ள வேண்டியிருந்தது...சற்று வெட்கத்துடன்.

இன்றையதினசரிதாளுடன்காஃபிஅருந்துவது;அவள்தன்அப்பாசாரங்கனிவிடமிருந்து வந்த பழக்கம். காலையில் மூவரும் ஒன்றாக அமர்ந்து தினசரி செய்திகளை அலசிக்கொண்டும், அன்றைய நிகழ்வுகளுக்கு திட்டம் போடுவதிலும் பதினைந்து நிமிடம் செலவழிப்பது, அவர்களுக்கு மிகவும் பிடித்த விஷயம். இன்று தனியே காஃபி குடிப்பது, ஒரே போர். இப்படி நினைத்த நொடியில் அவள் ஃபோன் சிணுங்கி யது. காணொளி அழைப்பில் அப்பாவும் அம்மாவும். ' என்ன! கண்ணா! காஃபி ஆச்சா? பேப்பர் பார்த்துக் கொண்டு இருக்கிறாயா' என்று அப்பா விசாரிக்க; அம்மா' ஹாட் பேக்கில் இட்லியும் சாம்பாரும் உள்ளது ஃப்ரிட்ஜில் சட்னி உள்ளது. நேரத்துக்கு சாப்பிடு. மதியம்

சாப்பாட்டுக்கு நான் ஏற்கனவே ஆர்டர் கொடுத்து விட்டேன். ஒரு மணிக்கு டெலிவரி ஆகிவிடும். மாலை காஃபி நேரத்துக்கு நாங்கள் வந்து விடுவோம். பத்திரமாக இரு. கதவை நன்றாக பூட்டிக் கொண்டு கவனமாக இரு, ' என்று அம்மா ஜயம். மூச்சு விடாமல் பேசினாள். ஸ்பூர்த்தி ' சரிம்மா! நான் பார்த்துக்கொள்கிறேன்.' என்று சொல்லி ஃபோன் அழைப்பைத் துண்டித்தாள்.

தனியாக இருப்பது சலிப்பாக இருந்தது. அம்மாவுடன் திருமண நிகழ்விற்கே போயிருக்கலாம்; என்று நினைத்தாள். போயிருந்தால் அது இன்னும் எரிச்சலாய். இருந்திருக்கும். அங்கு அனைவரும் எங்கே வேலை பார்க்கிறாய்? என்ன சம்பளம்? ஜயம்! உன் பெண்ணுக்கு கல்யாணத்துக்கு வரன் பார்க்க ஆரம்பித்து விட்டாயா?' என்று நோண்டி, நோண்டி வம்பு பேசி அவளுக்கு சங்கடத்தை உண்டாக்கி இருப்பார்கள். தனியே வீட்டில் இருப்பதற்கு பதிலாக வசுமதியைப் பார்த்து வரலாம்; என்று யோசித்தவள், அம்மாவுக்கு ஃபோன் செய்தாள்.

அம்மா அலைபேசி அழைப்பை ஏற்கவில்லை. மீண்டும் தொடர்பு கொள்ள முயற்சிக்க, தொடர்பு எல்லைக்கு அப்பால் இருப்பதாக அலைபேசியில் ஒரு பெண் குரல் சொல்ல அவள் எரிச்சல் அடைந்தாள். தொலைக்காட்சியில் ஏதேனும் பார்க்கலாம்; என்று அதை உயிர்ப்பிக்க, தொடர்களை தொடர்ந்து பார்த்து பழக்கமில்லாதவளுக்கு, அவையனைத்தும் மிகவும் செயற்கையான கதையமைப்பும், மிகையான நடிப்புமாக இருப்பதாகப் பட்டது. அலுவலக வேலையிலும் மனம் செல்லவில்லை.

திடீரென ஸ்பூர்த்திக்கு ஒரு எதேர்ச்சியான யோசனையில் தன் பெற்றோரின் திருமண ஆல்பத்தை தேடி எடுத்து பார்க்க ஆரம்பித்தாள். இருபத்தைந்து வருடங்களுக்கு முன் எடுத்த அந்த கருப்பு- வெள்ளையில் இருந்த திருமண ஆல்பம் அவளுக்கு ஈர்ப்பாக இல்லை. அலுப்புடன் அதை அப்புறம் தள்ளினவள் அலமாரியை மேலும் நோண்டினாள்.

அலமாரியின் ஒருபக்கம் தற்காலிக உபயோகத்திற்கான நகைகள் கொஞ்சம் விலையுயர்ந்த உடுப்புகள், பட்டு புடவைகள், இருந்தன. இந்தப் பக்கம்அவளது சிறுவயது போட்டோக்கள் பள்ளியிலும் கல்லூரியிலும் அவள் விளையாட்டிலும் படிப்பிலும் அவள் வாங்கின சர்டிஃபிகேட்ஸ் மற்றும் கோப்பைகளை அம்மா ஜயம் அழகாக அடுக்கி வைத்திருந்தாள்.

அலமாரியின் மேல் தட்டில் அவள் அப்பா சாரங்கனின் வங்கி கணக்கு புத்தகங்கள். வைப்புத் தொகை ரசீதுகள், தபால் அலுவலக கணக்குகளின் விவரங்கள், காசோலை புத்தகங்கள், அவர்கள் இருக்கும் வீடு மற்றும் அவர்களது மற்ற சொத்துக்களின் ஆவணங்களின் நகல்கள் இவற்றை நேர்த்தியாக கட்டி வைத்திருந்தார். இன்னுமொரு ரெக்ஸின் பையில் அவர்களது பாஸ் போர்ட்டுகளை வைத்திருந்தார்.

அந்த அலமாரியில் ஒரு தனி அறை பூட்டப்பட்டு இருந்ததை இப்போதுதான் கவனித்தாள். எத்தனையோ முறை அவள் அந்த அலமாரியில் இருந்து அப்பாவுக்கும்,

அம்மாவுக்கும், வங்கி கணக்கு புத்தகங்களையும், காசோலை புத்தகங்களையும் அவள்தான் எடுத்துக் கொடுப்பாள். இந்த உள் அறையை அவள் கவனித்ததே இல்லை. சொத்து ஆவணங்களுக்குப் பின் இருந்ததினால் ஸ்பூர்த்தியின் கவனத்திற்கு அது வரவில்லை; போலும்.

இப்போது அதை திறந்து பார்க்கும் அவளுக்கு மேலிட; சாவியை தேட ஆரம்பித்தவள், அது ஒரு ' எண் பூட்டு' என்பதை கவனித்ததும், அவளுக்கு ஆயாசமானது. அந்த எண் என்னவாக இருக்கும்!

அவர்கள் தம் தொலை பேசியில் ஸ்பூர்த்தியின் பிறந்த வருடத்தை தான் வைத்திருந்தனர். அவள் தனது அலைபேசியில் எதாவது மாற்றி மாற்றி வைத்துக் கொண்டே இருப்பாள்.

இப்போது என்ன செய்வது? அவர்களின் பிறந்த வருடம், மாதம் , தேதி இவைகளை மாற்றி மாற்றிப் போட்டும், ஒன்றும் வேலைக்காகவில்லை. இவளது பிறந்த வருடம் மாதம் தேதியும் பயனளிக்காத போது; அவளுடைய ஆர்வம் இன்னும் அதிகமாகியது. சாரங்கன் அடிக்கடி சொல்லும் ஒரு வசனம் அவளுக்கு நினைவில் வந்தது. ஒண்ணே ஒண்ணு! கண்ணே ரெண்டு' 1122 ம் பலனளிக்காது போனதில் பதற்றமான ஸ்பூர்த்தி ஆங்கில எழுத்து I ஒன்பதாக வருவதால் 9 என்றும் கண்ணே ரெண்டு என்பதில் 2யும் சேர்த்து 1192 என்ற எண்ணை முயற்சிக்க எண் பூட்டு சமர்த்தாக திறந்து கொள்ள அவளுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அவள் பிறந்த வருடமும் 92 என்பது அவளுக்கு அப்போதுதான் தோன்றியது.

அந்த பூட்டின அறையில் ஒரு பழுப்பு நிற காகித உறையில் சாரங்கனின் கையெழுத்தில் ஆங்கிலத்தில் SPOORTHI எழுதியிருந்ததையும்

பார்த்தாள். செலோஃபேன் டேப் போட்டு ஒட்டப் பட்டிருந்த உறையை எடுத்துக் கொண்டு வந்து இருக்கையில் அமர்ந்தவளுக்கு ; எனோ மனம் படபடத்தது. இனம் புரியா பயம் அவளை ஆட்கொண்டது. தன்னைப் பற்றின ஏதோ ஒரு ரகசியம் அதில் அடங்கியுள்ளது; என்பது மட்டும் அவளுக்குப் புரிந்தது. இப்போது அதை திறந்து பார்க்கும் துணிவு அவளிடம் இல்லை. சோர்வுடன் மேஜை மீது சரிந்தவள் தன்னையும் அறியாமல் உறங்கி விட்டாள். வாயிலில் அழைப்பு மணி விட்டு விட்டு ஒலித்த சத்தத்தில் எழுந்தவளுக்கு அம்மா தன் பெயரைச் சொல்லி அழைப்பது கேட்டது.

வாயில் கதவை திறந்தவளை, அம்மா ஜயம், ' ஏன் இவ்வளவு நேரம் கதவை திறக்க? உடம்பு சரியில்லையா? ஏன் சாப்பிடவே இல்லை? ஆர்டர் கொடுத்த சாப்பாடை டெலிவரி பையன் வாசல் திண்ணையிலேயே வைத்துவிட்டு போயிருக்கான் !" என்று கேட்ட சரமாரியாக கேள்விகளுக்கு' தூங்கிக் கொண்டிருந்தேன்' என்று ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னவள் கையில் இருந்த காகித உறையைப் பார்த்த சாரங்கன் திடுக்கிட்டார். ' இதை ஏன்... எப்படி எடுத்தாய்?' என்று திகைப்புடன் கேட்க, அம்மா ஜயம் அப்போதுதான் அவள் கையிலிருக்கும் காகித உறையைப் பார்த்தாள். ' அட கடவுளே! என்னப்பா இது! '

என்று அங்கலாய்க்க ஆரம்பித்தவளிடம்' எல்லோருக்கும் காஃபி கலந்து எடுத்து வா' என்று சொல்லி மகளுடன் இருக்கையில் அமர்ந்து கொண்டவர் கையில் அந்த காகித உறையைக் கொடுத்தாள், ஸ்பூர்த்தி.

தான் வேண்டுமென்றே அதை எடுக்கவில்லை என்றும், எதேச்சையாக அந்த உறையை எடுத்த நிகழ்வை மகள் சொல்ல, அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.அவர் முகம் பொலிவு மங்கி,கல் போல் உறைந்து இருந்தது. சமையல் அறையிலிருந்து காஃபியுடன் வந்த அம்மா ஜயத்தின் முகம் பிரேதம் போல் வெளுத்துப் போயிருந்தது.

வா! என் அருகில் உட்கார். காஃபியைக் குடி. பிறகு பேசலாம். ' என்றவரின் பேச்சை அலட்சியம் செய்தவள், சன்னல் அருகே போய் நின்று கொண்டு வெளியே பார்வையை செலுத்தியவள், முன் அடர்ந்து படர்ந்து செழித்த கருவேலம் மரம் ஒன்றில் தூக்கணாம்குருவியின் கூடு தொங்கிக் கொண்டு காற்றில் அசைந்து ஆடிக் கொண்டிருந்தது. அதில் இருந்த குஞ்சுகள் இப்போது எங்கே, தாய் பறவையும் தகப்பன் பறவையும் எங்கே.. என்று ஸ்பூர்த்தியின் மனம் பரிதவித்து தேடியது

'காஃபி ஆறிக் கொண்டு இருக்கிறது இங்கே வா! ஜயம்! அவளுக்கு வேறு காஃபி எடுத்து வா' என்று பணித்த சாரங்கன், ' ஏன் அந்த உறையைப் பிரித்து பார்க்கவில்லை?' என்று வினவினார்.' பிரித்து பார்ப்பதாகத்தான் இருந்தேன். உள்ளூர ஒரு நடுக்கமும் பயமும் என்னைத் தடுத்தது. விரும்பா செய்தி அதில் இருக்குமோ,என்ற திகிலில் சோர்வடைந்து உறங்கிவிட்டேன்.' என்று சொல்லும் போதே கண்ணில் நீர் ததும்பிவிட; அதை சூடிதார் துப்பட்டாவால் மறைத்துக் கொண்டாள். அதற்குள் ஜயம் காஃபி கொண்டு வர, அதை வாங்கி நின்றவாறே பருகினாள்.

'இங்கே வந்து அப்பா பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு சாவகாசமாக அதை பார்' என்றார். ஜயம், எதுக்குங்க; இப்ப பழசை எல்லாம் கிளறி விடறீங்க? தேவையா; இப்போது, இதெல்லாம்?' என்று சிடு சிடுப்பாக வேகமாக கேட்டவள்,' ஸ்பூர்த்தி! இருந்த ;இடத்தில் திரும்ப அதைக் கொண்டு போய் வைத்துவிட்டு வா' என்றாள்; கண்டிப்பான குரலில்.. ஆனாலும் அவள் குரலில் ஒரு நடுக்கம் தெரிந்ததை ஸ்பூர்த்தி கண்டு கொண்டதை, சாரங்கன் கவனித்தார். ' விடு ஜயம்! இனியும் அவளுக்கு மறைத்து என்ன ஆகப்போகிறது? இப்போது தெரிவது நன்று. எப்போதும் தெரியாமல் இருப்பது சரியல்ல. நாமாக சொல்லும்

இக்கட்டிலிருந்து நாமும் தப்பி விட்டோம்; என்பது நமக்கு விடுதலை. நாம் வேரில் நீர் விட்டு வளர்க்கவில்லை. அன்பை விட்டல்லவா வளர்த்திருக்கிறோம்! அமைதியாக இரு. எல்லாம் நல்லபடியாக முடியும்.' என்று சொல்லி' மேசை இழுப்பறையிலிருந்து கத்திரிக்கோல் கொண்டுவந்து உறையைப் பிரித்து அவளிடம் கொடுத்தார்.' வேண்டாம்! அப்பா! ' எனக்கு அதை படிக்கும் மன உறுதி இல்லை' என்றவளின் கையில் வைத்து' படி! பயப்படும் படியாக அதில் ஒன்றும் இல்லை' என்றார் சாரங்கன்.

நடுங்கும் கரங்களால் அதை வாங்கினவள், முகம் களையிழந்து போயிருந்தது. அவளை அருகில் அமர்த்திய சாரங்கன், கண்ணை மூடியவாறு அமர, ஜயத்தின் மெல்லிய விசும்பல், கூடம் முழுவதும் பரவியது.

ஸ்பூர்த்தி, 'ஜனனி' என்ற எழுதியிருந்த கோப்பை பிரித்து முழுவதுமாக படித்தாள். பெங்காலியிலும், ஆங்கிலத்திலும் அந்த ஆவணம் இருந்தது. அவளை மூன்று மாதக் குழந்தையாக, அவளை தத்து எடுத்துக் கொண்ட விவரம் அதில் இருந்தது. அதை, ஏனோ அவள் மனம் எதிர்பார்த்தே இருந்ததை, அவளே ஆச்சரியமாக உணர்ந்தாள்.

இவளை தத்து எடுப்பதற்காக, அவர்கள் நான்கு வருடம் காத்திருந்ததையும் அவள் தெரிந்து கொண்டாள்.

அவளை நிமிர்ந்து பார்த்த சாரங்கன், தன்னால் ஒரு குழந்தைக்கு தகப்பனாக இயலாது; என்பதை அறிந்து கொண்டவுடன், ஜயத்தின் விருப்பத்தின் பேரில் அவர்கள் அந்த முடிவு எடுத்ததையும், இதற்காகவே அவர் கல்கத்தாவிற்கு மூன்று வருடம் பணிமாற்றத்தில் சென்றதையும், இங்குள்ள உறவினர் எவருக்கும் இது பற்றி எதுவும் தெரிவிக்க விரும்பாததும் ஒரு காரணம்; என்றும் அதுவும் ஜயத்தின் முடிவு, என்பதையும் விளக்கினார். சென்னைக்குத் திரும்பும் போது அவள் மூன்று வயது குழந்தை. அவர்கள் கட்டின புது இல்லத்திற்கு 'ஜனனி' என்று பெயரிட்ட காரணம், இப்போது ஸ்பூர்த்திக்கு புரிந்தது.

தனது குறைபாட்டை ஜயம் ஏற்றுக்கொண்டு, அல்லு அசலுக்குத் தெரியாமல், தெளிவாக தன்னை வழி தடத்தின ஜயத்தை ஆதரவோடு அணைத்துக்கொண்டு, அமைதி படுத்தினார். 'எல்லாவற்றையும் துணிவாக செய்தவள், உன்னிடம் இந்த உண்மையைச் சொல்ல தைரியம் இல்லாதவளாகிவிட்டாள்.

ஸ்பூர்த்தி, அம்மா ஜயத்தின் அருகில் அமர்ந்து அவள் விரல்களை தன் கைவிரல்களால் ஆதுரமாகப பின்னிக் கொண்டாள்.'அம்மா! இப்போதுதான் நான் புதிதாகப் பிறந்துள்ளேன்; என்பதாக உணர்கிறேன். எதையும் ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தையும், எதிர்கொள்ளும் துணிவையும் நீங்களும் அப்பாவும் கொடுத்திருக்கிறீர்கள். அப்பா சொல்வது போல் நீங்கள் என்னை அன்பையும், உறவுகளின் உறுதித் தன்மையையும், விசுவாசம், நம்பகத்தையும், ஊட்டி வளர்த்திருக்கிறீர்களே! இதை விட ஒரு பெற்றோர் தன் மகளுக்கு என்ன கொடுக்க முடியும்; ' என்று வினவவும, உணர்ச்சி மேலிட்டால் பெருத்த குரலில் ஜயம் அழத் தொடங்கினாள்.

ARANYANI

VIJENI

CHAPTER - 10

Friends are a coffer that preserves expensive memories.

"Hello..."

"Hello, is it 2441- 3232?"

"Yes, who is this?"

"I would like to get details about your house in Nandavanam colony."

"Yes, it is available for rent. The electricity and water bills are separate and the advance to pay—"

"Sir," he interrupted. "I do not want the details of the house, but about the family that lived there."

"Are you Vihaan?" the man on the other side snapped.

Vihaan gasped in shock. "Ye-yes sir, how do you know me?"

"She told me... Munnu... she told me that a guy named Vihaan will certainly come enquiring about her."

Vihaan's eyes watered.

"But I am sorry. I have no details about her."

"Sir, please..." Vihaan's voice cracked. "Where did they shift to? Or at least give me a small detail... it would be helpful... please..."

"I have nothing to say because she did not tell me anything at all."

"But, Sir sh—"

"Vihaan, listen. Though I was just a house owner, she never saw me like that. She treated me like her father." He let out a disconsolate sigh. "One day she came to me and said that she wanted to stay away from certain things and wanted to vacate the house. I felt awful and wanted to keep in touch, so I asked the details of her relocation. Do you know what she answered?" The man paused for a second and continued, "She said, 'If I tell you about it, he will definitely reach me, and I do not want that to happen. I hope you understand, and one day I will surely come and see you.' She told me this exact thing. And I am still waiting for her to come and visit me."

The vase that he held rolled from the table and crashed. "She did not want to meet me?"

"Yes, I think so... I do not know the reason behind it, but her words conveyed it." The man waited for a response from Vihaan. Following the silence that prevailed, he said through gritted teeth, "I better warn you to stay away from her. I will not let you cause any danger to my daughter."

"Ye-yes, Sir. I will not disturb her. Thank you for your time." He hung up the call.

There was nothing more to ask. Even if he knew, the man was not going to disclose it to him. Vihaan sat on his canvas chair staring at the landline, unmoved for more than an hour. His face wore a puzzled expression.

Joseph entered the room and called his name, no reaction. He called again, a little louder, and Vihaan blinked.

"Machaan, you are spoiling your life." Joseph took a deep breath and inched closer. "She has left you. It is high time for you to realise it and come out before it ruins everyone around you."

Vihaan sat in the same position without flinching.

Joseph snapped his fingers. "Are you even listening to me?"

“Am I a danger to her?” he asked, his eyes ready to pour down the tears that he had been holding.

“No! But I think she is to you.”

Vihaan slammed his fist on the table. “Don’t you dare talk about her like that!”

“Okay... Okay...” he said, squeezing Vihaan’s shoulders. “I want you to be fine... that is all that matters to me.”

***

Seated behind the oversized fairing, Vihaan turned the key and listened to the roar of the engine filling the silent night. He took off, heading for the mountain roads. Once there, disregarding the speed limits, the engine was at full throttle. As his knee was just skimming the ground while taking the bends, he thought about his fascinating moments with her. He wanted to escape to his past. The old sweet talks, the eyes that gave him life, the hair that lightened his burdens...

However, her words had put a full stop to all of it. It had suffocated him. And had killed him from inside.

Why did she come into my life?

Why did she leave me in the dark?

What mistake did I do to deserve this from her?

Am I not worthy to at least know her reason for leaving me?

The frightening questions trundled through his brain like a through train, without an intention to stop. When the frustration increased, his heart pained like it was going to explode - he braked to a stop and took a deep breath. He knew what would make him feel better. Without thinking, he took a turn towards a location. The place where it had all started...

“Dey, pass it to me.” Raheem stretched his hand eagerly.

After taking a quick puff, Dishanth handed back the stub. “Here you go.”

“Today is the worst day!” Vihaan sighed. “Not even a single good-looking girl in the park.”

Raheem, Dhishanth, and Vihaan were called the three idiots in their school. Wherever they went, whatever they did; all the three were a part of it. It was during their twelfth standard, they had started coming to this park to do their exciting part in life– Sighting. And it continued even after they had all joined for work in different domains.

“There... there!” Vihaan pointed at a fat lady. “Dishanth your perfect girl.”

“Not mine, I think she is your type of girl.”

Raheem shook his head. “No, no, she suits you better Dishanth.”

Dishanth twisted the tip of his Hungarian moustache. “Don’t make me talk about Swathi.”

Raheem’s bony nose turned red. “Don’t you dare talk about my girlfriend!”

Soon, they both started abusing each other.

“Guys! That’s enough!”

“Stop it, guys!”

Vihaan tried to calm them down, failing; he just rolled his eyes and turned towards the road. While they were still arguing and abusing each other, he shifted his gaze across the slopping street, at a child who was wailing and screaming.

“Stop it, Ramu!” The little boy’s mother offered a tender coconut towards him. “See, this straw is in your favourite colour, will you have it now?”

He pushed it aside and wailed, “Nahhh... I... don... wan... Arhh... wate... yo...”

“Ramu!” She pulled his arm carelessly to face her. “There is no limit for your stubbornness, are you not ashamed to behave like this in the middle of the road?”

The little boy took a deep raspy breath and sniffled.

“Are you planning to have it or not?” she asked peevishly. “If not stay here itself, I am leaving home without you!”

“Aaammmaaaa...” The little boy let out another haul of anguish. “Don’t leave... I drink from my bottle,” he said, throwing the straw away.

“This boy is eating my brain.” Her hand took his ear and twisted it. “Come home, I will tell Appa and teach you a lesson.”

The little boy wriggled from her grasp, went to the pavement, and sat sulking with a woebegone face. Placing the tender coconut on the tricycle, the woman took a water bottle from her bag. She opened it and tilted her hand to empty it on the ground.

Suddenly, someone snatched it from her, carried it across the pavement, and tipped it over, dousing a withered plant in cold water.

“Don’t mistake me, Aunty. A few things that are useless to us; means everything to others.” The girl returned the bottle to the woman and gently stroked the little boy’s hair. “And sorry for snatching it from you.”

“VIIIHHHHHAAAANNNNNN!” Raheem smacked his head, snapping him out of his wandering gaze. “We have been calling you for years.”

Vihaan’s face expressed bewildered helplessness. “Machaan, did you see that?”

“See what?”

“Tha-that girl!” He leaped to his feet and crossed the road.

For more than five minutes, he was sprinting around the area, searching for someone. Disappointed, he came back towards them, panting.

“Dey, why are you acting like a jerk?” Raheem’s brows frowned. “You are running here and there like a mad guy.”

“It does not happen like in movies, right? I mean, everything happens in a flick of time and not in slow motion.”

“What are you, blabbering?” Dishanth scratched his head. “What happens in a flick of time?”

Vihaan closed his eyes and tried to get the girl’s face in his mind. But only blackness clouded his vision. Sighing heavily, he stared at the road across from him.

“Machaan!” Raheem shook his shoulders. “Hop on, let’s go.”

“Dey, trust me... she was so beautiful!”

He fell in love with the beauty of her heart than her face. Not many would care for a plant in this world, but she did. Maybe that day, the first day when he saw her, he did not remember her face. But today, that was all he remembered and yearned to see.

The silvery voice that came from her cupid-bow lips. Her lean fingers that played in the air when she spoke. Her puckered eyebrows that clear up when he cracked useless jokes. Her petite straight nose that turned pink when sunlight hit her face...

***

Rhythmically, the air went in and out from her nose, which was turning pink due to the sunlight that leaked through the curtain. After performing the breathing exercise for fifteen minutes, Aarushi slowly opened her eyes. She smiled at Susanne, sitting cross-legged across from her.

“So, how do you feel now, Aarushi?” asked Susanne in a calm voice, still smiling at her.

“A little better doctor.”

“That’s good.” The doctor scribbled some words in a file. “I do not want to trouble you again, but if you are comfortable, could you narrate me all the incidents that happened last night?”

“Y-Ye-Yes, doctor.” Aarushi’s eyes darted towards the large instruments that were placed in the corner. She tried to recognise them, but could not. Only the stethoscope placed on the table meant something to her. She had been here a few months ago, after her surgery. The apple-faced Susanne was her psychiatrist. Though she knew the doctor only for months, it was the first place she ran to after last night’s terrifying incident. She was admitted for the night, and the nurse informed the doctor and Susanne had come in the morning.

“Aarushi?” Susanne folded her arms across her chest, eyes fixed sharply on her.

“Ah... Yes, doctor.” She swallowed down a little nervously before continuing, “I came back from work and everything was normal. However, after a few minutes, I heard noises downstairs. When I went down, all the lights went out. I got scared and ran back to my

room, and then again, I heard the noise of someone scratching their nails. When I went to the opposite room, the window was shattered and... and... when I turned I saw some... some woman trying to grab me from the wall... screaming I came running to the hospital."

"Okay... okay... calm down," Susanne replied, looking at the monitor that was indicating the rise in her pulse. The psychiatrist cleared her throat. "So what do you think happened yesterday in your house?"

"I... I... saw... and... sh—" Aarushi stopped and remained silent for a while. She wiped the sweat balls that had formed on her forehead and said, "I think someone broke into my house."

"Hmmm..." Susanne flipped the sand clock and scribbled into the file. "And what do you think the reason would be?"

"I think to hurt me." Her eyes shifted to the corner and became glazed with a glazy layer of tears.

"Why would anyone hurt you? You are such a sweet girl, Aarushi."

Aarushi blinked, and the tears dripped from her eyelids and slid down her cheeks. She bit her lip tightly in an attempt to control the tears. Her lower lip quivered as words slowly came out of her mouth. "Then, what was it?"

"Maybe nothing happened, Aarushi. Why don't we think from that perceptive?" Susanne leaned forward, away from her chair, carefully scrutinising Aarushi's expression.

"So, are you by any chance telling me that I am imagining all these things?" Aarushi's cheek turned hot. She readjusted her position, sat straight up, and inhaled deeply.

"Listen Aarushi, I know how hard it is for you, but there are people who have been in a coma for years or people who have forgotten almost who they were." Susanne paused, waiting for a reply or reaction from Aarushi, failing which she continued, "So, your case is nothing when compared to those, and I know you are strong enough to get out from all of these."

"Hmmm,"

Susanne's fleshy palm touched her cheeks soothingly. "Our brain is complicated and with a slight disturbance, it will produce unbearable effects. So be calm and try to relax, things will get cleared."

"So, are you trying to tell me that I am hallucinating?" She rolled her eyes in disbelief. "I think it is better to clear things, doctor." She got up from the chair. "Why don't you come home with me so that we can have a better understanding?"

Silence prevailed as Susanne indulged in deep thinking, after which she agreed. "Yes, we shall."

Standing, in front of the main door, Aarushi scrabbled her pocket, desperate for the keys. Her shivering hands fumbled and dropped the keys twice before failing to fit the key into its hole.

"Calm down, Aarushi. Give it to me, I will open."

She nodded and handed the keys to the doctor. Susanne twisted the knob and opened the heavy wooden door. She took Aarushi's hand before letting her inside. The door slammed shut, letting a creaking noise and bringing a shrill down Aarushi's spine.

"Yes, Aarushi... so how do you want to make me understand?"

Aarushi pointed her finger upwards. "I want you to see the shattered window in that room."

"After you." Susanne gestured her to move forward.

Aarushi's head was reeling as she climbed the stairs, clinging to the cement rail a little too tightly. Taking timid steps, she made her way towards the room, followed by the doctor.

Stepping inside the room, her heart stopped pumping altogether, and she stammered, "Tha-that win—"

"Is that the window that you were talking about?" Susanne pointed at the beautiful window that stayed perfectly in front of them. The glass, though clear, was as thick as a beer bottle. The two rectangles were held in place with black iron. There was not a single piece of glass on the floor or any evidence of damage to the window.

Aarushi watched Susanne silently, nothing going through her mind. She nodded and shifted her glance back to the window.

"Listen Aarushi, I think you should go to Kandhanallur and stay with your parents for a few days." Susanne held her hand while Aarushi nodded again, without taking her eyes from the window.

எத்தனை எத்தனையோ பார்த்துட்டோம்



எத்தனை எத்தனையோ...
எத்தனையோ பாத்துட்டோம்...,
எங்கிருந்தோ வந்து
காதுக்குள் ரீங்காரமிட்டது
ஆம்., எத்தனையைத் தான்
பார்த்து உள்ளோம்?
கண் நிறைந்த அழுகையோடு
பயணித்த காலங்கள் தான் எத்தனை!
பார்க்கும் முன்னே தெறிக்க விட்ட
கண்ணீர் துளிகள் தான் எத்தனை!
நெஞ்சுக் கூட்டுக்குள் குமைந்து
கிடந்த கேள்விகள் தான் எத்தனை!
விடை தெரியாமல் மக்கிப்போன
வினாக்கள் தான் எத்தனை!
வெறுமையோடு நகர்ந்த
வினாடிகள் தான் எத்தனை!
விடியலுக்காக விழித்திருந்த
இரவுகள் தான் எத்தனை!
வினவும்போது பதில் தெரியாது
விழித்திருந்த பொழுதுகள்தான் எத்தனை!
பார்த்திருக்க கலைந்து சென்ற
கனவுகள் தான் எத்தனை!
பதிலே அறியாது பட்ட
பாடுகள் தான் எத்தனை!
இன்னும் எத்தனை எத்தனையோ ...
அத்தனையையும் தாண்டி
எத்தனையை எதிர்பார்த்து
நகர்ந்து கொண்டிருக்கின்றன
நாட்கள்

– சக்தி சுரேஷ்

முதியோர் காதல்!

– மேகலா இராமமூர்த்தி

இணைந்திருக்கும் இந்த மூதிணையர் (முதிய இணையர்) சிற்பங்களை இணையத்தில் கண்டேன் (Artist is unknown). கண்டவுடன் 'முதியோர் காதல்' எனும் தலைப்பில் தம்முடைய 'குடும்ப விளக்கு' காப்பியத்தில் பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய கவிதைதான் என் நினைவுக்கு வந்தது. அதில் முதியவரான, காப்பியத் தலைவர், மணவழகர் தம் மனைவி தங்கத்தின் இளமைக் காலத்தையும் இப்போதைய அவளின் முதுமைக் கோலத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பதைக் கவிதையாய் வடித்திருப்பார் பாவேந்தர்.

அக்கவிதை...

புதுமலர் அல்ல காய்ந்த
புற்கட்டே அவள் உடம்பு
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும்மூ தாட்டி
மதியல்ல முகம் அவட்கு
வறள்நிலம் குழிகள் கண்கள்
எதுஎனக் கின்பம் நல்கும்?
'இருக்கின்றாள்' என்ப தொன்றே!

சிற்பத்தில் நாம் காண்பவர்கள் வெளிநாட்டு மூதிணையர் அல்லவா? அதனால் இவர்களுக்குப் பொருந்துகின்ற வகையில் மேற்கண்ட கவிதையை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்வோம்!

A Withered Bloom!

She is not a new flower--dry
grass has woven through her form.
Her gait is no longer a dance,
She is an old woman who stumbles!

Her face is not like the moon's soft light,
But a dry land where shadows lie;
Her eyes, like pits, hold stories deep,
Reflections of time passing by.
Yet what brings warmth to my heart,
In the quiet of our shared embrace?
Despite the years, through it all,
She is here with me, in my life!

நூலாய்வு

ஒரு கவளமும் ஒரு கவிதையும்-உண்ட மயக்கம்

இரம்யா நடராஜன்

நூல்: ஒரு கவளமும் ஒரு கவிதையும்

வெளியீடு: ஒரு துளிக் கவிதை

இவ்வுலகில் எந்த உயிருக்குள்ளும் காற்றென பாரபட்சமின்றி பரவுவது பசி. பசி அறிந்தவனுக்கு ருசி பெரியதல்ல. பசியோ ருசியோ உணவு என்பது இங்கு இன்றியமையாதது. பசிக்கு உணவு என்பது ஒரு புறம் சுழன்று கொண்டிருக்க ருசி என்ற பெயரில் எதை எதையோ உண்டு உடலுக்கும் உயிருக்கும் கேடு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது இன்னொரு புறம். தனக்கு கேடு என்பதோடு வருங்கால சந்ததியினருக்கும் சொத்தென ஆயிரமாயிரம் நோய்களை உற்பத்தி செய்து கொண்டு தான் இருக்கிறது. இதற்கான தீர்வு என்றுமே சரிவிகித உணவு, இயற்கை உணவு, உடல் பற்றிய புரிதல். பழசு என்று முற்றிலுமாக தள்ளிவிடாமல் பராம்பரிய உணவுகளையும் சேர்த்துக் கொண்டால் ஆரோகியம் பேணப்படும் என்பது நிதர்சனம். அதற்கு உணவு பற்றிய புரிதலும் அவசியமே.

அந்த வகையில் புதுச்சேரி ஒருதுளிக் கவிதை வெளியீடான **கவிஞர் மஞ்சுளாகாந்தி**யின் **ஒரு கவளமும் ஒரு கவிதையும்** என்ற கவிதை நூல் நம் கைகளில் தவழ்கிறது. இந்நூலின் அணிந்துரையில் மரு.கு.சிவராமன் அவர்கள் கூறுவது போல உணவை அறிந்துகொள்ள விருப்பம் இருப்பவர்கள் மட்டுமன்றி கவிதை இன்பம் சுவைக்கவும் ஆர்வம் உடையவருக்கும் குழந்தைகளுக்கும் கூட இந்நூல் உரித்தானது.

பைந்தமிழ்ச் செம்மல் சியாமளா ராஜசேகர், திருமதி. ரேவதி சண்முகம்(கவியரசர் கண்ணதாசன் மகள்),திருமதி மல்லிகா பத்ரிநாத்- இவர்களின் வாழ்த்துகளுடன் மிளிரும் இந்நூலில் மொத்தம் 26 கவிதைகள் உள்ளது. இயல்பாகவே எதுகை மோனையுடன் உலா வரும் கவிஞர் மஞ்சுளா காந்தியின் கவிதை வரிகளில், சுவையும் சேர்ந்து கொண்டால் கொண்டாட்டம் தான். நிறைய இடங்களில் உணவின் நினைவு தாண்டி கவிதை வரிகளில், நாக்கில் உமிழ்நீர் சுரந்தது என்பது மிகை அல்ல.

சிற்றுண்டியுடன் ஆரம்பிக்கிறது இந்நால். எங்கள் உள்ளங்கவர் ஆண்டாளின் பாவை நோன்பு கூட்டாளியிடமிருந்து ஆரம்பிக்கிறேன்.

பனிப்பொழியும் மார்கழியல் பாவை நோன்பிற்கு துணையென 'மூடநெய் பெய்து முழங்கை வழிவார' என்று கூடார வள்ளியிலே ஆண்டாள் பாடி வைத்திருக்கிறாள்.

அக்கார அடிசில் கவிதையில் அவளை இழுக்கிறார் கவிஞர். கோவில் மடப்பள்ளி உள்ளிருந்து வரும் அந்த மணம் அனந்தனின் மனம். உள்ளொளி தரும் எதுவும் பக்தி தானே.

கோவில் மடப்பள்ளி மணம் என்றால் அக்கார அடிசிலுடன் தப்பாமல் வருவது.. புளியோதொரை வாசம் தான். புளிச்சோறு கவிதையின் தலைப்பே தனிச்சுவை தான். மகிழ்ச்சுவையும் தான்.

அறுசுவையிலிது தனிச்சுவை
அளவோடுண்ணப் பெருஞ்சுவை
மொறுமொறு அப்பளம் துணையாக
மொத்தமாய்த் தருமே மிகிழ்சுவை

இந்நூலின் சிறப்புகள்: கவி நயம். படிக்க படிக்க குழந்தை பாடல் போல பாடவும் வைத்துவிடுகிறது. அடுத்து ஒவ்வொரு உணவின் செய்முறையும் சேர்த்திருப்பது. அடுத்து அந்த உணவின் மூலம் நமக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி சொல்வது. இந்த வகையில் அமைந்திருப்பதால் இது சுவை முற்றும் சேர்ந்த நூலாக உள்ளது. அங்கங்கே நினைவுகளையும் தாளித்துச் செல்வது இனிமை.

'சோன்பப்படி'இல்லாத நினைவுகளா. மாலை மங்கும் நேரத்தில் தள்ளுவண்டியில் கண்ணாடி கூடடைந்த அந்த வெண்பஞ்சு இனிப்புக் கனவுகள்..வாயில் அப்போது கரைந்தது இப்போதும் நெஞ்சில் தித்திக்கத்தானே செய்யும்.

நூல் பஞ்சு ஒத்திருக்கும்
நுரை மெத்தை போலிருக்கும்
மேல்தாடை ஒட்டிக் கொண்டு
மெல்லிசையாய்ச் சுவை கொடுக்கும்

இனிப்பு பொட்டலம்...

சர்க்கரை சேர்த்த இது ஒரு ரகம் என்றால் இன்னொரு இனிப்பு வாய் முழுதும் தித்திக்கும் பால்கோவா. கவிஞரின் அப்பா சட்டைப்பையில் உலா வந்தது போல என் அப்பா சட்டையிலும் வீடு வரும் முதல் தேதி வசந்தம் இது.

உலகின் உயர் சுவையோ
உன்னத நற்சுவையோ
விலகிட முடியாமல்
விழுங்கமனம் விழைந்திடுமோ

பால்கோவா பால்மேனி தாண்டி சுண்டியிழுக்கும் ஒரு முடிவிலி இந்த ஜாங்கிரி.. பெயரில் வடமொழி இருந்தாலும் இனிப்பில் நம் தமிழே. இந்த கவிதையில் ஒரு அழகான வரி

முறுக்கிக் கொண்டிருந்தாலும்
முந்திக் கொண்டிருக்கும்
சில மனிதர்களும்அப்படித்தான்.

பத்தவே பத்தாது *என்ற பெரிய பெயர் பெற்றிருக்கிறது இந்நூலில்.*

இதெல்லாம் கல்யாண பந்தியை நினைவு படுத்துகிறது என்றால் 'பெண் பார்க்கும்' படலுத்துக்கு என்றே நேர்ந்துவிட்ட வகைகள் தான் ***அல்வாவிற்கு அக்காளும், கடலை மாவுச் சட்டைக்காரனும்.***

ஆரஞ்சு நிற அழகி நான்
அல்வாவிற்கு அக்காள் நான்
அவசரத்தின் குழந்தை நான்
அம்மாவிற்குச் செல்லம் நான்

இப்படி பாடினால் நெய்யா ஒழுகும்,தேன் தான் தளும்பும்.

மதுர உருண்டை *என்ற கடலை உருண்டை,அதிரசம் என்று பந்தி நீள்கிறது..என்ன இது இன்னிப்பா இன்னிக்குதே...அடுத்து ஒரு காரசாரமான ஒரு வகைக்கு செல்லலாம்.*

ஊதாநிற உடம்புக்காரி *கவிதையின் தலைப்பிலேயே அமர்ந்து கொண்டு நாவூறச் செய்கிறாள். இந்த கவிதை*

நல்லெண்ணை குளியல்காரி
நாவூற வைக்கிறாள்
எல்லையில்லா ஆசைகட்டி
எடுத்து உண்ண அழைக்கிறாள்

இப்படி ஆரம்பித்து

இதயம் காக்கும் இனியவள்
இயற்கை தந்த கொடையவள்

காதலிக்கான வரிகள் கத்திரிக்காய்க்கா!? அருமை கவிஞரே.

நாக்கு ஊறும் *மீன் குழம்பு,**உணவல்ல உணர்வு*** *பிரியாணி- உணவு வேளையில் படிப்போர் கவனம் தேவை. காரணம், கவிஞரே பிரியாணி எழுதுகையில்*

பிரியாணியின் புகழை நானும்
பிதற்றுகின்றேன் கேளீரோ

என்றே சொல்கிறார்.

பிதற்றல் என்ன பித்தம் என்ன மந்தம் என்ன எதையும் சரி செய்துவிடும் அருமருந்து நம் பாரம்பரிய உணவு முறையே. புதினாதுவையலே அதற்கான சாட்சி. **இணையிலா இலையது** என்ற கவிதையில்

இப்படியோர் மணம் கமழும்
இலையிதற்கு ஈடில்லை

என்கிறார். இது மட்டுமா கோடைவெப்பம் தவிர்க்கும் நம் கேப்பங்கூழின் பெருமையும் நன்னாரி பானகத்தின் பெருமையையும் சொல்லவும் வேண்டுமா. **மணக்கம் வேர்** என்று கவிதையலும் **குளிர்ச்சியூட்டும் கூழ்** என்ற கவிதையிலும் இதை தான் சொல்கிறார்.

குளிர்ச்சியூட்டும் கூழில்,
இரும்பு சத்தும் சுண்ணச் சத்தும்
இணைந்து உடலை உறுதியாக்கும்
இதிலிருந்து உயிர்ச்சத்துகள்
இன்னும் வலிமை கூட்டி நிற்கும்

கூழோ களியோ காலை உணவை தவிர்க்கக்கூடாது என்பது தான் மருத்துவர்களின் அறிவுறுத்தல். நாள் துவங்கும் முன் உடலுக்கு தேவையான சத்துக்களை கொடுத்துவிட வேண்டும் என்பதே நோக்கம்.

நம்மூரில் காலை சிற்றுண்டி என்றாலே இட்டலி,வடை, பொங்கல், அப்பம் கூடவே நுரைக்கும் காப்பி. இது இல்லாமல் காலை என்ன கவளக் கவிதையே விடியாது.

கன்னக்குழி கவிதையில்
அம்மா கை தொட்டுப்பார்க்க
அழகாய் சிரித்திருப்பேன்
சும்மாவொரு கன்னக்குழி
சுகமாகப் பொருத்திக் கொள்வேன்

இதை போன்ற வரிகளில் தான் இந்த கவிதைகள் குழந்தை பாடலாகவும் சுட்டிக்குழந்தை பாடும் பாடலாகவும் மிளிர்கிறது. **மஞ்சுக்கா** வின் குறும்புகள் எட்டிப்பார்த்து சிரிக்க வைக்கிறது.

வடைக்கு பெயர் **பாயசத்தின் கூட்டாளி.** இதை படித்ததும் எண்ணம் ஓடியது. ஆமாம் எங்குமே வடை பாயசம் என்று தான் பேசுகிறோம். ஆண்டு ஆண்டு கால கூட்டணி இது. தனித்தனிச்சுவை. ஒரு இலையில் பயணம். எதிர் எதிர் திசையில் இருப்பு ஆனாலும் கூட்டாளிகள்.

வெள்ளைக் கிண்ணம் ஆப்பம் **பெரிய பெயர் பெற்ற** பொங்கல் என ஒரு முறை முடித்துவிட்டு கண்கள் கண்மணி விரிய நிற்கும் இடம்

விரும்பும் விருந்து.

விருந்தினில் விரும்பிச் சேரும்
வீட்டிலும் கொடியை நாட்டும்
ஒரு பெயர் சூட்டிக் கொண்டு
ஊர் ஊராய் மாற்றம் கொள்ளும்

ஊருக்கு ஒரு சுவை இருந்தாலும் பெயர் அவியல் தான். இக்கவிதையில் சுவையான வரிகள் இவை

வறுவலுடன் வம்புமில்லை
கூட்டோடு கோபமுமில்லை
பொரியலோடும் போட்டி இல்லை
புதுச் சுவையே இதற்கு எல்லை

இத்தனையும் தின்று முடித்ததும் நாவும் வயிறும் தேடும் ஒரு ஆபத்பாந்தவி ரசமே... கவிஞர் மஞ்சு ***கிறங்கடிக்கும் ரச..மது*** *என்கிறார்.*

அம்மா கையால் குழைத்தூட்ட
அமிர்தமாய் அற்புதமாய்
'அச்சம் மம்முவாய்'

என்று குழந்தைகள் முதல்

கிண்ணத்தில் ஊற்றிக் குடிக்க கிறங்கடித்தும்
புசிக்கப் புத்துணர்வாய்
ருசிக்கும் ரச...மதுவே..

என்று பெரியவர்கள் வரை கிறங்கடிக்கும் ரசம் போன்றது தான் இந்த ***ஒரு கவளமும் ஒரு கவிதையும்.***

உணவு வகைகள் பற்றி மட்டுமல்ல அது தரும் நன்மைகளையும் கூடவே

அரிசிமாவின் அலங்காரம்
அம்மா கைப்பிடி அரிதாரம்
(அம்மாவின் கைப்பிடி(கொழுகட்டை))

சிறிது ஞாபகத்தூவல்களையும் சேர்த்துக்கொண்டு படைத்திருக்கிறார்.

இறுதியாக ஒரு உணவு நிபுணராக, தாயாக, சக மானுடத்தின் மீது அக்கறை கொண்ட கவிஞராக மூன்று கவிதைகள் படைத்திருக்கிறார்.

மாறிப்போன உணவு முறை
அறுசுவை
சரிவிகித உணவு

இம்மூன்றிலும் இத்தனை உணவு வகைகள் என்ற பட்டியல் தாண்டி இன்னொன்று சேர்த்துக்கொள்ளுவதே சுகம் என்கிறார் இப்படி,

பாரம்பரிய உணவு முறையை
பக்குவமாய் பின்பற்றி
நேரத்திற்கு உண்டிருக்க
நேசம் வந்து நிறைந்திடாமே
(மாறிப்போன உணவு முறை)

சரியாக பகிர்ந்தேற்றுச்
சந்தோஷம் கூடச் சேர்த்துச்
சத்துகளைச் சமமாய் உண்ணச்
சகல நோயும் பறந்திடுமே
(சரிவிகித உணவு)

அறுசுவையும் அளந்துன்ன
அகமும் உடலும் சிறப்பாகும்
உறுசுவையாய் அன்பை ஏற்க
உலகில் இன்பம் நிலையாகும்
(அறுசுவை)

அன்பெனும் ஏழாவது சுவையே இட்டு அகமும் உடலும் சிறப்பாக வேண்டும் என்கிறார். அன்பின் வழியது தானே உயர்நிலை. அன்பை மனதில் ஏந்திய அறுசுவை சமையல் ருசிக்கத் தானே செய்யும். திகட்டாத அற்புதமான கவி விருந்து தந்திருக்கும் கவிஞர் மஞ்சுளாகாந்தி-க்கு வாழ்த்துகள். நன்றி.

இந்நூல் கண்ணகளுக்கும் விருந்தாக இருக்கும்படி வண்ணமயமான பக்கங்களுடன் கவளத்தையும் கவிதையையும் பரிமாறுவது கூடுதல் சுவை.

A review on Kavinjanin kaathali-Tamil translation of Sonnets from Portugese'

Dr. B. Nagalakshmi
The Chief Librarian,
SDNB Vaishnav College for women, Chromepet,
Chennai 44,

Dr. Rajeshwari's passion for translation is exemplary with the choice of Elizabeth Barrett Browning's Sonnets of Portuguese. For the translator effortlessly traversing the challenges of the historical, sociocultural and political differences and seamlessly weaving the cadences with all the inherent literary richness of Tamil language placing Elizabeth Barrett Browning on the pedestal amidst the legendary Women poets Avvayar, Ponmudiyar, Velliveethiyar, and Andal etc.,

The significance of the title 'The Sonnets of Portuguese' reveals that the Poetess Elizabeth Barrott Browning wanted it to be in disguise as if it were the translations from Portuguese due to the Victorian anxieties about female modesty, public exposure and wanted to maintain the modesty. Whereas the title of the translation ' Kavinanin Kathali' thoughtfully avoids the term 'Portuguese' to overcome the barrier of cultural alienation and to be oriented with the Tamil readers.



The encaptivating opening of the dramatic monologue depicts the Poetess's predicament that she is dragged and chased by death seizing her locks from behind her head with a striking knell but the voice echoed as a church bell resonating 'I am not death but love, thee sweet lady'. This makes a strong emotional appeal by binding the reader with a conviction to continue the emotional journey throughout the poem without taking a break.

The highlight of the poem lies in her proposal and withdrawal of the courtship and the underlying paradoxes of emotions. The translator has weaved this back and forth

with the delicate craftsmanship of language where the personal confession transforms into universal poetry. In the stanza 10, the poetess glorifies the divinity of love and assures her love to be pure and juxtaposes this in the succeeding stanza and states her

withdrawal citing her fears and weakness. Though this contradiction is prevalent throughout the poem, it is best illustrated in the stanzas as given below:

10. ..... தேவையின்போது தெரிவிக்கின்றேன்/
நான் உன்னை காதலிக்கிறேன்/
குறித்து வைத்துக் கொள்/
உன்னை நான் காதலிக்கிறேன்.....
11. .....உன்னை ஆசீர்வதிக்கின்றேன் அன்பே/
ஆனால் உன் முகத்துக்கு நேராக/
உன்னை விட்டு விலகி விலகிச் செல்கின்றேன்.....

நூலாசிரியர்
முனைவர் திருமதி
செ. ராஜேஸ்வரி

The translation has beautifully brought out poetic devices in Tamil and in particular the alliteration and assonance which are embellishments of the dramatic monologue.

Some examples are as cited below:

ஆண்டுக்கு ஆண்டு, இயற்கை இன்பங்கள்,
ஒளி துளித்தது, உன்னுள் என்னைக், நற்சாட்சியாக நிற்கின்றேன்
நிமிர்ந்து நிற்கும், கண்ணீரில் கண்டேன், பூப் பாத்திகளும் பூப் பந்தல்களும்

This translation is significant in Tamil Literature as it demonstrated how private emotion could be elevated into high art, inspiring later poets to explore personal themes more openly. The translation stands as a testament to Cross-cultural resonance by emphasizing how the universal theme of love bridges literary traditions across time and geography.

தைரிய லக்ஷ்மி

வை.மு.கோதைநாயகி அம்மாள்

அத்தியாயம் - 7

வியப்புக்கடலாடி ஆனந்த பாஷ்பத்தைப் பெருக்கினார் என்றால் மிகையாகாது. வைத்தியநா தன் குடியிருக்கும் வீட்டுக் காரராகிய வடிவேலு தன் மகனும் மருமகளும் புதிய இன்ப வாழ்க்கையில் இனிப்புடன் இறங்கி இருப்பதால் அவர்களின் ஆனந்தமே ஒரு தனித்த வசீகரம் பொருந்தியதாகக்கருதி இந்த ஆனந்தத்தைக் கண்ணாரக் கண்டு அனுபவிப்பதற்கே பேராவல் கொண்டு லீவும் வாங்கிக்கொண்டு வந்துவிட்டார்.

இந்த விஷயத்தை வைத்தியநாதன் தினம்தினம் பார்த் துப் பெருமூச்சுவிட்டுத் தனக்குள் ஏங்கித் தன் தலைவிதியை நொந்துகொள்வான். அன்றும் பீச்சிலிருந்து கேரே வீட் டிற்கு வந்தான். வீட்டுக்காரரின் மருமகள் ப்ரம்மானந்தமாக வீணைவாசித்துப் பாடுகிறாள். அவர் மகன் கஞ்சீரா வாசிக் கிறான். வீட்டுக்காரர் இந்த கானாம்ருதத்தை உண்டு களிவெறி கொண்டு சபாஷ் போடுவதோடு தன் மனைவியைப்பார்த்து பேரானந்தமடைகின்ற காட்சியை மாடியிலுள்ள தன் தனி விடுதியின் ஜன்னலால் பார்த்து ஏங்கி நின்றான். ''நந்தினிக்கும் உயர்ந் தசங்கீதம் வரும். அப்பா இப்படித் தானும் அனுபவிக் காமல் என்னையும் அனுபவிக்கவிடாமல் வரதக்ஷிணை என்கிற வேலியைப் போட்டுவிட்டாரே, என்ன- செய்வேன். ''சீச்சீ! அப்பாவாவது, அம்மாவாவது! இனிமேல் நான் தாமதிக்கப் போவதே இல்லை. வெகுவெகு ஆழமாக யோசனைசெய்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். எங்கள் பந்துவான ராமு வையும் சினேகிதனையும் கூட அழைத்துச்சென்று நந்தினியை அழைத்துக்கொண்டு வருவதே சரி! நாளைக்காலையில் அவர் களைச் சந்தித்து உடனே இருக்கும் ரயிலுக்குப் புறப்பட்டுவிடு வதே சரி! இந்தத் துணிச்சலான தீர்மானத்தை உடனே அப்பாவுக்கு எழுதிப்போட்டு மறுகாரியம் செய்கிறேன். என் னுடைய இன்ப வாழ்க்கையில் குறுக்கிட்டு நாசம்செய்வதை இனி நான் சகிக்கப்போவதில்லை. நாளையே நந்தினிக்கு வேண் டிய சில ஆடையாபரணங்களை வாங்கிக்கொண்டுபோய் வரு வதேசரி!'' என்று முடிவுகட்டிவிட்டான்.

அந்தக் கொடிய இரவு பொழுது நீண்டமலைபோல் வளரு வதாகவே அவனுக்குத் தோன்றியது. தகப்பனாருக்குத் தன் மனத்தில் தோன்றியபடியே கடிதத்தை எழுதி உரையிவிட்டு தயாராக வைத்தான். எப்போது பொழுதுவிடியும், நாளைய தினம் நந்தினியைக் கண்டுகளிக்கும் நேரம் எப்போது வரும் என்று ஏங்கியபடியே படுக்கையில்

புரளுகிறான். தூக்கமே வரவில்லை. மூன்றுமணிக்குமேல் அவனையறியாமல் சற்று அயர்ந்து தூங்கி விட்டான்.

எப்போதுமே வைத்தியநாதன் காலையில் சற்று தாமத மாகத்தான் எழுந்திருப்பான். இரவு வெகு நேரம் படிப்பத னால் இந்த வழக்கம் சிறியவய துமுதல் உண்டாகியிருப்பது சகஜமாகிவிட்டது. ஆனால் அந்த விதிக்கு விலக்காக 5-30 மணி க்கே எழுந்துவிட்டான்; உள்ளத்தில் இரண்டுவிதஉணர்ச்சிகள் போராடுகின் ன்றன. தகப்பனாரை விரோதித்துக்கொண்டு நீ இப்படிகிளம்பலாமா? என்று ஒன்று கூறுகிறது. தகப்ப னார் செய்வது மகத்தான குற்றம். அக்குற்றத்திற்கு உடந்தை யாய் இது பரியந்தம் இருந்ததுபோதும்;முட்டாள் தனமாக இனியும் நடக்காதே: இளந்தளிர் போன்ற நந்தினியின் உள் ளம் அளிந்த புண்ணாகி விட்டதை இத்தனை நாள் உணரவில்லை என்றாலும் அவளுடைய நாடகத்தின் முடிவைக்கண்ட பிறகா வது உணர்ந்து அவளை அக்னி சாக்ஷியாகக் காப்பாற்றுவதா கக் கூறிய ப்ரமாணத்தை நிறைவேற்று. இல்லாவிடில் அவள் உயிர்போய்விடும்; அந்தக் கொலைபாதகம் உன்னைப் பிறட்டி யடிக்கும். ஜாக்ரதை, முன்வைத்த காலைப் பின் வைக்காதே. என்று எச்சரிக்கின்றது னொருபுறம்...சற்று குழம்பிய பின் இரண்டாவது தீர்மானமே வெற்றிபெற்றது.

அவ்வளவுதான்: மனத்தில் எங்கு மில்லாத ஒரு சந்தோ ஷப்புயலடித்து மயக்கியது. நந்தினி! நந்தினி! இன்னும் சில மணி நேரத்தில் உன்னிடம் நான் மன்னிப்புக்கோருவேன். என்னை நீ கட்டாயம் மன்னித்து விடுவாய்... என்று தனக்குள் எண்ணியவாறு கதவைத்திறந்தான். என்ன ஆச்சரியம். சாந் தமே உருக்கொண்டு சந்திரவதனத்தில் புன்னகை பூத்துக் குலுங்க, கண்களில் ப்ரேமையின் ஜ்வாலை வீச நந்தினி கையில் ஒரு தட்டில் தாம்பூலம் முதலிய மங்களகரமான வஸ் துக்களை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்து அவைகளை வைத்திய நாதனின் காலடியிலேயே வைத்துவிட்டு, பாதங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஆநந்தக் கண்ணீரால் பாதங்களை நீராட்டிப் பின் எழுந்து காங் குவித்து ச்ருங்காரப்பதுமையோ ! ஸௌந்தர்ய தேவதையோ! என்று ஐயுறும்படி நின்றாள்.

தன் கண்களையே தன்னால் நம்பமுடியவில்லை. ப்ரமிப்பும் திகைப்பும் ஆநந்தமும் ஒருங்கே அடைந்து... என்ன! இது... நான் தூங்கி எழுந்துவிட்டேனே.....கனவு காண்பதாக..... கனவா...என்று தடுமாறுவதைக்கண்ட அவன் பிதா பரமேச் வரன் பின்னேயே உள்ளேவந்து, செல்வா! கனவுகண்ட நாட்கள்கடலில்கரைந்தது. உங்களுடைய இன்பவாழ்க்கைக்கு நான் போட்டிருந்த முள்வேலி எரிந்து சாம்பலாகி விட்டது; நீ காண்பது உன்கண்ணான கண்மணி நந்தினி வைத்ய நாதன் தான். சிறந்த எழுத்தாளர்களின் ஜாபிதாவில் இடம்பெறக் கூடிய தைரியலக்ஷ்மி தான். கற்பனாலங்கார உலகில் சஞ்சரித்துப் பிறரைமகிழ்விக்கும் சிறந்தமேதைதான்: என்போன்ற மூடர்களைத் திருத்தி நல்வழிப்படச்செய்யும் நாரீமணிதான்; வைத்தீ! நான் புனர்ஜன்மம் எடுத்து விட்டேன். முதலில் நீ நந்தினியை ஏற்றுக் கொள்ளு! என்று சொல்வதை அவனால் நம்பவே முடியவில்லை. சற்று ப்ரமித்து நின்றபின் ... அப்பா! இந்தக் காக்ஷிகள் கனவல்லவா!

உண்மையானதா!. அப்படி யானால் என்னை நீங்கள் இவளுடைய பிதாவுக்கு விற்றவிலை யில் இன்னும் மூவாயிரம் ரூபாய் பாக்கிவரவேணுமே. வந்து விட்டதா? தாயார் எங்கே...

என்று வெடுக்கென கேட்டபோது நந்தினி களுக்கென சிரித்து விட்டாள். அவன் தாயார் உண்மையான பேராநந்தத்துடன் உள்ளே வந்து, அம்பீ! அம்மா எங்கே என்று நீ கேட்ட பிறகு தான் நான் வரவேணும் என்று வெளிப்புறத் திலேயே நின்றேன்; இத்தகைய பேராநந்தத்தைக் காணத் தான் என்னுள்ளம் இரவுபகல் துடித்தது: துடித்துத் தாபத் தினால் வருந்திய என்னிதயத்தில் இப்போதுதான் இன்பத் தென்றல் வீசுகின்றது...

கல்யாணத்தைவ்யாஜமாகவைத்து வரதக்ஷிணை என்கிற பெயரில் சந்தைசகடையில் தான் பெற்ற மகன்களை விற்கும் பெற்றோர்களுக்கு நந்தினி சரியான சவுக்கடி கொடுத்ததற்காக கங்கராஜுலேஷன்ஸ்... அம்மா! மூவாயிரம் ரூபாய் வந்தாயிற்றா? அதைத் தொட்டபிறகல்லவா நந்தினி யின் கையைத் தொடலாம் என்று குரும்பாகக் கூறினான்.

தம்பீ! ஏதோ போனது போகட்டும்: அவர்தான் அப்படி அசட்டுத்தனமாகச் செய்துவிட்டார் என்றால் நீயும் அதைப் புண்ணில் கோலிடுவதுபோல் கிளறிக் குத்திக்காட்டாதே! கடவுளின் மாயாவிலாஸத்தின்மகிமையையாராலறியக்கூடும்? எப்படித்தான் ஆச்சரியமாய் உங்கப்பாவின் மனத்தை மாற்றி னார் தெரியுமா? நந்தினி காலேஜில் படிப்பதே எங்களுக்குத் தெரியாது;அப்பா தனது சொந்த முக்யமான காரியமாய் பொன்னிநகரத்திற்குச் சென்றார். அந்த ஊரிலுள்ள ப்ரபலை தரிடம்தான் அப்பா சென்றதால் அவர் வீட்டில் தங்கினார். 'இங்கு மகாத்மாஜி காலேஜ் என்று ஒன்று ப்ரத்யேகமாய் பெண்களுக்காக நடக்கிறது. அதற்கு நானும் 50 ஆயிரம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறேன். இன்று அதன் வருஷவிழா நடக்கிறது. கவர்னர் தலைமை வகிக்கிறார்; நான்அவச்யம் போகவேணும். நீரும் கூடவந்தால் கவர்ன ருக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்" என்று சொன்னாராம்.

கவர்னரைப் பார்க்கும் மோகத்தில் அவருடன் கூடவே இவரும் சென்றார். அங்கு நிகழ்ச்சி நிரலைக் கையில் கொடுத் ததும் அதில் நந்தினி வைத்தியநாதன் என்ற பெயரைப் பார்த்ததுதான் தாமதம். திருடனுக்குத் தேள்கொட்டியது போலாகிவிட்டதாம். நாடகம் என்பது சாமான்யமாகவா நடந்ததாம். கண்ணீரை மழைபோல் பொழியச் செய்ததில் இவரும் ஒருவராகிவிட்டாராம். சுடச்சுட வசனங்களும் அபார மான நடிப்பின் உச்சஸ்தாயியையும் காணக்காண அவர் உள் ளம் பட்ட வேதனை சொல்லமுடியவில்லையாம்.

கவர்னர்முதல் பலர்பேசிய பேச்சில் நாடகத்தின் அத்புத விஷயத்தைக் கொண்டாடியும் வரதக்ஷிணை வாங்கும் புண்ய வான்களைத் திட்டியும் பேசிய பேச்சுகள் பின்னும் இதயத் தைச் சல்லடைக்கண்ணாகத் துளைத்துவிட்டதாம். அவர் சடக் கெனமாறி புனர்ஜென்மம் எடுத்துவிட்டார்.

காரியத்தை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வக்தார்;எதே தோ ஏற்பாடுகளைச்செய்தார். என்னையும் கூட்டிக்கொண்டு நேரே காலேஜுக்கேசென்று பிரின்ஸ்பால் முதலியவர்களிடம் உத்திரவு பெற்றுநந்தினியேபாமிக்கும்படி அவளிடம் மன்னிப் பும் பெற்று இரவு வண்டியில் புறப்பட்டு வந்துசேர்ந்தோம். உனக்குப் புதுமணம் வீசவும் எதிர்பாராத இன்ப ன்பத்தைக் கொடுக்கவும் முன்னறிவிப்பின்றி வந்து, இதோ உன்னிடம் உன்சரக்கைச் சேர்த்துவிட்டோம். சரிதானே தம்பீ ! நந்தினி பெற்றோர்களுக்கும் கடிதம் அப்பாவே எழுதியிருக்கிறார்.அவர் களும் அனேகமாய் இங்குவந்து விடுவார்கள் என்று மெஷின் போல் கூறிய விஷயங்களைக் கேட்கக்கேட்க வைத்திய நாத னின் இதயத்தில் அமுதக்கடலே பாய்ந்துவிட்டது போலா கியது. பெற்றோரை வணங்கினான்.

தன் பெற்றோர்கள் இருப்பதையும் மறந்து நந்தினியின் மலர்க்கரங்களை அப்படியே பற்றிக்கொண்டு, தைரியலக்ஷ்மியே கற்பனைக்கரசியே ! என் பெற்றோர்களையும் என்னையும் மன் னித்துவிட்டாயா! என்று ஆவேசத்துடன் கேட்டான்: மாதரசியின் கண்களில் மலர்கள் உதிர்வதுபோல் ஆனந்த முத்துக்கள் இவன்கையில் உதிர்ந்து சரணாகதி செய்தது. இந்தக் காட்சியைக்கண்டு பூரிப்பதைவிட நித்யகல்யாண வைபவசுகம் அவன் பெற்றோர்க்கு வேறு என்ன இருக்கிறது! மங்களம்.

சுபம்.

– தைரிய லக்ஷ்மி (நாவல்), வை.மு.கோ. 106வது நாவல், முதல் பதிப்பு: 1-12-52, ஜகன்மோகினி பிரஸ், திருவல்லிக்கேணி

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

குயில் தோப்பிலிருந்து ஒரு குரல்

வித்யா மனோகரீ
புதுவை

நூல் குயில் தோப்பிலிருந்து ஒரு குரல்
ஆசிரியர்: மஞ்சுளா காந்தி (மஞ்சு)
வெளியீடு: ஒருதுளிக் கவிதை (புதுச்சேரி)

கவிதை நூல் குறித்து எழுதும்போது எது கவிதை? என்ற வினாவே முதலில் எழுகிறது.கவிதைக்கான இலக்கணத்தை பல்வேறு காலகட்டங்களில் சான்றோர்கள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் என்று பலரும் சொல்லி விட்டனர். இவர்கள் சொன்ன இலக்கணத்தின் படி இது தான் கவிதை என்பதோடு நில்லாமல் இதற்கு அப்பாலும் கவிதை இருக்கிறது என்பது தான் உண்மை!

*உள்ளத்துள்ளது கவிதை -
இன்பம்
உருவெடுப்பது கவிதை ...

என்று கவிதை குறித்து கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கூறுகிறார்.

மகாகவி பாரதியோ...

"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்..

என்கிறார்.

நூலாசிரியர்

பொதுவாக,சொல்ல வந்ததை தெளிவாக, நயத்துடன், தேர்ந்த சொற்களைக் கொண்டு வெளிப்படுத்துவதே கவிஞர்க்கும் கவிதைக்கும் அழகு என்று நாம் கொள்ளலாம்.

இக்கவிதைத் தொகுப்பில் மொத்தம் 96 கவிதைகள் உள்ளன. பல்வேறு பாடுபொருள்களில் கவிஞர் மஞ்சு கவி படைத்திருக்கிறார். தமிழ் மொழி மீது கொண்ட காதலால் முதல் மூன்று கவிதைகளைத் தாய்மொழி குறித்து எழுதி இருக்கிறார். அடுத்து தாய், தந்தை, காகம், மாடு, மீன், நாய், வாழை,

வண்ணத்துப்பூச்சி, யானை, காடு, ரயில்பெட்டி, மழை, பஞ்ச பூதங்கள் என்று பாடுபொருள்கள் வரிசை நீண்டு கொண்டே போகிறது. கவிஞரின் பரந்து விரிந்த இரசனையை இப்பாடுபொருள்கள் உணர்த்துகின்றன.
நல்ல கவிதை என்றால் அதில் சிறப்பான பொருண்மை இருக்க வேண்டும் ;அழகியல் இருக்கவேண்டும்;சொல்ல வந்த கருத்தை.... கவிதை தான் சுமந்து வந்த உணர்வுகளை அப்படியே கடத்த வேண்டும். அதுவே சிறந்த கவிதை.

நம் தாய்மொழி தமிழுக்கு 60 க்கும் மேற்பட்ட அடைமொழிகள் உள்ளன. நூலாசிரியர் இந்நூலில் தமிழை முத்து மொழி என்றழைத்து பெருமிதங்கொள்கிறார். அன்னைத் தமிழைக் கண்ணெனக் காப்பதே நம் கடமை என்று சொல்லுமிடத்து கவிஞரின் மொழிப்பற்று மேலோங்கி நிற்பதை நன்குணர முடிகிறது. அன்னைக்கும், தந்தைக்கும் அவர் எழுதியிருக்கும் கவிதைகளில் அவருடைய அன்புள்ளம் வெளிப்படுகிறது.

குயில் தோப்பிலிருந்து ஒரு குரல்
மாலுடம் மிழை மாயத் தமிழ்கொண்டு மரபுக் கவிதைகளை நெய்யும் கவிஞர் மஞ்சுளா சுந்தரி அவர்களின் "குயில் தோப்பில் இருந்து ஒரு குரல்" என்னும் இந்தத் தொகுப்பைக் கையில் எடுத்தபோதே, இனிய இசை லயம் இதயத்தில் தவழ்கிறது. எளிய மரபைக் கைப்பிடித்து, சந்த ஒழுங்குடன் கவிதைகளைப் படைத்து, தன் தனித்துவத்தை நிலைநாட்டி வருகிறார். அதற்காகவே நாம், கையொலியுடன் அவரைப் பாராட்டவேண்டும். வெறும் கற்பனையின் வீதிகளில் கண்செருகப் பயணிக்காமல், ஈரம் மிகுந்த இயற்கையையும், உன்னதமான உயிரினங்களையும், காதலுடன் கொண்டாடுகிறார் கவிஞர்.
- ஆரூர் தமிழ் நாடன்
சொற்சுவையோடும் பொருட்சுவையோடும் எளிதில் விளங்கும் வண்ணம் கவிஞர் மஞ்சுளா பல்வேறு பாடுபொருள்களில் தன் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தியுள்ளார். நல்ல தமிழ் மரபில் வந்தவர் என்பதை இவர் கவிதைகள் பறைசாற்றுகின்றன. இவரின் சொற்கோலங்கள் பல வண்ணங்களில் நெஞ்சம் கொள்ளை கொள்கின்றன.
கவிஞர்.பொமளா ராஜசேகர்
விலை ரூ. 150/-
மஞ்சுளாகாந்தி (மஞ்சு)

"முண்டாசுக் கவிஞனை முழுதாய்ப் படித்திட்டால் கொண்டாடும் அறிவுடனே கோடி நன்மை பெற்றிடலாம்" என்று பாரதியின் புகழ் பேசுகிறார் கவிஞர். பெரும்பாலும் எல்லா நேரங்களிலும் கவிதையில் பயின்று வரக்கூடிய சொற்கள் தேர்ந்த சொற்களாக இருத்தல் சிறப்பு. சந்த நயம் மிக்க கவிதைகள் மனப்பாடம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் அப்படியே இலகுவாக நம்முடைய மனத்தில் பதிந்து விடும். கம்பராமாயணத்தில் ஒரு பாடல் உண்டு. இராமனுக்கும் இராவணனுக்கும் போர் நடக்கும் நேரம் கும்பகர்ணனை போருக்கு அனுப்ப வேண்டிய சூழல். கும்பகர்ணனை உறக்கத்திலிருந்து எழுப்புவது அத்தனை எளிதல்ல. இராவணன் வீரர்களை அனுப்பி கும்பகர்ணனை எழுப்பிப் போருக்குத் தயாராக்குங்கள் என்று கட்டளையிடுகிறான் .வீரர்கள் பெரிய பெரிய இரும்பு உலக்கை கொண்டு கும்பகர்ணனை தலையிலும் தோளிலும் அடித்து எழுப்ப கூமுற்படுகின்றனர்.அந்த சூழலில் ஒரு பாடல், அப்பாடலில் உலக்கையைக் கொண்டு இடிக்கும் போது எழுகின்ற ஓசையை ஒத்திருக்கும் சொற்கள் வந்து விழுந்து தெரிக்கின்றன. அதுவே இப்பாடலின் சிறப்பு. கவிஞர் மஞ்சுளா காந்தி 'வண்ணம் கொண்ட' என்ற தலைப்பில் எளிய ,தேர்ந்த சொற்களைக் கொண்டு கவியொன்றைப் படைத்திருக்கிறார். இக்கவிதையை அங்கங்கே சற்றே நிறுத்தம் கொடுத்து வாசிக்கும் பொழுது அழகியலை வெளிப்படுத்தும் சிறந்த கவிதையாக மிளிர்கிறது.

"ஓடுகொண்ட ஓர் உருவாய்..
ஒற்றை இலை குடியேறி.
கூடு செய்து குடிபுகுந்து
கூட்டுப் புழு ஆகு முன்பு..
கம்பளிப் போர்த்தி நின்று..
காண்போரை அச்சுருத்தி..
வம்பெனத் தொங்கிக் கொண்டு..
வாஞ்சையாய் வளைந்திருந்து.
தலையாலே வெளியேறி.....
தன்னம்பிக்கைப் புகட்டி..
கலையாக வரைந்திட்ட
கண்கவரும் ஓவியம் போல்..
சிலிர்த்துப் பறந்து வரும்..
சிங்காரம் நீயன்றோ!!

கவிஞர் மஞ்சுளா காந்தி

என்று வண்ணங்களால் நம்மைச் சுண்டியிழுக்கும் வண்ணத்துப்பூச்சியைக் கவிஞர் இரசித்து எழுதியிருக்கும் முறை மிகவும் அருமை

அடுத்து ,சில கவிதை வரிகளைப் படிக்கும்போது நம் கவிஞர் உணவியல் துறையில் பட்டம் பெற்றவர் என்பது நன்றாகவே தெரிகிறது... வாழையடி வாழை என்ற தலைப்பில் ஒரு கவிதை

"பூவை உண்டால் புண் ஆறும். தண்டெடுத்து தாளித்து உண்ண தாக்கி வென்ற நோய்கள் தீரும் .... வழிநடத்தி வம்சம் காக்கும் என்று வாழையினுடைய மருத்துவ பயன்களைக் குறிப்பிடுகிறார்.

ஒரு படைப்பு என்பது சமுதாயத்திற்கு ஏதேனும் ஒரு செய்தியைத் தர வேண்டும். கவிஞர் மஞ்சுளா காந்தி இத்தொகுப்பு வழியே தன்னம்பிக்கை வரிகளை நமக்கு அளித்திருக்கிறார்.

"கரையினைத் தொட முயல்வதாலேயே அலைகள் இங்கு அழகு... மண்ணைத்தொட முயல்வதாலேயே மழையும் இங்கு அழகு... விண்ணைத் தீண்ட முயல்வதாலேயே முகிலும் இங்கு அழகு... விருட்சமாக முயல்வதாலேயே விதையும் இங்கு அழகு"... என்ற கவி வரிகள் அவருடைய சீரிய சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. இப்பூவுலகை இயக்கிக் கொண்டிருக்கும் இயற்கையின் மீது காதல் கொண்டவர் நம் நூலாசிரியர்.

"குக்குடம் கூவி நிற்க!
குறுத்தோலை கண் சிமிட்ட!
கொண்டல் வழி நடந்துவந்த!
கொட்டருவி குதூகலிக்க!
ஆம்பல் பூத்திருக்க!
ஆவினங்கள் அசைபோட!
வாடை வருடி வர!
வண்டினங்கள் பண்பாட.."

என்று தன் கவி வரிகளால் இயற்கையை வர்ணிக்கிறார்.

பெண்மைக்கே உரிய மன உணர்வுகளை தாய் வீடு என்னும் தலைப்பில் அழகாகத் தந்திருக்கிறார் மஞ்சுளா காந்தி

ஒட்டி வச்ச நெத்திப் பொட்டு..
ஒன்னுரெண்டு மிச்சமிருக்கு!
கட்டியிருந்த தாவணியோ..
கனிச்சமாகி கைத்துணியாச்சி!

போத்தியிருந்த மஞ்ச போர்வை..
புதுத் தலகாணி சட்டையாச்சி!!
பாத்துப் பாத்து செஞ்ச கூடை.
பத்திரமா பரணுக்குப் போச்சி!!

தாய் வீட்டு தரிசனம்!
தன்நிகரில்லா சந்தோஷம்! என்கிறார் கவிஞர்.

96 கவிதைகள் இடம்பெற்றுள்ள இத்தொகுப்பு கவிஞர் மஞ்சுளா காந்தியை கவிதை உலகில் உயர்ந்த இடத்திற்கு அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை

நிறைவாக சில வரிகள்....

குயில் தோப்பிலிருந்து ஒரு குரல்...
இக்குரலில்
மொழிப்பற்று
மேலோங்கி நிற்கிறது...
அன்பு
அரவணைக்கிறது...
பாதகரைக் காண்கையில்
பாரதி கண்ட
புதுமைப் பெண்ணாய்ப்
பொங்கி எழுகிறது....
பஞ்ச பூதங்களையும்
பைந்தமிழ்ச் சொற்களால்
பாடி வருகிறது..
கடலலைகளையும்
கை வளையல்களை
கால்
கொலுசுகளையும்
கவிதைகளாக்கி
மனக்கதவைத்
மெல்லத் தட்டுகிறார்
மஞ்சு.....
புரட்டிப் பாருங்கள்
பக்கங்களை..
உங்களுக்கும்
கேட்கலாம்
குயில் தோப்பிலிருந்து ஒரு குரல்...

மீண்டும் சந்திப்போம்...

அடிமைப் பெண்ணின் உரிமைக்குரல் (கிராமத்துச் சிறுகதைகள்)

மு.செந்தாமரை
எழுத்தாளர், கோவை

படிக்காத பாமர கிராமத்து மக்களின் வாழ்வியலில் மன அழுத்தங்கள் வரும் போது தங்களுக்குள் வரும் பிரச்சினைகளை அனாயாசமாக கையாண்டு வாழ்வின் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்து விடுவார்கள் என்று கூறுகிறார் எழுத்தாளர் சம்சுல் ஹூதா பானு.

இவர் பிறந்து வளர்ந்த ஊரான முதுகுளத்தூர், ராமநாதபுரம் மாவட்டம் பட்டணமும் அல்லாத குறுகிய கிராமமும் அல்லாத தனது கிராமத்து வாழ்வியலில் இவர் கற்றுக் கொண்ட பாடங்கள் நகரத்திற்கு வந்தும் ஊர் மண்ணின் மேல் கொண்ட நேசம் உற்றார் உறவினர் மேல் கொண்ட பாசம் இவரது ஊர் சார்ந்த மண் மணக்கும் எதார்த்தமான மக்களோடு பெண்ணின் வலிகள், கனவுகள் புதைக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இறுதியில் துணிவோடு தங்கள் வாழ்வை எதிர்நோக்கும் பாங்கினை சிறுகதைகளாகத் தந்துள்ளார்.

கிராமத்தில் வாழும் பெண்களின் தன்னம்பிக்கை வாழ்வு இன்றைய நகரத்து இளைய தலைமுறை பிள்ளைகளும் அறிய வேண்டிய ஒன்று. வாழ்வியல் ஏற்றத்தாழ்வு , மதப் பாகுபாடு, சாதி பாகுபாடு இல்லாத மனிதர்கள் வேண்டும் என்று தனது கதைகளில் வலியோடு பல பெண்கள் தங்கள் வாழ்வில் தங்களது எதிர்காலக் கனவுகளை நிறைவேறாமல் சிக்குண்டு சிறைப்பறவையாக இருப்பதையும் பெண்ணிற்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளை பற்றியும் தனது கதைகளிலே உணர்வுப்பூர்வமாக கூறியிருக்கிறார்.

கிராமத்துச் சொல்லாடல்கள் வாசிக்க வாசிக்க ஆர்வத்தை தூண்டியது. துந்தனா - சுக்குக் காப்பி விற்பவர் ஒரு மாற்றுத்திறனாளி பெண்ணிற்கு வாழ்வு கொடுக்கும் ஒரு ஆணாக, அம்மா, அத்தாவாகிறாள் ஜரீனா - ஏழ்மையால் திருமணம் அமையாத பெண் வாழ்வில் துயரத்தின் எல்லைக்குச் சென்று தன்னால் தன் தம்பி தங்கையைக் காப்பாற்ற முடியும் என்று துணிவோடு தன் வாழ்க்கையை துவங்குகிறாள்.

படிப்பில் மிகவும் சுட்டியான ஒரு பெண் ஊர் பழக்க வழக்கங்களுக்கு கட்டுப்பட்டு பூப்பெய்திய உடனே திருமணம், மாற்றுத்திறனாளி குழந்தையை பெற்றதால் கணவனால் கைவிடப்பட்டு மனதால் குழந்தையாய் இருக்கும் அந்த மாற்றுத்திறனாளி குழந்தையும் எவனோ ஒரு மிருகம் வதம் செய்து கருவுற்றக் கதையின் முடிவு கண்களில் நீரை வரவைத்தது.. மாடத்தீ தாழ்த்தப்பட்ட பெண் என்றால் ஏளனம் தான் என்று அந்த கிராமத்துக் காட்சிகளை கண்முன்னே கொண்டு வந்தது.



இவரது எழுத்துக்கள் கிராமங்களின் அழகு பாரம்பரியங்கள் பேச்சு வழக்கு சொல்லாடல்கள், திருவிழாக்கள் , அடித்தட்டு வாழ்க்கை முறை, மதப் பாகுபாடற்ற நட்புகள் என்று பெண்கள் பல்வேறு வகைகளில் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்வுப்பூர்வமாக பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக தனது கதைகளிலே எடுத்துரைத்திருக்கிறார் .

சிக்கந்தா மலை , அழகர் என பதினைந்து சிறுகதைகளும் ஒவ்வொரு வகையான பெண்ணை மையப்படுத்தி இருந்தது. மேலும் இவர் மிகச் சிறந்த கதைகளை எழுத வேண்டும் புத்தகங்கள் பல படைக்க வேண்டும். முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் எழுத்தாளர் எழுதியுள்ளார்.இந்நூலை வாசிக்க எனக்கு வாய்ப்புக் கிட்டியதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூல் அனைவரின் கரங்களையும் சென்று சேர வேண்டும். பெண்களால் பெண்ணின் வலிகளை உயிரோட்டமாக எழுத முடியும் என்பதை நிரூபித்துள்ளார்.

தாலி கட்டச்சொன்ன பெரியார்

தாலி பெண்களுக்கு அடிமைச்சின்னம் என்று சொன்ன தந்தை பெரியாரே ஒருமுறை தாலி கட்டச்சொல்லி சொன்ன நிகழ்வு உண்டு தெரியுமா?

கல்வித்துறையில் இயக்குநராக இருந்தவர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள். அவரைத்தான் தாலிகட்ட சொன்னார்.

அய்யா மீது அளவற்ற பற்று கொண்டவர் அவர். அய்யாவுடைய கொள்கைகளை முழுமையாக பின்பற்றியவர். அவர் பெரியாரின் தலைமையில் ஜாதி மறுப்புத் திருமணம் செய்ய வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தவர். அதற்காக தன்னுடைய குடும்பத்தினரை பகைத்துக் கொண்டு வீட்டுக்கு தெரியாமல் திருமணம் செய்ய முடிவெடுத்து அய்யாவிடம் ஒப்புதல் வாங்குவதற்காக சென்னைக்கு வந்தார். அப்போது அய்யா அவர்கள் இவர் திருமணம் செய்ய நினைத்த பெண் தேவதாசி இனத்தை சேர்ந்தவர் என்பதால் "அந்த சமுதாயம் குடும்ப வாழ்க்கை என்ற ஒன்று கிடைக்காமல் பெரிதும் ஏமாற்றப்பட்ட சமுதாயம்! ஆகையால் நீங்கள் தாலி கட்டுவதற்கு இசைந்தால் அவர்களுக்கு சிறிது மகிழ்ச்சி, மனநிறைவு கிடைக்கும். பிறகு சிறிது நாள் கழித்து கழற்றி விடலாம்" என்று கூறினார். எந்த பெரியார் தாலி வேண்டாம் என்று சொல்வாரோ அவரே தேவதாசி சமுதாயத்தில் பெண்கள் நிலை கண்டு இப்படி சொல்லியிருக்கிறார் என்கிறபோது தந்தை பெரியார் என்று சொல்வதைவிட வேறு எப்படி சொல்லமுடியும்!



குடிகாரக் கணவனுக்கு....

என்றைக்காவது ஒருநாள்
நீ நிதானத்துடன் வீடு நுழைந்து
என்னை
இறுக அணைத்துக்கொள்வாய் என்றிருந்தேன்.

என்றைக்காவது ஒருநாள்
பொழுது சாய்ந்து திரும்பும்போது
உனக்கு ஏதாவது வாங்கிவரட்டுமா என்று
கேட்பாயென ஏங்கியிருந்தேன்

என்றைக்காவது ஒருநாள்
எனது கைகளைப் பிடித்துக்கொண்டு
பெரிய பேரழகியென்று உன்னைக்
கட்டியிருக்கிறேன் பாரெனக்
கிண்டல் செய்யமாட்டாயா என்று
காத்திருந்தேன்

என்றைக்காவது ஒருநாள்
காய்ச்சலில் விழுந்தாலாவது
ஒருவாய் சோறூட்டி விடுவாயோ என்று
காய்ச்சலை அழைத்துக்கொண்டிருந்தேன்

என்றைக்காவது ஒருநாள்
என் நெற்றியைப் பிடித்தொரு முத்தம்?
வேண்டாம்.
காதலாய் ஒரு பார்வை
உனது கண்களில் ஒளிராதா?என்று
உன்னையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

என்றைக்காவது ஒருநாள்
இரவில் குடித்து நிலைகுலைந்து சரிந்தாலும்
பகலில் என்னைத் தேடுவாயென
நாளொவ்வொன்றின் விடியல் பொழுதுகளில்
கண்களைத் திறந்தபடியே கனவுகளில்
நீந்திக்கொண்டிருந்தேன்.

ப்ச்...
இன்னும் அந்த ஒருநாள் வந்துசேரவில்லை.
கால்களில் மாட்டும் செருப்பைக்கூட
அத்தனை போதையிலும் தேடிப்பிடித்து
மாட்டிக்கொள்கிறாய்.

நீ நீயாயிருந்தும்
நீயல்லாத ஒரு நிலையில்

சாலையில் செத்துக்கிடக்கும் நாய்களை
காக்கைகள் குதறுவது போல்
தினமும் என்னைக் கலைத்துப்போடும் பொழுது
எனக்குத் தோன்றும்

ஆங்காங்கே அலைந்துவிட்டு
வாசற்படியில் செருப்பைக் கழற்றுகிறாய்.
வீட்டிற்குள் நுழைந்து
என்னை மாட்டிக் கொல்கிறாயென்று.
செருப்பறுந்தால் தைக்கத் தெரிந்த உனக்கு
நான் நைந்து கிடப்பது மட்டும்
ஏனோ தெரியவில்லை.

உன்னைச்
சகித்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லைதான்.
இக்காலத்தில்
எத்தனையோ மாற்றங்கள் நுழைந்துவிட்டாலும்
உன்னைப் பிரிந்துவிடக் காரணங்கள் சரியாயிருந்தாலும்
கணவனை விட்டு விலக விரும்பாதப் பெண்களின் கூட்டத்தில்
நானுமொருத்தியாகிப் போயிருக்கிறேன்.

சாவதற்குத் துணியுமிந்தப் பாழாய்ப்போன மனதுக்கு
உன்னைப் பிரிதலென்பது
சாவைக்காட்டிலும் வேதனையாய்க் குத்துகிறது.
தொலைந்து போ...
செய்யாதப் பாவங்களுக்கானத் தண்டனை
நான் சுமப்பதோடு நின்று போகட்டும்.

என் பிள்ளையின் முதுகில்
எனது கனவுகள் பலிக்கட்டும்.

இப்படிக்கு...
குடிகாரனின் மனைவி...

...கா.ரஹ்மத்துல்லாஹ்..

தன் பிள்ளை தானே கெடும்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

ரமணியை அனுப்பிவிட்டு வனரோஜா வீட்டிற்குள் வந்தாள். காபி குடித்துக் கொண்டே இருந்த தனபாலன் "என்னவா ரகசியமா பேசிட்டு போகுது" என்று கேட்டான் "ஆமாம் அவளுக்கு என்ன, அவள் மாமியார் ஆம்பள புள்ள பெறச் சொல்லுதாம். ஏற்கனவே ரெண்டு பொட்டப்புள்ள இருக்கு. எந்த சொத்து பத்து வச்சிருக்கா? ஆம்பள புள்ள பெத்து அதை கட்டி ஆளப் போகுது? சும்மா கிழவி பேச்சை கேட்டுக்கிட்டு நாளை தள்ளிக்கிட்டே போறாள். நமக்கென்ன? சொன்னால் கேட்டால் தானே? இனி அஞ்சாவது மாசம் வருவாள். அப்புறம் அதை துண்டு துண்டாக தான் வெட்டி எடுக்கணும்" என்று சொல்லி விட்டு அடுப்படிக்குள் போய் விட்டாள். தனபாலனுக்கு புரிந்தது அவன் சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பி விட்டான்.

அவன் வாசலுக்கு போகும்போது உள்ளே இருந்த வனரோஜா "யாரோ உங்க பிரண்டு ஒய்ஃபுக்கு சொன்னீங்களே அது என்னன்னு கேட்டுட்டு வாங்க" என்று சத்தம் போட்டு சொன்னாள்."சரிசரி கேட்கிறேன், நல்லவேளை ஞாபகப்படுத்தின, இல்லன்னா மறந்தே போய் இருப்பேன். அவனைப் போய் பார்த்துட்டு" என்று சொல்லிவிட்டு செருப்பை மாட்டிக் கொண்டான்.

வனரோஜா தனக்கு காபி போட்டுக் கொண்டு வந்து ஹாலில் உட்கார்ந்து குடித்தபடி மகளிர் சுய உதவி குழு நோட்டை எடுத்து விரித்து வைத்தாள்.மகளிர் சுய உதவிக் குழுவின் தலைவியாக இருக்கும் வனரோஜா பல பெண்களுக்கும் பல விதமான உதவிகளைச் செய்து வருகிறாள். அவர்களின் பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில்; அவளுக்குத் தெரிந்த அந்த ஒரே பள்ளிக்கூடத்தில் மட்டும்தான் கொண்டு போய் சேர்ப்பாள். அவளுக்குத் தெரிந்த ஃபேன்சி ஸ்டோரில் அந்த பிள்ளைகளுக்கான ஸ்கூல் பேக், பென்சில் பாக்ஸ், பிரவுன் பேப்பர் போன்றவற்றை கடனில் வாங்கிக் கொள்ளும்படி சொல்லிவிடுவாள்.

சிலருக்கு அடுத்தவர் பெயர் போட்டு கடன் கொடுப்பாள். இவ்வாறு கொடுக்கும் கடனுக்கு மகளிர்குழு வட்டி கிடையாது. அஞ்சு வட்டி வாங்குவாள். சில பெண்களுக்கு வங்கியிலும் கடன் வாங்கிக் கொடுப்பாள்.அப்போது அந்த பெண்களிடம் வாங்கி

கொடுத்த கடனுக்கு நூற்றுக்கு ஐந்து சதவீதம் கமிஷன் பெற்றுக் கொள்வாள். இப்படியாக இவள் பலப்பல உதவிகளைச் செய்து வந்தாள்.

அருகில் இருக்கும் அமுதா மருத்துவமனைக்கு இவள் அடிக்கடி போவாள். தங்கள் குழுவில் யாருக்காவது சுகமில்லை என்றால் டாக்டர் அமுதாவிடம் தான் அழைத்துச் செல்வாள். அமுதா அம்மா ரொம்ப நல்லவங்க வனரோஜா அழைத்துக் கொண்டு வரும் அனைவருக்கும் அவ்வப்போது இலவச மருந்துகளை கொடுப்பார்கள். சில சமயம் கையில் காசில்லை என்றால் கூட ஃபிரியாக ஊசி போட்டுவிடுவார்கள். இதனால் அமுதா அம்மாவை போய் பார்ப்பது என்றால் குழு பெண்களுக்கு மிகவும் பிடிக்கும் சிலருக்கு நாள் தள்ளிப் போகும் போது கூட அம்மாதான் மாத்திரையோ ஊசியோ போட்டு உதவுவார்.

வனரோஜா ஆதாயம் இல்லாமல் எதையும் செய்ய மாட்டாள். சர்க்கரையாகப் பேசி காரியத்தை சாதித்துக் கொள்வாள். இன்று ரமணியை அமுதாவிடம் அழைத்துப் போய் விட வேண்டும் என்று ஒரே குறிக்கோளுடன் நயமாகப் பேசி மாமியாரிடம் சம்மதம் வாங்கிக் கொண்டு வரும்படி அனுப்பி இருக்கிறாள். எப்படியும் நாளைக்கு ரமணியால் 2000 ரூபாய் கிடைத்துவிடும். இந்த சந்தோஷக் கனவுடன் அவள் மகளிர் சுய உதவிக்குழு நோட்டை வரிசை வரிசையாக பார்த்துக்கொண்டு வந்தாள்.

ராமலட்சுமி மூன்று மாதமாக பணம் செலுத்தவில்லை போய் பார்த்தால் என்ன; எப்போது போனாலும் புலம்பத்தான் செய்வாள்? ஒரு காபி கூட கிடைக்காது. ஒவ்வொரு வீட்டில் என்னென்ன தருகிறார்கள்? பணம் கொடுக்கிறார்களோ இல்லையோ காபி சாப்பாடு பழம் எல்லாம் கிடைக்கும். ஆனால் இந்த ராமலட்சுமி தரித்திரம் பிடித்தவள். போனால் எதையாவது புலம்பிக் கொண்டே இருப்பாள். என்ன செய்வது பணம் வந்தாக வேண்டுமே இல்லையென்றால் பேங்க்காரனுக்கு யார் பதில் சொல்வது? போய்க் கேட்டு விட்டு வருவோம். நாலு வார்த்தை நறுக்கென்று நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாவது போல கேட்போம் என்று ஆத்திரத்துடன் புறப்பட்டாள்.

ராமலட்சுமி வீட்டில் அவள் மகள் மூன்று பிள்ளைகள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் புளியமுத்து வைத்து ஏதோ விளையாடிக் கொண்டிருந்தனர். ஒத்தையா ரெட்டையா விளையாடி இருப்பார்கள். ஏனென்றால் கைகளை மூடிக் கொண்டுதான் இருந்தார்கள்.

"எங்கடி உங்க அம்மா?

அம்மா வெளிய போய் இருக்கு. காசுக்கு தானக்கா ஒரு இடத்துக்கு போய் இருக்காங்க.இப்ப வர்ற நேரம் தான்க்கா இருங்க" என்றால் ஒருத்தி.

"உங்க அம்மா நான் வரும்போது இருக்கமாட்டேங்குது. காசு கொண்டு வந்து கட்ட மாட்டேங்குது. நீங்க என்னடி வேலை செய்றீங்க" என்று வனரோஜா கேட்டாள்.

"அக்கா நாங்க படிச்சுக்கிட்டு இருக்கோம்கா. எங்களுக்கு ஃபீஸ் கட்ட தான் ஒரு இடத்துல காசு கேட்டு போயிருக்கு எங்க அம்மா வேலை பார்க்கிற வீட்ல அவங்க பிரெண்ட்ஸ் ஒருத்தவங்க ஏழைப் பிள்ளைகளுக்கு பீஸ் கட்ட பணம் குடுப்பாங்களாம். அவங்க கிட்ட போயி எங்க ரெண்டு பேருக்கும் பள்ளிக்கூடத்துக்கு பணம் கட்டுவாங்கலான்னு கேட்க போயிருக்கு".

பாவம் அந்த பிள்ளைகள் அப்பாவித்தனமாக உண்மையைச் சொல்லி விட்டனர். வனரோஜா அந்த பெண்களை கடுப்புடன் பார்த்தாள். பின்பு வாசலில் கிடந்த ஒரு கல்லில் உட்கார்ந்தாள். தரையைப் பார்த்துக் கொண்டே அமைதியாக இருந்தாள். மூன்று பிள்ளைகளும் நின்று கொண்டிருந்தன. அவர்களுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை, நிமிர்ந்து பார்த்தாள்.

"இந்த மூன்றும் படிச்சு என்ன பண்ணப் போகுது எங்கயாவது வேலைக்கு அனுப்பலாமே என்று யோசித்தவள், என்னடி படிக்கிறீங்க என்று கேட்டாள் "அக்கா நான் பிளஸ் 2 படிக்கிறேன், தங்கச்சி டென்த் படிக்கிறாள். எங்க அக்கா படிக்கலக்கா. வீட்லதான் இருக்கு" என்றாள் ஒரு பெண்.

தேவி வந்ததிலிருந்து இவள் மட்டும்தான் பதில் பேசினாள். மற்றவர்கள் அமைதியாக நின்று கொண்டிருந்தனர். சற்று தள்ளி மூன்று சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தனர் அவர்களும் அந்த வீட்டுப் பிள்ளைகள் தான்.

"சரி உங்க அம்மா வந்தா தேவி அக்கா வந்துட்டு போனாங்கன்னு சொல்லு. பணத்தை கொண்டு வந்து குடுக்க சொல்லடி" என்று சொல்லிவிட்டு விறுவிறு என்று மனதுக்குள் ஒரு யோசனையுடன் நடந்தாள்.

வனரோஜா வேகமாக நடந்து போய் பெரிய பங்களாவும் இல்லாமல் நடுத்தர வீடும் இல்லாமல் இருந்த ஒரு பெரிய வீட்டுக்குள் போனாள். இவள் இரும்பு கேட்டை திறந்த சத்தம் கேட்டு உள்ளேயிருந்து ஒரு பெண் ஜன்னல் வழியாக பார்த்து விட்டு "வாங்கக்கா" என்று கதவைத் திறந்தாள். உள்ளே போய் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டுஇருந்தாள். காபி டிபன் எல்லாம் கிடைத்தது, மெல்ல கனியை எய்தாள்.

"எப்ப நீ கடைக்கு போகணும்" என்று கேட்டாள்.

"மணி 6 ஆயிடுச்சு இல்ல, இப்ப நான் போனேன்னா அவர் பஜாருக்கு போவாரு. அவர் வரஎட்டு எட்டரை ஆகும். இந்த பிள்ளைங்க டியூஷனுக்கு போயிட்டு வர்றதுக்குள்ள வந்து விடுவேன். அப்புறம் அவர் கடையை பாத்துக்குவார்" என்றாள். அதற்கு வனரோஜா,

"பிரியா நான் சொல்றதை கேளு. உங்க கடைக்கு காலைல இருந்து சாயந்திரம் வரைக்கும் ராத்திரி ஒன்பது மணி வரைக்கும் இருக்குற மாதிரி ஒரு பிள்ளையை வேலைக்கு போடு. மத்தியானம் உங்க வீட்டுக்காரர வீட்ல வந்து சாப்பிட்டு விட்டு படுத்து தூங்கி எந்திரிச்சு போகச் சொல்லு; அல்லது மத்தியானம் பஜாருக்கு போயிட்டு வரச் சொல்லு. சாயந்திரம் அவரை கடையில் உட்காரச் சொல்லு. நீ கடைக்கு போகாதே. நீ பாட்டுக்கு ராஜாத்தி மாதிரி வீட்டில் இரு. உன் பிள்ளைகளை படிக்க அனுப்பிட்டு, கொஞ்ச நேரம் உட்கார்ந்து டிவி பாரு, பிள்ளைங்க படிச்சிட்டு வந்த பிறகு, அதுகளுக்கு ஏதாவது டிபன் பண்ணி குடு. சரியா, அத விட்டுட்டு நீயும் போய் கடையில் உட்கார்ந்துகிட்டு ரெண்டு பேரும் அல்லாடுறிங்க. ஒரு பிள்ளையை வேலைக்கு போடு" என்று மெதுவாக தன் அஸ்திரத்தை எடுத்து விட்டாள்.

அதற்கு பிரியா,"அக்கா ஒரு பிள்ளையை வேலைக்கு வச்சா அதுக்கு சம்பளம் கொடுக்கணும். எங்கக்கா நல்ல பிள்ளைகள் கிடைக்கிது".

"நீ எதுக்கு கவலைப்படுற, நான் உனக்கு நல்ல புள்ளையா கொண்டு வர்றேன். எவ்வளவு சம்பளம் கொடுக்கலாம். நீயே சொல்லு. காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணி வரை அங்கேயே உட்கார்ந்து இருக்க சொல்றேன். நீங்க கல்யாணத்துக்கு போகலாம்; நல்லது கெட்டதுக்கு ஜோடியாக போகலாம்.சினிமா ஷாப்பிங்குனு சேர்ந்து போகலாம் சொல்லு" என்றாள்.

"சரிக்கா எங்க வீட்டுக்காரர் கிட்ட கேட்டு சொல்றேன்" என்றாள்."சரி நீ கேட்டு சொல்லு, நான் ரெண்டு நாள் கழிச்சு காலையில புள்ளைய கூட்டிட்டு வரேன்" என்று சொல்லிவிட்டு கிளம்பினாள்.

வனரோஜா மனதில் கொஞ்சம் நிம்மதி. வீட்டுல சும்மா இருக்கிறவள இங்கே அனுப்பிரலாம். இனி அடுத்த ரெண்டு பிள்ளையையும் அந்த வீட்டை விட்டு கிளப்பி விட்டால் தான் நமக்கு மாதாமாதம் பணம் வரும், என்று முடிவு செய்தாள்.

இவளுகளுக்கு கடன் கொடுத்துவிட்டு நம்ம இவளுக்கு வேலை வாங்கி கொடுத்து அப்புறம் கடன் வசூல் பண்ண வேண்டி இருக்கு என்ன கஷ்ட காலம் என்று புலம்பிக் கொண்டே வந்தாள்.

வீட்டிற்கு வந்தவள் அடுத்தது என்ன செய்யலாம் என்று யோசித்தாள்."அது ரொம்ப சின்ன பிள்ளையா இருக்கே அதை எங்கு அனுப்புவது?" என்று யோசித்தவளுக்கு திடீரென்று ஒரு ஞானோதயம் ஏற்பட்டது. அப்படி செய்வோம் என்ற முடிவுடன் ரெண்டு வீடு தள்ளி இருக்கும் ஆயாவை போய் சந்தித்தாள்.

"என்ன பள்ளிக்கூட வேலையெல்லாம்எப்படி இருக்கு என்று கேட்டாள். என்ன அம்புட்டு பிள்ளைக்கும் கால் கழுவி விடுற வேலை. இதெல்லாம் ஒரு வேலையா

என்று ஆயாம்மா சலித்துக் கொண்டாள். அப்போது பார்த்து தேவி தன் அஸ்திரத்தை எடுத்து வீசினாள்.

"எதுக்கு நீங்க அந்த வேலையை எல்லாம் செய்யுறீங்க நீங்க பிள்ளைகளுக்கு தலை சீவி பவுடர் போட்டு அந்த வேலை மட்டும் பாருங்க. இதுக்கெல்லாம் வேற ஒரு பிள்ளையை போட்டுக்கங்க என்றாள்."நீங்களே பெரிய டீச்சர் கிட்ட சொல்லுங்க" என்றார் ஆயாம்மா. மறு நாள் ஸ்கூலுக்கு போனாள் வனரோஜா. பெரிய டீச்சர் எனப்படும் தலைமை ஆசிரியையிடம் நைசாக பேசினாள்

"பாவம் கஷ்டப்படும் குடும்பம்; எட்டு பிள்ளைகள்; சாப்பாட்டுக்கே கஷ்டம்; நீங்கள் ஒரு சின்ன வேலை போட்டு கொடுங்கள்; என்று கேட்டாள். வேலையே இல்லையே என்றார் அந்த பெரிய டீச்சர்.

"ஆயிரம் ரூபாய் குடுங்க மேடம். ஆயாவுக்கு துணைக்கு பிள்ளைகளுக்கு கால்கழுவி விட வச்சுக்குங்க" என்றாள் வனரோஜா. உங்களுக்கு புண்ணியமா போகட்டும் அதைச் செய்யுங்க என்று கெஞ்சி கேட்டாள். 'சரிம்மா வரச்சொல்லுங்க' என்றார் அந்த மேடம்.நன்றி சொல்லிவிட்டு சந்தோஷமாக வெளியே வந்தாள் வனரோஜா.

மனதிருப்தியுடன் புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தாள். வாசலில் ரமணி உட்கார்ந்து இருப்பதை பார்த்தாள்."என்ன ரமணி உன் மாமியா என்ன சொல்லுச்சு? நான் எவ்வளவோ சொன்னேன்கா அது வேண்டாம்னு சொல்லுதுக்கா", "சரி சரி இதைச் சொல்லத்தான் வந்தியா? உனக்கெல்லாம் பெத்து போட்டு சீரழிஞ்சா தான் தெரியும்" என்று கோபித்து கொண்டாள். அவளுக்குள் ஆத்திரம் ரெண்டாயிரம் ரூபாய் போய்விட்டதே என பொருமினாள்.

மறுநாள் ராமலட்சுமியை பார்க்க தனியாகப் போகாமல் தன் வீட்டுக்காரர் ரிட்டயர்டு மிலிட்டரிகாரரை அழைத்துக்கொண்டு போனாள். அவரை விட்டு போலீஸ்காரரை போல மிரட்டி பேசச் சொன்னாள். பயந்து போன ராமலட்சுமி "இனி மாதாமாதம் பணம் ஒழுங்காக கட்டி விடுவதாக சொன்னாள்" அந்த நேரத்தில் எப்படி கட்டுவ நீ? உன் பிள்ளைகளை படிச்சு என்ன கலெக்டர் ஆகப் போகுதா? ஆளுக்கு ஒரு வேலைக்கு அனுப்பு என்றாள்.

அக்கா படிக்காம தான் நான் இவ்வளவு கஷ்டப்படுறேன். பிள்ளைகளாவது படிச்சு வரட்டும்.அவுங்களுக்கு பள்ளி கூட பணம் கட்டுறேன்னு ஒரு மிஸ் சொல்லி இருக்காங்க அதுக்குதான் அலைஞ்சுகிட்டு இருக்கேன்" என்றாள்."பிள்ளைகளுக்கு பீஸ் கட்டி அதை படிக்க வச்சுட்டு நீ பிச்சை எடுக்க போறியா? ஒழுங்கா இரண்டு பிள்ளைகளை வேலைக்கு அனுப்பு. ஒரு பிள்ளை மட்டும் படிக்கட்டும்" என்றாள். ராமலட்சுமி விழித்தாள். எந்த பிள்ளையை வேலைக்கு அனுப்புவது என்று யோசித்தாள்.

“இந்த பிளஸ் டூ படிக்கிற பிள்ளை படிக்கட்டும். வீட்டுல சும்மா உட்கார்ந்திருக்க மூத்தவளநான் ஒரு கடையிலசேர்த்துவிடுறேன் அனுப்பு. இந்த சின்னப்பிள்ள இருக்கு பாரு.இது என்னது ஒன்பது படிக்குதா? இதை நிறுத்திட்டு வேலைக்கு அனுப்பு அதை ஒரு ஸ்கூலுக்கு ஆயா வேலைக்கு உதவிக்கு அனுப்பு. நாளைக்கு இரண்டு புள்ளைய கூட்டிட்டு என் வீட்டுக்கு வர்ற. நான் வேலைக்கு சேர்த்துவிட்டதும் மாசம் மாசம் ஒழுங்கா வட்டி கட்டனும்” என்று கோபமாக சொல்லிவிட்டு போனாள்.

சின்னவளுக்கு ஆயா வேலைக்கு ஆயிரத்து இருநூறு ரூபாய் சம்பளம் பேசப்பட்டது. சம்பளத்தை ஆயாம்மா வாங்கி வனரோஜாவிடம் 200 ரூபாய் மாதாமாதம் ரகசியமாக கொடுத்துவிட வேண்டும் என்று ஒரு ஏற்பாடு. அந்த ஹெட்மாஸ்டர் அம்மாவிடம் பேசி உங்கள் பள்ளிக்கூடத்துக்கு எந்த உதவி வேண்டுமானாலும் கேளுங்கள் நான் செய்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு மாதம் 200 கிடைக்கும் மகிழ்ச்சியில் பிரியா வீட்டுக்கு கிளம்பினாள். பிரியாவும் தன் வீட்டுக்காரரிடம் பேசி வைத்திருந்தாள் தேவி அக்கா கொண்டு வந்து சேர்த்து விடும் பொண்ணுக்கு 2000 ரூபாய் சம்பளம் குடுக்கணும் என்று பேசி வைத்திருந்தாள். பாவம் அந்தக்கா அதுக்கு விட்டுக்காரருக்கு தெரியாம நாம் ஏதாவது குடுக்கணும் என்று முடிவு செய்திருந்தாள். வனரோஜா அக்காவிடம் தன் முடிவை சொன்னாள். சரிபா நமக்குள்ள என்ன என்று சொல்லிவிட்டு மகிழ்ச்சியோடு வீட்டுக்கு வந்தாள்.

இனி மாதாமாதம் ராமலட்சுமி மகளிர் சுய உதவிக்குழு பணத்தை கட்டிவிடுவாள். அத்துடன் இவளுக்கும் ஒரு தொகை கிடைக்க வழி செய்து கொண்டாள். இந்த ரமணி தான் கழுத்தை அறுத்து விட்டாள். அவள் மட்டும் சரி என்று சொல்லி இருந்தால் அமுதா அம்மாவிடம் அழைத்துச் சென்று அவளுக்கும் வயிற்றைக் கழுவி விட்டு இரண்டாயிரம் ஆயிரம் ரூபாய் டாக்டரிடம் வாங்கியிருப்பாள். கெடுத்துட்டா பாவி என்று திட்டிக் கொண்டிருந்த போது அவள் கணவன் உள்ளே வந்தான் “என் ஃபிரண்டு கிட்ட பேசிட்டேன். அவன் நாளைக்கு ஒய்ஃப்பை கூட்டிட்டு வரேன்னு சொன்னான். அமுதாம்மா ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு வரச் சொல்லிட்டேன். நீ கூட போயி இருந்து எல்லாம் பார்த்துக்கோ” என்றான்.

வனரோஜாவுக்கு ஒரே மகிழ்ச்சி. ரமணியிடம் விட்டதை இவர்களிடம் பார்த்துவிட வேண்டும் என்று சந்தோஷமாக இருவரும் சாப்பிட உட்கார்ந்தனர். வீட்டுக்குள் நுழைந்த அவர்களின் ஒரே மகன் நவீன் எஞ்சினியரிங் கல்லூரிக்கு போய் வருகிறான். அவன் “இன்னைக்கு என்ன சொல்லி அம்மாவிடம் பார்ட்டிக்கு ஐயாயிரம் கேட்கலாம்” என யோசித்தான். வாராவாரம் இப்படி பொய் சொல்வது அவனுக்கு சகஜமாகிவிட்டது. இன்னைக்கு வெள்ளிக்கிழமை தானே “நாளைக்கு ஜமாய்ச்சுடலாம்”னு தன் ரூமுக்குப் போனான்.

கொஞ்சம் நீ வேறுமாதிரி இருந்திருக்கலாம்

தவறிய ஒரு வாக்குக்காய்
நாளெல்லாம் குற்றவுணர்வில்
தேம்பாமல்
தூக்கி வளர்த்த நன்றிக்காய் நாயாக வாலாட்டாமல்
யார் பாவங்களுக்கோ முன்வந்து நீ சிலுவைகள் சுமக்காமல்
யார் கண்ணீருக்காகவோ நீ உன்
மனதை மாற்றிக்கொள்ளாமல்
யார் மகிழ்வுக்காகவோ நீ உன்
சிறகுகளை கத்தரித்துக்கொள்ளாமல்

கொஞ்சம்
நீ வேறுமாதிரி இருந்திருக்கலாம்

அன்பின் பாசாங்குகளை
விட்டொதுங்கி இருப்பவளாக
இல்லை என்பதை உறுதியாய் சொல்லத்தெரிந்தவளாக
யாரையும் எளிதில் மன்னிக்காதவளாக
யாருடனும் எதையும் பகிர்ந்துகொள்ளாதவளாக
யாருக்காகவும் எதையும் விட்டுக்கொடுக்காதவளாக

கொஞ்சம்
நீ வேறுமாதிரியாய் இருந்திருக்கலாம்

அன்பின் பெயரில்
யார் யாருக்காகவோ
உன்னை நீ பணயம் வைத்து
யார் யாரிடமோ உன்னை நீ நிரூபித்து
யார் யார் பொருட்டோ நீ உன் சுயம்
தொலைத்து

தோற்றுப்போய்
மனமுடைந்து
கதவடைத்து
இப்படி
அநாதரவாய்
தேம்பியழுவதற்குப்பதில்

நீ கொஞ்சம் சுயநலமாய்
கொஞ்சம் வைராக்கியமாய்
கொஞ்சம் பிடிவாதமாய்
கொஞ்சம்
அலட்சியப்போக்குடையவளாய்

இப்போதிருப்பது
போலல்லாமல்
கொஞ்சம்
நீ வேறுமாதிரி
இருந்திருக்கலாம்
இல்லையா

-ரிஸ்கா முக்தார்

பெண்ணின் பிரிவுகள் (குல மகளும் விலைமகளும்)

சோஃபியா சாக்ரட்டீஸ்
சென்னை.

கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் கி.மு.ஆறாம் நூற்றாண்டு வரை இருந்த சங்ககாலத்தில் பெண்களுக்கு என்று சில இலக்கணங்கள் வகுக்கப்பட்டன பெண்களை புதல்வன் தாய் என்றும் பரத்தையர் என்றும் இரு பிரிவாக பிரித்து இருந்தனர் கிழவால் என்பவள் இல்ல தலை வியாபால் இல்லத்தரசி அவால் கிழமை என்றால் உரிமை குடும்பத்திற்கு உரிமைப் பட்டவள் இல்லத்தின் அரசி இவளுடைய பண்புகளாக தொல்காப்பியம் பொருளியலின் கற்பியல் நூற்பா 150இல்

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்/ மெல்லியியல் பொறையும் நிறையும் வல்லிதன்/

விருந்து புறந்தருதல் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்

என்று விளக்குகின்றது. குலமகள் அல்லது இல்லத்தரசி என்பவள் கற்புடையவளாக, கணவனுக்குரிய காமம் நிறைந்தவளாக, நல்ல ஒழுக்கமும் பொறுமையும் நிறைந்த பண்பும் பெற்றவளாக விளங்க வேண்டும். வீட்டிற்கு வரும் புதியவர்களுக்கு விருந்தோம்புதலும் சுற்றத்தினரைப் பேணுதலும் அவர்களை அரவணைத்துப் பெரும் குடும்பமாக வாழ்வலும் அவளுக்குரிய பண்புகள் ஆகும். இன்றைக்கும் இந்நிலையில் பெரிய மாற்றம் எதுவும் வந்து விடவில்லை. எனினும் கற்புக்கான விளக்கம் சற்று மாறியுள்ளது.

பெண்ணின் உடலும் மனமும்

பெண்ணின் உடல், மனம் இரண்டும் ஆணின் உடைமைகளாகவே விளங்கின. ஒரு பெண்ணின் மனத்தில் அவள் கண்வனும் , கணவனுக்குப் பெற்ற பிள்ளைகளும் கண்வன் வீட்டார் பற்றிய சிந்தனைகள் மட்டுமே இருக்க வேண்டும். அவள் உடல் அவனது இச்சை தீர்க்கப் பயன்பட வேண்டும். உடலின் உழைப்பு நூறு சதவீதம் அவனது குடும்பத்தினருக்கே பயன்பட வேண்டும். மொத்தத்தில் ஒரு பெண் உடலளவிலும் மனதளவிலும் தன்னை உடமை கொண்ட ஒருவனுக்காகவே தன் உடல், பொருள், ஆவி என் அத்தனையையும் தத்தம் செய்ய வேண்டும்.

கற்பு வகைகள்

கணவன் மேலான அன்பு, பற்று பாசம் என்று மேலோட்டமாக விளக்கினாலும் கல் போன்ற உறுதியான உள்ளத்தோடு இருப்பது கற்பு ஆகும். நிழல் படா கற்பு, பிறர் நெஞ்சு புகா கற்பு என்ற வகையில் அந்நிய ஆடவரின் நிழல் கூட ஒரு பெண் மீது படக்கூடாது என்பது கற்புக்கான ஓர் இலக்கணமாகும். ஒரு பெண் தன் கணவனைத் தவிர வேறு ஆணைக் கண்டு கேட்டு ரசிக்காமல் இருப்பது என்பது பொதுவான கற்புப் பற்றிய புரிதலாகும். ஆனால் ஒரு பெண்ணைப் பிற ஆண்கள்

தன் மனதில் ரகசியமாக காதலித்தால் அது கூட கற்புக்கு இழுக்காகக் கருதப்பட்டது. தான் கணவன் அல்லாத மற்றவரை விரும்பினாலும் மற்றவர் தன்னை விரும்பினாலும் அதனையும் கற்புக்கேடாகவே கருதினர்.

பெண்மைக்குரிய நான்கு பண்புகளாக போற்றப்பட்ட அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்பதில் என்பனவற்றில் பயிர்ப்பு என்பது பிற ஆடவரின் காற்று கூட ஒரு பெண்ணின் மீது படக்கூடாது என்ற வரையறையை வலியுறுத்தியது.

புதல்வர்ப் பெறுதலும் சுற்றம் பேணலும்:-

பெண்ணுக்குரிய கடமைகளை எடுத்துக்கூறும் போது குடும்பம் சார்ந்த கடமைகள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது. குடும்பம் என்ற அமைப்பு உருவாவதற்கு குழந்தைகளே அடிப்படைக் காரணங்கள். எனவே குழந்தைகள் பெற்றுக் குடும்பத்தை விருத்தி செய்வதே ஒரு பெண்ணின் தலையாயக் கடமையாகும்.

'ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே'

என்று சங்ககாலப் பெண்பாற்புலவர் பெண்ணின் முதல் கடமையை குறிப்பிடுகின்றார்.

இரண்டாவது அக்குழந்தைகளையும் கணவனையும் கணவனின் சுற்றத்தார்களையும் பேணிப் பாதுகாப்பதாகும். இவர்கள் தவிர இவர்கள் குடும்பத்தோடு தொடர்புடைய பெரிய மாமனார், சின்ன மாமனார், நடு மாமனார், பெரிய மாமியார், சின்ன மாமியா,ர் நடு மாமியார், மச்சான், கொழுந்தன் இவர்கள் குடும்பத்தினர், ஓரகத்திகள் அவர்களின் வீட்டினர் என இவர்கள் குடும்பத்தோடு தொடர்புடைய மற்ற குடும்பத்தினரையும் *(extended family)* ஒரு பெண் அன்பு காட்டி மரியாதையுடன் ஆதரிக்க வேண்டும். இதனை சுற்றம் தழுவுதல் அல்லது சுற்றம் ஓம்புதல் என்பர். இதுவும் இல்லதரசிக்குரிய முக்கியக் கடமையாகும். இவர்கள் வீட்டுக்கும் விருந்தினராக வரும் நாட்களில் எத்தனை நாள் எத்தனை மாதம் தங்கியிருந்தாலும் முகம் சுளிக்காமல் அவர்களுக்கு வேண்டுவன வேண்டியாங்கு செய்து மகிழ்ச்சியோடு தனது வீட்டில் வைத்துக் கொள்ள வேண்டும்.

விருந்தினர் வருகை:-

விருந்தோம்பல் என்ற மிகச்சிறந்த சமூக விழுமியம் *(social value)* கணவரோடு வாழும் பெண்களுக்கு மட்டுமே கிடைக்கும் பெரும் பேறு என்று கருதப்பட்டது. ஏனெனில் கோவலனைப் பிரிந்த கண்ணகிக்கு அப்பேறு கிடைக்கவில்லை. தனித்து வாழும் பெண்கள் வீட்டிற்கு அதிதிகளோ உறவினர்களோ வந்து தங்கிச் செல்வது கிடையாது. சீதையும் இராமனை பிரிந்திருந்த வேளையில் விருந்து வரின் என்ன செய்வான் என்று வருந்துகின்றாள். எனவே விருந்தோம்புதல் என்பதும் சுற்றம் தழுவுதல் என்பதும் இல்லத்தரசிகளுக்குரிய முக்கிய கடமைகளாயின.

-அல்லிலாயினும் விருந்து வரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின் மெல்லியல்-

என்ற நற்றிணை (142) அடிகள் கற்புக்கரசியின் இலக்கணத்தை வரையறுத்துள்ளன. இரவில் கூட விருந்தினர் வந்தால் மகிழ்ச்சியோடு அவர்களை வரவேற்று விருந்து உபசாரம் செய்பவளே கற்பில் சிறந்த மென்மையான இயல்புடைய பெண்ணாவால்

-அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை-

என்று சிலப்பதிகாரத்தில் கண்ணகி புலம்புகின்றாள். அறவழி நின்ற நன்மக்களுக்கு உதவிகள் அளிப்பதும் அந்தணர்களுக்கு உணவும் உடையும் அளித்து அவர்களை பராமரிப்பதும் துறவியருக்கு வேண்டியன வேண்டியாங்கு செய்து அவர்களைப் பேணுவதும் தொன்மையான சிறப்புடைய நம்முடைய முன்னோர்கள் எடுத்துக்காட்டியபடி விருந்தினரை எதிர்கொண்டு அழைத்து அவர்களுக்கு உபசாரங்கள் செய்வதும் என்னால் இயலவில்லை. இல்லத்தரசிக்குரிய எல்லாக் கடமைகளையும் உரிமைகளையும் இழந்து நிற்கின்றேன் என்று கண்ணகி கலங்குகின்றாள். கோவலன் அவளுடன் வாழாத காரணத்தினால் அவள் வீட்டிற்கு

விருந்தினர்களோ அந்தணரோ துறவியறரோ வந்து உதவி பெறுவது கிடையாது. விருந்தினர் இல்லாத வீடு சுடுகாடு என்று கருதப்பட்ட காலம் அது.

கல்வியும் செல்வமும் யாருக்கு :-

பெண்களுக்கு இல்லறக் கடமை மட்டுமே சமூகத்தால் விதிக்கப்பட்டிருந்ததா? கல்வி கேள்விகளில் அவர்களுக்கு பங்கு இல்லையா? என்ற கேள்வி எழலாம். சங்ககாலத்தில் பெண்பாற் புலவர்கள் பலர் இருந்துள்ளனர் அவர்களில் அவ்வையார் அரசர்களுக்கு நெருங்கிய நண்பராக இருந்திருக்கின்றார். மன்னர்களுக்கிடையே தூதுவராக சென்று போரைத் தவிர்த்து இருக்கின்றார். பறம்பு மலை வேந்தன் பாரி வள்ளலின் மகளிர் இருவரையும் அழைத்துச் சென்று தக்க மணமகனுக்கு திருமணம் செய்து வைத்துள்ளார்.

சங்கம் மருவிய காலத்தில் கணிகையர் குலத்தில் தோன்றிய மணிமேகலை பௌத்தத் துறவி ஆகி பல சமயக்குரவர்களுடன் சமயம் சார்ந்த வாதங்களில் ஈடுபட்டு வெற்றி பெற்றுள்ளார். அவள் தாயார் மாதவியும், கோவலனின் தாயார் தகப்பனாரும் ஆசீவக சமயத்தைத் தழுவினர்.

கல்வெட்டுகள் அரசக் குடும்பத்தைச் சேர்ந்த மகளிரும் தாசிக் குலத்தைச் சேர்ந்த பெண்களும் மற்ற சிலரும் கோவில்களுக்கு விளக்கெரிக்கவும் பூசை செய்யவும் பல நிவந்தங்களை வழங்கினர் என்கின்றன. இவை பெண்களிடம் செல்வம் இருந்ததையும் அதை அவர்கள் தங்கள் விருப்பப்படி பொதுக் காரியங்களுக்கு செலவு செய்ததையும் உறுதி செய்கின்றன.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கம்பராமாயணத்தில் கம்பர்

பெருந் தடங்கண் பிறை நுதலார்க் கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்தும் அன்றி விளைவன யாவையே

என்கிறார். இப்பாடலிலும் பெண்களுக்கு கல்வியும் செல்வமும் உண்டு எனினும் அவர்கள் வீட்டிற்கு வந்தவர்களுக்கு விருந்து உபசாரம் செய்ய வேண்டியது அவர்களின் மிக முக்கியக் கடமை என்பது வலியுறுத்தப்படுகின்றது. பெண்ளுக்குக் கல்வியும் செல்வமும் இருந்ததை இப்பாடல் வரிகள் உறுதி செய்கின்றன.

விலை பேசப்படும் பெண் உடம்பு:-

இல்லத்தரசிகளுக்கு குடும்பம் சார்ந்த கடமைகள் முக்கியமானவையாக வலியுறுத்தப்படும் இச்சமூகத்தில் விலை மகள் அல்லது பரத்தை எனப்படும் பெயரில் ஒரு பெரும் கூட்டமே ஆண்களால் அவர்களின் இச்சை தணிவிக்கும் பணிக்காகப் பராமரிக்கப்பட்டு வந்ததை தமிழக வரலாறு தெரிவிக்கின்றது.

இன்றைக்கு கண்வன் மனைவி அல்லாத ஆணும் பெண்ணும் கலவியில் ஈடுபடுவது குற்றம் அன்று என்று சட்டத் திருத்தம் இந்தியத் திருநாட்டில் நடைமுறைக்கு வந்துவிட்டது. இன்று அரசும் சட்டங்களும் மதத்துக்கு காட்டும் முக்கியத்துவத்தைப் பண்பாட்டிற்கு காட்டுவதில்லை.

பரத்தமை என்பது உலகின் மிகவும் பாரம்பரியமான தொழில் ஆகும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெண் 'தொழில்' செய்கிறாள் என்றால் பரத்தையாக இருக்கிறாள் என்றே புரிந்து கொள்ளப்பட்டது. சங்க காலத்தில் பரத்தையரோடு தொடர்பு கொல்வது அவமானமாக கருதப்பட்டது. நலங்கிள்ளி வஞ்சின மொழி கூறும் போது (புறநானூறு 73 12 - 14)

> தீதில் நெஞ்சத்து காதல் கொள்ளா/ பல்லிரும் கூந்தல் மகளிர்
> பொல்லா முயக்கிடை குழைக என் தாரே

என்கிறான்.நெஞ்சில் காதல் இல்லாமல் ஆண்களைத் தழுவும் பெண்களின் தழுவுதலால் நான் அணிந்திருக்கும் மாலைகள் கருகட்டும் என்று சினத்துடன் அறைகூவல் விடுகிறான். இதன் பொருள் யாதெனில் ஒரு ஆண் தன் மீது காதல் கொண்ட பெண்ணைத் தழுவி மகிழ வேண்டுமே தவிர பணத்துக்காக எந்த ஆணுடனும் உறவு கொள்ளும் பெண்ணைத் தழுவக்கூடாது. அவ்வாறு தழுவிய நிலைக்கு நான் ஆளாகியவன் ஆகிறேன் என்கிறான் சோழ மன்னன். இவன் தன்னை நாடி வந்து பகைவர்கள் தன் நாட்டை கேட்டால் கொடுத்து விடுவேன். ஆனால் என்னை எதிர்த்துப் போராடி பெற நினைத்தால் அவர்களை யானையின் காலில் பட்டு நசுங்கும் மூங்கில் குருத்துகள் போல நசுக்கி விடுவேன். அப்படி நசுக்காவிட்டால் நான் பரத்தையோடு சேர்ந்தவன் ஆவேன். அவளது பொய்த் தழுவுதலால் என்னுடைய மார்பில் தவழும் மாலை கசங்கட்டும் என்று பகை மன்னர்களை பார்த்து சவால் விடுகிறான். ஆக பரத்தையரோடு புழங்குவது சமூக விழிமியத்திற்கு எதிரானதாக நோக்கப்பட்டது. எனினும் பரத்தமை மருதநில ஆண்களின் வாழ்க்கையில் ஒரு முக்கியப் பங்கு வகித்ததை மறுக்க இயலாது. இந்நிலத்தில் தான் சொத்துரிமை, வாரிசுரிமை முழு வீச்சில் நடைமுறைக்கு வந்தது. பெண்ணின் சமூகப் பிரிவுகளும் வேறுபாடுகளும் உச்சத்தில் இருந்தன.

பரத்தை வகைகள்:-

பரத்தையர் பல வகையினர் இருந்ததாக உரையாசிரியர்கள் விளக்குகின்றனர். காதல் பரத்தை காமப்பரத்தை என்று இரண்டு பிரிவு உண்டு. காதல் பரத்தை ஒரு சமயத்தில் ஒரே ஒருவனுடன் அவன் மீது காதல் கொண்டு அவனுக்கு மட்டுமே உரியவளாக இருப்பாள். கிட்டத்தட்ட இரண்டாம் மூன்றாம் தாரத்தை போன்றவள் இவள். காமப் பரத்தை என்பவள் தன்னை நாடிவரும் ஆண் எவராயினும் அவருடன் கூடியிருப்பாள். அதற்குரிய பொருளை பெற்றுக்கொள்வாள்.

இல் பரத்தை, சேரி பரத்தை என்று இரண்டு வகையினர் இருந்தனர். இற்பரத்தை என்பவள் மறுமணையாட்டி போல ஒரே ஆடவனுக்கு ஒரே ஆணுடன் சேர்ந்து அவள் ஆயுள் முழுக்க இருப்பாள். சேரிப் பரத்தை என்பவள் தன் குடியிருப்பில் இருக்கம் எந்த ஆணுடனும் இருக்க சம்மதிப்பாள். சேரி என்றால் குடியிருப்பு. அக்காலத்தில் பார்ப்பனர் மட்டுமே வாழும் பார்ப்பனச் சேரிகளும் இருந்தன.

பரத்தைகளில் பல வகைகள் இருக்க வேண்டிய அளவிற்கு பரத்தமை நிறுவனப்படுத்தப்பட்டு பெரு வளர்ச்சி பெற்று இருந்தது. ஆணாதிக்கச் சமூகம் பரத்தைக்குக் குழந்தை பெறும் உரிமையை வழங்கவில்லை. அவர்கள் தங்கள் இளமைக் காலத்திலேயே முதுமைக் காலத்திற்கு வேண்டிய செல்வத்தையும் பிற வசதிகளையும் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களை முதுமை காலத்தில் பராமரிப்போர் யாரும் கிடையாது. இளமையில் அவளைக் கொண்டாடிய கூடி மகிழ்ந்த ஆடவர் சமூகமும் அப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் இவர்கள் இளமைக் காலத்திலேயே தன்னை நாடி வந்த ஆடவரிடம் இருந்து தங்களால் இயன்றவரை

பொன் பொருளை அபகரித்துக் கொண்டனர். இதனை நாலடியார்

விளக்கு ஒளியும் வேசையர் நட்பும் இரண்டும்
துளக்கற நாடின் வேறல்ல 38-1

என்றது. விளக்கு எண்ணெய் இருக்கும் வரை எரியும். வேசியர் பணம் இருக்கும் வரை நட்பாக இருப்பார்கள். இவ்விரண்டும் வெவ்வேறு அல்ல. இரண்டும் ஒன்றுதான் என நாலடியார் விளக்குகின்றது.

பணம் பிடுங்கி பரத்தையர்

பரத்தையர் பணம் பிடுங்கிகளாக வாழ்ந்ததற்கு முக்கியக் காரணம் இவர்களுக்குக் குடும்பம்இல்லை. குடும்பம் . என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொள்ள சமூகம் இவர்களை அனுமதிக்கவில்லை குடும்பம் என்ற அமைப்பு குழந்தை பெற்றுத் தரும் பெண்களுக்கு வழங்கப்பட்ட சமூகத் தகுதி ஆகும். இவர்களின் உடம்பு இலமைக்காலத்தில் விலை பேசப்பட்டது. முதுமையில் தூக்கி எறியப்பட்டது. இல்லத்தரசிகள் ஒருவனுக்கு மட்டுமே மனைவியாக வாழ்ந்து பிள்ளை பெற்று கொடுத்தார்கள். பரத்தையரிலும் சிலர் ஒருவனுடன் மட்டுமே வாழ்ந்தாலும் கூட அவர்களுக்கு குழந்தை பெறும் உரிமை கிடையாது. குழந்தை பெற்றாலும் அந்த குழந்தைக்குத் தன் தகப்பனின் சொத்துக்களில் வாரிசுரிமை கிடையாது. வயதான காலத்தில் இந்த தாயும் குழந்தையும் தகப்பனின் ஆதரவில்லாவிட்டால் அனாதையாகத் திரிய வேண்டும். இதனால் இவர்கள் குழந்தை பெற்றுக் கொள்வதைத் தவிர்த்தனர். அதற்கான மருந்து மாயங்களை தெரிந்து வைத்திருந்தனர். அவ்வாறே குழந்தை பெற்றாலும் பெண் குழந்தையாக இருந்தால் மட்டுமே அதனை மீண்டும் தாயைப் போல 'தொழிலுக்கு' விடலாம் என்று போற்றி தன் தொழிலுக்குரிய

ரகசியங்களை நுட்பங்களை சொல்லிக் கொடுத்து வளர்த்தனர். ஆண்பிள்ளை பெறுவதை இவர்கள் விரும்பவில்லை. இதனால் அவிசாரி வீட்டில் ஆண்பிள்ளை பிறந்தது போல் என்ற பழமொழி தோன்றியது. அவிசாரி என்ற சொல் அபிசாரிகா என்ற சொல்லின் தமிழ் வடிவம் ஆகும். இவர்கள் வீட்டில் ஆண் குழந்தை பிறந்தால் அனைவருமே துக்கமாக இருப்பர். காரணம் ஆண் பிள்ளையால் இந்தக் குடும்பங்களுக்கு எவ்வித நன்மையும் கிடையாது.

கணிகையர்

சங்க காலத்திற்குப் பின்பு சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஊர்வசியின் வம்சத்தில் தோன்றிய மாதவி மற்றும் அவள் மணிமேகலையின் வாழ்க்கையை விளக்குகின்றது. ஊர்வசியின் வம்சத்தில் தோன்றிய பெண்கள் கணிகையர் எனப்பட்டனர். சங்கம் மருவிய காலத்தில் பரத்தையர் என்ற பழைய சொல் வழக்கு மாறி கணிகையர் என்ற சொல் வழக்கு நிலைபெற்றது.

ஒருவனுக்கு ஒருத்தியான மாதவி

மாதவி கணிகை குலத்தைச் சேர்ந்த பெண் அவள் ஆடல் பாடல் அலங்காரம் செய்தல் போன்ற கலைகளில் வல்லவள். அவள் வாசனைக் குளியலையும் அணி மணிகளையும் அலங்காரத்தையும் ஒரு முழு காதையில் இளங்கோ விளக்குகிறார். அவளுடைய ஒரு நாள் விலை ஐந்தரை கழஞ்சு பொன். அதாவது இரண்டரை பவுன். ரூபாய் கணக்கில் இன்று இரண்டரை லட்சம் ஆகும். இப்பெரும் விலை கொடுத்து அவளைப் பெற்றுச் செல்ல மன்னர்களால் கூட இயலவில்லை. ஆனால் வணிகக் குலத்தைச் சேர்ந்த கோவலனால் அவளுக்கு விலை கொடுக்க முடிந்தது. அவள் ஒருத்திக்கு ஒருவன் என்ற நிலைப்பாட்டை எடுத்து வாழ்ந்து வருகின்றாள். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறக்கின்றது. அவளது நாயகன் கோவலன் தன் குலதெய்வமான மணிமேகலா தெய்வத்தின் பெயரை தன் மகளுக்குச் சூட்டுகின்றான். கோவலன் இறப்புக்கு பின்னர் மாதவி தன் மகள் மணிமேகலையை தன்னைப்போல் கனிகையாக்காமல் பௌத்த மடத்தில் சேர்த்து துறவி ஆக்கி விடுகின்றாள். ஆதரவற்ற பெண்களுக்கு ஆதரவளித்தல் முதல் சமயம் பௌத்த சமயம் ஆகும். அதற்கு முன்பு வரை சமயங்கள் தங்கள் மடங்களில் பெண்களை பெண்களுக்கு ஆதரவளித்து ஏற்றுக் கொள்ளவில்லை.

பரத்தமைக்கு ஆதரவான சமூகம்

இயற்கை வழிபாடும் முன்னோர் வழிபாடும் செழித்திருந்த தமிழகத்தில் பெண்கள் அனாதையாக விடப்படவில்லை. பரத்தையார் குலப் பெண்கள் பரத்தையாகவே வாழ்ந்திருக்கக்கூடும். இல்லத்தரசிகள் தங்கள் கணவன்மார் பரத்தையரிடம் தொடர்பு வைத்திருந்தாலும் அது குறித்து மனைவிமார் அங்கலாய்த்துக் கொண்டனரே தவிர

அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுத்து அவர்களைத் தள்ளி வைக்க இயலவில்லை.

கொண்டி மகளிர்:-

பரத்தையர்தவிரஇன்னொருபிரிவுபெண்களும்பழஞ்சமூகத்தில்காணப்பட்டனர். இவர்கள் போரின் போது தோற்றுப் போன நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட மகளிர் ஆவர். வெற்றி பெற்ற நாட்டினர் இவர்களைப் பொதுப்பணிகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனர். இவர்களுக்கென்று தனிக் குடியிருப்பு பகுதி இருந்தது. அங்கு இவர்கள் தங்கள் பணி நேரம் போக எஞ்சிய நேரத்தில் இரவிலும் பகலிலும் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்தனர்.

சங்க கால நெடும் பாடலான மதுரைக்காஞ்சி (அடிகள் 582, 583) இவர்களைக்

'கண்டோர் நெஞ்சில் நடுக்குறும் கொண்டி மகளிர்'

என்று குறிப்பிடுகின்றது. பார்க்கின்றவர்கள் பயப்படும்படி இவர்களுடைய நடவடிக்கைகள் இருந்தனவாம்.

பட்டினப்பாலை கொண்டி மகளிர்

'உண்டுறை மூழ்கி அந்தி மாட்டிய நந்தா விளக்கின்,
மலரணி ஒழுக்கம் எரிபலர் தொழ'
(அடிகள் 246 - 248)

இப்பாடலடிகள் கொண்டி மகளிர் மாலை நேரத்தில் அணையா விளக்கு ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்ததைக் குறிக்கின்றது. அவர்கள் தரையை மெழுகி பூ வைத்து விளக்கேற்றும் பணிகளை செய்துள்ளனர். கோயில், அரண்மனை போன்ற இடங்களில் திரு மெழுக்கிடுதல், விளக்கேற்றுதல் போன்ற பணிகளைப் பின்னர் தேவதாசிகள் செய்தனர்.

தேவதாசிகளானவர்கள் யார் யார்:-

அரச குடும்பத்துப் பெண்களும் மற்ற குடும்பத்துப் பெண்களும் கூட கோயில் அடிமைகளாகத் தங்களை அறிவித்துக் கொண்டதாகச் சில கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. பதியிலார் என்று கணவன் இல்லாதவர்களாகக் கோயிலுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தன்னார்வலராகக் கோயில் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் இவர்களின் எண்ணிக்கை மிக மிக குறைவு. பெரும்பாலும் பகை நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்ட பெண்களே கோயில் பணிகளிலும் பொதுப்பணிகளுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டனர்.

தமிழகமும் பிற மாநிலங்களும்:-



தமிழகத்திற்கும் மற்ற மாநிலங்களுக்கும் குறிப்பிடத்தக்க மாற்றம் காணப்படுகின்றது பிற மாநிலங்களில் இன்னும் தாசித் தொழிலை தம் பிறவி கர்மாவாக நினைத்து பெண்கள் எவ்விதக் குற்ற உணர்வும் இன்றி ஈடுபட்டு வருகின்றனர். வட நாட்டில்

ஒரு ஊரே பாலியல் தொழில் செய்யும் கொடுமை சில மாநிலங்களில் உள்ளது. சில ஊர்கள் பாலியல் தொழில் செய்யும் பெண்கள் நிறைந்த ஊர்களாக உள்ளன. இவ்வூரில் பிறந்த பெண்களில் மூத்த பெண் கண்டிப்பாக பாலியல் தொழிலில் முதலில் இறக்கப்படுகின்றாள். அவளுக்கு வயதானதும் அவளது தங்கை அத்தொழிலுக்குக் கொண்டு வரப்படுகின்றாள். இதனை ஆண்களும் பெண்களும் தங்கள் பிறவி கர்மாவாக நினைத்துச் செய்கின்றனர். செய்யாவிட்டால் தெய்வ குற்றமாகி விடும் என்று அஞ்சுகின்றனர். இதனால் இவர்களின் குடும்பத்து ஆண்கள், இப் பெண்களுக்கு இத்தொழில் செய்வதற்கு உறுதுணையாக இருக்கின்றனர். குடும்பத்து உறுப்பினர்கள் ஆன் வாடிக்கையாளர்களை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வருகின்றனர்.

மேற்கு மத்தியப் பிரதேசத்தில் உள்ள பச்சார இனத்துப் பெண்கள் கிழக்கு உத்தரப் பிரதேசத்தில் நட் பூர்வா என்ற இடத்தில் வாழும் ஏழைப் பெண்கள் குடும்பம் குடும்பமாக தாசி தொழில் செய்து வருகின்றனர். கிபி

1871 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசு இவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது எனினும் விடுதலையான பின்பு இப்பெண்கள் தொடர்ந்து இத்தொழிலைத்தான் செய்தனர். கோயில்களில் கடவுளுக்குச் செய்யும் திருப்பணியாக இவர்கள் கருதுவதால் இத்தொழிலை விடாமல் தொடர்ந்து செய்கின்றனர்.

குஜராத் மாநிலத்தில் வாடியா என்ற கிராமத்தில் தாசித் தொழில் பிரதானத் தொழிலாக உள்ளது. 12 வயதில் பெண்கள் இத்தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். வீட்டு ஆண்களே உற்ற துணையாக இருந்து உதவுகின்றனர். இக் குடும்பங்களில் பெண் குழந்தைகள் பிறந்தால் மட்டுமே கொண்டாடுகின்றனர். ஆண் குழந்தைகளுக்கு வரவேற்பில்லை. பாகிஸ்தான், ராஜஸ்தான், மும்பை, டில்லி போன்ற இடங்களுக்கு இவ்வூரின் இளம்பெண்கள் 500 ரூபாய் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை பாலியல் தொழில் செய்ய விற்கப்படுகின்றனர்.

1988 ஆம் ஆண்டு தேவதாசி முறை தடுப்புச் சட்டம் அறிமுகமானதும் பகுத்தறிவுப் பிரச்சாரம் தீவிரமாக இருந்த தமிழ்நாட்டில் குடும்ப முறையிலான தாசித் தொழில் ஒரு

முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் பிற மாநிலங்களில் கடவுள் பணியாக நம்பப்பட்டதால் குடும்பம் குடும்பமாக தாசித் தொழிலில் தொடர்ந்தனர். பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர உயர அவர்கள் தொழிலில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டனர்.

பெண் உடல் யாருக்கு உரிமை?

ஒரு சமூகம் ஒரு பெண்ணின் உடலை ஆண்கள் அனுபவித்துக் கொள்ளும் உரிமையை வைத்து அவளது தரத்தை முடிவு செய்கின்றது: வகைப்படுத்துகின்றது: மதிப்பளிக்கின்றது. ஒருவனுடன் மட்டும் வாழும் பெண் உள்ளூர்ப் பெண்ணாக இருந்தால் அவளுக்கு மனைவி என்ற தகுதியும் தாயாகும் அனுமதியும் கிடைக்கும். ஒருவனுடன் வாழும் பெண் தோற்றுப் போன நாட்டைச் சேர்ந்தவள் ஆக இருந்தால் அவளுக்கு மனைவி மற்றும் தாய் என்ற தகுதியும் அனுமதியும் இல்லை. தயானாலும் பிள்ளைக்கு சொத்துரிமை இல்லை. அவள் மாதவி போல தன் மனதிருப்திக்கு ஒருவனுடன் வாழ்ந்து விட்டுச் சாகலாம்.

கணிகையர் வகைப்பாடு:-

பரத்தமை தொழிலுக்கென்று பெண்களுக்குத் தனித் தகுதியோ உருவமைப்போ குடும்பப் பின்னணியோ இருந்ததாக எந்தக் காலத்திலும் எங்கேயும் எடுத்துரைக்கப்படவில்லை. சிலப்பதிகாரம் இவர்கள் ஊர்வசி வழியில் வந்தவர்கள். தாசி தொழில் இவர்களின் சுதர்மம் என்று மாதவியின் தாயார் வாயிலாக எடுத்துரைக்கிறது. பொதுவாக இவர்கள் கோவில் பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட போது ஆடல் பாடல் கலைகளில் தேர்ச்சி பெற்றவராக இருந்தனர். இவர்களை கோயில் தாசி (கோயில் அடிமைகள்) என்று அழைத்தனர்.

சிவன் கோவிலில் பணியாற்றிய பெண்கள் இரண்டு தோள்களிலும் சூல முத்திரை பதிக்கப்பட்டு ருத்ர கணிகை எனப்பட்டனர். விஷ்ணு கோவிலில் இருந்தவர்கள் விஷ்ணு தாசி அல்லது விஷ்ணு கணிகை எப்பற்றனர். இவர்கள் இரு புயங்களிலும் சங்கு, சக்கரம் முத்திரைகளைச் சூட்டுக்கோலால் இட்டுக்கொண்டனர். தென் தமிழகத்தில் காளி கோயில்களிலும் கூட காளிதாசி என்று அழைக்கப்படும் பெண்கள் இருந்ததாக அறிகின்றோம்.

தாசிகளின் அதிகாரம்:-

சோழர் காலத் தாசிகள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப குறிப்பாக கோயில் பணியாளர்களுடன் உறவு கொண்டதாகவும் அதற்கு மறுத்த ஆண்களை சாட்டையால் அடித்து தண்டிக்கும் அளவுக்கு அதிகாரம் பெற்றிருந்ததாகவும் *Nithyasumangali* என்ற ஆங்கில நூலின் வழியாக அறியலாம். 14ஆம் நூற்றாண்டில் விஜயநகரப் பேரரசு காலத்திற்குப் பிறகு கோயில் தாசிகளின் நிலை மோசமடைந்தது கோயில் நிர்வாகிகள், முதன்மைப் பூசாரிகள் ஜமீன் குடும்பத்தினர், மிட்டா, மிராசு, மேட்டுக்குடியினர்

இவர்களின் அபிமான ஸ்திரிகள் ஆயினர். தாசிப் பெண்களை அதிகாரத்தில் உள்ள ஆண்கள் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டனர்.

ஆங்கிலேயர் காலப் பெண் மேம்பாடு:-

ஆங்கிலேயர் ஆட்சியில் சதி எனப்படும் உடன்கட்டை ஏறும் பழக்கம் நிறுத்தப்பட்டது. குழந்தை மணம் கண்டிக்கப்பட்டது. பெண் கல்வி அறிமுகமாயிற்று. சாரா டக்கர், கேட்டி வில்காக்ஸ் போன்றோர் பெண்களுக்கென்று கல்வி நிலையங்களை ஏற்படுத்தினர். கார்மேல் அம்மையார் தாசி தொழிலில் இருந்து பெண்களை விடுவித்து மறு வாழ்வு அளித்தார்.

சட்டமும் சமூகமும்:-

1950 இல் தாசி ஒழிப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த போது கோயில் சார்பாக இவர்களுக்கென்று கொடுத்திருந்த தெருவில் இருந்து இவர்களை சிலர் வெளியேற்றினர். இன்னும் பலர் தாமாகவே தெருக்களில் இருந்து வெளியேறி ஊருக்குள் ஆங்காங்கே கிடைத்த இடங்களில் வீடு பிடித்துக் குடியேறிவிட்டனர். இரண்டாம் மூன்றாம் தரமாகி சிலர் குடும்ப வாழ்க்கைகளுள் ஒன்றிவிட்டனர். கலைகளில் தேர்ச்சி பெற்ற பெண்கள் திரையுலகில் நடிகைகளாகவும் பாடக்கிகளாகவும் பிரகாசித்தனர். எம் எஸ் சுப்புலட்சுமி, எம் எல் வசந்தகுமாறி, டி ஆர் ராஜகுமாரி, கே பி சுந்தராம்பாள் போன்றோர் தந்தை பெயர் இன்றி ஊர்ப் பெயரும் தாயார் பெயரும் முன் எழுத்துக்களாகக் (initial) கொண்ட தாசி குலத்துப் பெண்கள் ஆவர்.

கொடுமுடி பாலாம்பாள்
சுந்தராம்பாள்

மதுரை சண்முகவடிவு
சுப்புலட்சுமி

மெட்ராஸ் லலிதாங்கி
வசந்த்குமாரி

ஊஞ்சலூர் ராமாயம்மாள்
ஜீவரத்னம்

மலட்டுத்தன்மையும் மறுதாரமும்:-

பெண்ணின் உடலை வைத்து ஆண்கள் தகுதியும் மதிப்பும் கொடுக்கும் இச்சமூகத்தில் அவள் உடல் ஆணின் அனுபவத்திற்கு மட்டுமல்லாது அவள் பெற்று தரும் குழந்தைக்காகவும் மதிக்கப்பட்டது. குழந்தை பெற்று தராத பெண்ணை மலடி என்று இழித்துரைத்துத் தள்ளி வைத்தனர். இப்பெண்களை சுப காரியங்களில் கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை.

மனைவிக்கு குழந்தை பிறக்கவில்லை என்றால் அதற்கு கணவனின் உடற் கூறும் கூட காரணமாக இருக்கும் என்பதை இருபதாம் நூற்றாண்டு வரை எவரும் புரிந்து கொள்ளவில்லை. குழந்தையின்மை என்பது மனைவியோடு தொடர்புடையது என்றே கருதப்பட்டது. ஆண்கள் குழந்தைக்காக மறுதாரம் திருமணம் செய்து கொண்டனர். அதனை சமூகமும் ஏற்றுக் கொண்டது.

பல தார மணம்:-

ஆண்கள் தங்கள் வசதி வாய்ப்பிற்கு ஏற்ப பல பெண்களை இரண்டாம் தாரம் மூன்றாம் தாரம் என்று திருமணம் செய்து வீடு பார்த்து குடி வைத்து குடும்பம் நடத்தினர். அவர்களின் பிள்ளைகளையும் தங்களுடைய பொறுப்பில் வளர்த்து வந்தனர். சில குடும்பங்களில் இரண்டாம் மூன்றாம் தாரப் பெண்கள் ஒரே வீட்டில் வசித்ததும் உண்டு. இவர்கள் தமது கோபதாபங்களை மறைத்துக் கொண்டு கணவனின் நன்மையை மகிழ்ச்சியை கௌரவத்தை மட்டுமே கருத்தில் கொண்டு ஒத்துப் போயினர். எனினும் வட்டிச்சோறைப் பகிர்ந்தாலும் வாழ்க்கையை பகிர்ந்து கொள்ள முடியுமா என்ற பழமொழி பலதாரங்கள் இருந்த குடும்பத்தில் அவர்களுக்குள் இருந்த மனக்கசப்பையும் உள் பூசலையும் தெளிவாக உணர்த்தியது. இப்பெண்களுக்கு இடையில் வரும் சண்டை சச்சரவுகளை சக்களத்தி சண்டை என்றனர். சக்களத்தி என்ற சொல் சக களஸ்திரி என்ற சம்ஸ்கிருத சொல்லின் தமிழ் வடிவம் ஆகும். களஸ்த்ரி என்றால் மனைவி.

எல்லா பிள்ளைகளுக்கும் சொத்தில் பங்கு:-

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தாலி கட்டித் திருமணம் செய்து கொள்ளாமல் வைப்பாட்டி என்ற பெயரிலும் சில பெண்களோடு ஆண்கள் தொடர்பு வைத்து அவர்களுக்குத் தனி வீடு பார்த்து வைத்து அவர்களின் செலவுகளை கவனித்துக் கொண்டனர். இவர்களின் பிள்ளைகளையும் ஆண்கள் பொறுப்பேற்றுக் கொண்டு வளர்த்து வந்தாலும் சமூகம் ஆண்களுக்கு இப் பிள்ளைகளை வளர்க்க வேண்டும் என்ற என்ற விதியைக் கட்டாயமாக்கவில்லை. மேலும் இவ் பிள்ளைகளை வப்பாட்டி மகன் என்று ஏளனமாகவும் பார்த்தது. ஆனால் சட்டத் திருத்தம் வந்த பின்பு முறையற்ற மனைவிக்கு பிறந்த முறையான குழந்தைகள் *(legitimate children of illegitimate mother)* என்ற அடிப்படையில் இக் குழந்தைகளுக்கு சொத்துரிமை கிடைத்தது. முதல் மனைவி மட்டுமே முறையான மனைவி என்ற தகுதியை இந்தியச் சட்டம் வழங்கியது. பலதார தடைச் சட்டம் ஆண்கள் அடுத்தடுத்துப் பெண்களை திருமணம் செய்து கொள்வதை தடுத்தது. ஆனால் பிள்ளைகளுக்கான வாரிசுரிமையை தடுக்கவில்லை.

ஒரு ஆண் ஒரு பெண்ணின் உடலை உரிமை கொள்வதைக் கொண்டு அவளுக்குரிய சமூகத் தகுதி மட்டுமல்லாது அவளுடைய பிள்ளைகளின் சமூகத் தகுதியும் சட்டத்தாலும் சமூகத்தாலும் வெவ்வேறாகவே வரையறை செய்யப்பட்டது.

சட்டத்தின் மறுப்பும் சமூகத்தின் ஏற்பும்:-

சட்டம், பலதாரத்தை தடை செய்திருந்தாலும் ஏழைகளும் செல்வந்தர்களும் மிகப் பெரிய அரசியல் தலைவர்களும் கூட இரண்டாம் தாரம் மூன்றாம் தாரத்தை ஊரறிய வைத்துள்ளனர். ஏனெனில் நடைமுறையில் உள்ள ஆணாதிக்கச் சமூகம் மறு தாரம் வைத்திருப்பதை ஒரு குற்றமாகவோ ஒரு பாவமாகவோ கருதவில்லை. ஆணாதிக்க சமுதாயம் ஒரு ஆண் பல பெண்களுடன் நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ தொடர்பு கொள்வது கொண்டிருப்பதை கூடத் தவறாக கருதுவது கிடையாது.

சோரம் போதல் :-

பெண்கள் கணவன் தவிர்த்த வேறு ஆண்களோடு தொடர்பு கொள்வதை சட்டமும் சமூகமும் குற்றமாகக் கருதித் கடுமையாக தண்டித்தது. மொட்டையடித்து உடம்பில் கரும்புள்ளி செம் புள்ளி குத்தி கழுதை மேலேற்றி அசிங்கப்படுத்தியது. சில பெண்களை ஊரை விட்டு விலக்கி வைத்து அவளை ஊருக்குப் பொது மகளாக்கியது. திருமண பந்தத்தில் இருந்து விலக்கி வைத்தது. ஆனால் அண்மைக்காலச் சட்ட திருத்தம் பெண்களும் தமக்கு விருப்பப்பட்ட ஆண்களோடு உறவு கொள்வது சட்டப்படி குற்றம் கிடையாது என்று தெரிவித்து விட்டது. இப் பெண்ணின் கணவர் அவளுடைய புறமண உறவைச் சுட்டிக்காட்டி விவாகரத்துப் பெற்றுக் கொள்ளலாம். இதைத் தவிர அவளைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ இனி வழியில்லை. சட்டத்தின் முன்னிறுத்தி அவளுக்குத் தண்டனை வாங்கித் தர இயலாது என்ற புதிய சட்ட திருத்தம் பெண்ணின் உடல் உரிமை பெண்ணுக்குரியது என்பதை உறுதி செய்துள்ளது. இதுவரை ஒரு பெண்ணின் உடலுக்கான உரிமை ஆண்களிடம் மட்டுமே இருந்தது இன்று அந்நிலை மாறி உள்ளது

விளைவறிந்த விழிப்போடு வாழ்க!

முனைவர். இல.ஜெயந்தி
சென்னை

மனிதனின் வாழ்க்கைப் பயணம், இன்பத்தை நோக்கியதாகவே இருப்பதை அறிகிறோம். எனினும் இடையூறுகளையும், துன்பங்களையும் ஒவ்வொருவரும் துய்த்தே தீரவேண்டிய நிலை உள்ளது.

வினையே விளைவைத் தீர்மானிக்கிறது என்பதை முன்னோர் அறிவுறுத்தினர்.

'வினைப்போகமே ஒருதேகங் கண்டாய் வினைதான் ஒழிந்தால்
தினைப்போதளவு நில்லாது கண்டாய்' பாடல். 91

இந்த மானுடப் பிறவியே, நாம் முன்செய்த முற்பிறவி வினைகளினால் தான் கிடைத்திருக்கிறது. என்றும், அவ்வினைகள் நீங்கிவிட்டால், இந்த உடல் ஒரு நொடிப்போதும் இப்பூவுலகில் இல்லாமல் நீங்கிவிடும் என்றும் பட்டினத்தார் கச்சிதிருஏகம்ப மாலையில் குறிப்பிடுகின்றார்.

ஒவ்வொருவருடைய நல்வினை, தீவினைகேற்ற விளைவுகளே இன்பமாக, துன்பமாகத் தொடர்கிறது.

எவ்வளவு சிறியதாயினும் எக்காலத்திலும், எவரிடத்திலும் மனதால் எண்ணி உண்டாகின்ற துன்பச் செயல்களைச் செய்யாதிருத்தலே சிறந்தது.

'எனைத் தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான்ஆம்
மாணாசெய் யாமை தலை' (திரு. 317)

என தீயதை மனதாலும் எண்ணவேண்டாம் என்பார் திருவள்ளுவர்.

'தீய எண்ணத்துடன் ஒருவன் பேசினாலும், செயலில் இறங்கினாலும், வண்டியை இழுக்கும் மாட்டின் காலை, வண்டிச் சக்கரம் பின்பற்றிச் செல்வதுபோல் துன்பம் அந்த மனிதனைப் பின்பற்றிச் செல்கிறது' என்கிறார் புத்தர்.

செயலுக்குகேற்ற விளைவு
'பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்'
'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'
'செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்

எய்த வருமோ இருநிதியம் - வையகத்து
அறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும் பானை பொங்குமோ மேல் (நல்வழி - 18)

மனிதன் செய்த செயல்களின் விளைவுக்குக் கடவுளை நொந்து கொள்வதால் பயனில்லை. அதனால் இருமடங்கு செல்வம் தானே குவிந்து விடுமோ? வெறும் பானை பொங்குவதில்லை. மனிதன் தன் செயலுக்கேற்ற விளைவைத்தான் அனுபவிப்பான்.

'தாந்தா முன் செய்தவினை தாமே யநுபவிப்பர் (நல்வழி. 31)
'வினைப்பயனை வெல்வதற்கு வேதமுதலாம்
அனைத்தாய நூலகத்து மில்லை' (நல்வழி. 38)

வினையின் விளைவைத் துய்த்தே கழிக்க வேண்டும். வேதமுதலான நூலனைத்திலும் அதனை வெல்வதற்கு வழியில்லை.

என எடுத்துரைக்கின்றார் ஔவையார்.

மனிதர்கள் பலவகை வேறுபாடுகளோடு இருக்கக் காரணம் அவரவரின் வினைகளே ஆகும்.

தனு கரண புவன போகம்:
தனு - உடல், இறைவன் ஆன்மாக்களுக்கு கொடுப்பது
கரணம் - கருவிகள், ஐந்து புலனக்ள், மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.
புவனம் - உடல் தங்கி வாழும் உலகம்

போகம் - உயிர்கள் அனுபவிக்கும் இன்பம், துன்பம் என முன் வினையே இவற்றைத் தீர்மானிப்பதாக சைவ சித்தாந்தம் எடுத்துரைக்கிறது.

பழைய வினைகளின் விளைவு

பழைய வினைகள், விளைவைத் தராது ஓயாது. வறுமைக்குக் காரணம், தீவினையே ஆகும். முற்பிறப்பில் செய்த தீவினையின் விளைவாகவே பழிச் செயல்களைச் செய்வர்.

'பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலைத் - தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு' (நாலடி - 101)

பல பசுக்களின் கூட்டத்தில் விட்டாலும் இளங்கன்று தன் தாயை தேடி அடைதல் போல, முற்பிறப்பிற் செய்த பழவினையும் செய்தவனைத் தேடி அடையும்.

'வளம்பட வேண்டாதர் யார்யாரு மில்லை
அளந்தன போகம் அவரவர் ஆற்றான்

விளங்காய் திரட்டினார் இல்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்' (நாலடி 103)

செல்வம் முதலியவற்றால் வளமுடன் வாழ்தலை விரும்பாதவர் யாரும் உலகில் இல்லை. ஆனால் அவரவர் செய்த புண்ணியங்களுக்கு ஏற்ப அவரவர்களுடைய இன்ப நுகர்வுகள் வரையறை செய்யப்பட்டுள்ளன. விளாங்காயை உருண்டை வடிவமாகச் செய்தவரும் இல்லை. களாப் பழத்தைக் கறுப்பாகச் செய்தவரும் இல்லை. அதுபோல அவரவர் செயலால் விளைவு வருவதாகும். இன்பம் விரும்புவோர் நல்வினையே செய்தல் வேண்டும் என்கிறது நாலடியார்.

நன்மையும் தீமையும்
வினையின் வினைவானது கோடி கற்பம் சென்றாலும் தப்பாது தொடரும்.
'தானே புரிவினையாற் சாரு மிருபயனுந்
தானே யனுபவித்தல் தப்பாது - தானூறு
கோடிகற்பஞ் சென்றாலுங் கோதையே செய்தவினை
நாடிநிற்கு மென்றார் நயந்து' (நீதிவெண்பா)

'பெண்ணே! அளவற்ற கோடி கோடி கற்பங்கள் (கற்பம் - 432 கோடி, பிரம்மாவின் ஆயுட்காலம், ஒரு ஊழி) கடந்து விட்டாலும், ஒருவனை அவன் செய்த வினைகள் வந்து சேரும், என்று பெரியோர் கூறுவர். ஒருவன் தானே செய்த வினையால் வந்து சேரக்கூடிய இரண்டு பயன்களும் (நல்லதும் தீயதும்) செய்தவன் அனுபவித்துத்தான் ஆகவேண்டும், அது தப்பாது.' என நீதிவெண்பா பாடல் உரைக்கின்றது.

'பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்' (திரு. 319)

'முற்பகலில் மற்றவர்க்குத் துன்பமானவற்றைச் செய்தால், அவ்வாறு செய்தவர்க்கே, பிற்பகலில் துன்பங்கள் தாமாகவே வந்து சேரும்.'

'நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்

நோயின்மை வேண்டு பவர்.' (திரு. 320)

துன்பம் எல்லாம் துன்பம் செய்தவரையே சார்வன. ஆகையால் துன்பம் இல்லாமல் வாழ்தலை விரும்புபவர், பிறர்க்குத் துன்பம் செய்யார்.

என திருவள்ளுவர் வலியுறுத்துதல் காணலாம்.

வினையே விளைவுக்கு வித்து:
வினையின் பயன் பிறழாது தொடர்ந்து வருவதாகும்.
''வேலைக்கு வித்தும் ஆகி விளைந்தவை உணவும் ஆகி
ஞாலத்து வருமாபோல நாம் செய்யும் வினைகள் எல்லாம்

ஏலத்தான் பலமா - செய்யும் இதம்ஆகி தங்கட்கெல்லாம்
மூலத்தது ஆகி என்றும் வந்திடும் முறைமையோடே'' (சி.சி. -101)

''உலகத்திலேவிளைந்தநெல்லும்கனியும்போன்றவைநமக்குஉணவாகிபயன்படுகின்றன. அதனோடு அமையாமல், அவை அடுத்த பருவத்திற்கு வித்தாகவும் பயன்படுகின்றன. அதனைப் போன்றே 'தான்' என்னும் முனைப்போடு, செய்யப்படுகின்ற வினைகள் யாவும், எப்பொழுதும், முறையாக அவற்றின் நன்மை தீமைகளுக்கு ஏற்ப பொருத்தமான நுகர்வுகளைத் தரும். பிற உயிர்களுக்கு இழைக்கப்படுகின்ற நலம் தீங்குகள், புண்ணியமும் பாவமும் என விளையும். அது மறு பிறவியில் இன்ப துன்பமாய் வந்து பொருந்தும் அவற்றை நுகரும்போதே மேலும் வினைகள் விளையும். இந்த முறைமை ஒரு போதும் பிறழாது வரும்.'' என சிவ ஞான சித்தியார் சுபக்கப்பாடல் உரைக்கிறது.

இன்பம் இடர்என்று இரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே' (திருமந்திரம் -267)

இன்பமும் துன்பமும் அவரவர் செயலால் வருவதாகும். இதனை அறிந்தும், நல்லதைச் செய்யாதவர் அறம் அறியாதவர் ஆவர். என திருமூலர் குறிப்பிடுகின்றார்.

தீதும் நன்றும் பிறர் தர வாரா:

நன்மையும், தீமையும் பிறர் செயலால் உண்டாவதில்லை. நாமே அதற்குக் காரணம்

'தீதும் நன்றும் பிறர் தர வாரா'
'கல் பொருது இரங்கும் மல்லல் பேர் யாற்று
நீர் வழிப்படூஉம் புனை போல் ஆருயிர்
முறை வழிப்படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' (புறம் 192)

தீமையும், நன்மையும் பிறரால் நமக்கு ஏற்படுவதில்லை. நீரின் ஓட்டத்திலேயே செல்லும் தெப்பம் போல அவரவர் செய்த செயலின் படியே வாழ்க்கைப் பயணம் அமைகிறது என்பதால், பெரியோரை வியப்பதும், சிறியோரை இகழ்தலும் இல்லை என கணியன் பூங்குன்றனார் சங்க காலத் தமிழர்களின் தெளிவான சிந்தனையைத் தெரிவிக்கிறார்.

'எண்ணம், சொல், செயலால் தனக்கோ, பிறருக்கோ, தற்காலத்திலோ பிற்காலத்திலோ உடலுக்கோ, உயிருக்கோ ஊறு விளைவிக்காமல் வாழ்தல் உயரிய ஒழுக்கம்.' என்பார் - வேதாத்திரி மகரிசி.

அறிவியல் விளக்கம்

அறிவியல் அறிஞர் சர். ஐசக் நியூட்டன் இயற்கையின் இயல்பை ஆராய்ந்து அறிவித்தார்.

அவருடைய மூன்று விதிகளில், மூன்றாவது விதி, ஒவ்வொரு செயலுக்கும் சமமான மற்றும், எதிர்வினை உண்டு.

(Newton's third law of motion, 'For every action, there is an equal and opposite reaction')

என்றார் சர் ஐசக் நியூட்டன்.

'ஒவ்வொரு செயலுக்கும் விளைவுண்டு என நியூட்டன் உணர்த்தியதை நாம் அறிவோம். அந்த விளைவு எங்கும் நிறைந்த இறையின் வெளிப்பாடு என உணர்த்தி விஞ்ஞானத்தை விரிவாக்குகிறார் மகரிசி' என்று முனைவர் அழகர் இராமானுஜம் குறிப்பிடுவார்.

'செயலைச் செய்வது நாம்; விளைவைத் தருவது இறைநிலை. இறைநிலையைப் புலன்களால் உணர முடியாது. விளைவுகளால் அறியலாம். மனிதனுடைய தவறான செயல்களால் ஏற்படும் விளைவுகளே, உலக சமுதாய வாழ்வில் நிலவும் எல்லாத் துன்பங்களுக்கும், சிக்கல்களுக்கும், நோய் முதலிய வருத்தங்களுக்கும் காரணமாகும் என்பதை தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.'

'செயலிலே விளைவாகத் தெய்வ ஒழுங்கமைப்பிருக்கப்
பயனென்ன தவறிழைத்துப் பரமனைப் பின்வேண்டுவதால்?'

(ஞா.க. 1158)

'தப்புக் கணக்கிட்டுத் தான்ஒன்றை எதிர்பார்த்தால்
ஒப்புமோ இயற்கைவிதி ஒழுங்கமைப்பிற் கொத்தபடி
அப்போதைக் கப்போது அளிக்கும் சரிவிளைவு
எப்போதும் கவலையுற்று இடர்படுவார் இதை உணரார்'
(ஞா.க. 1429)

என்று விளக்குவார் வேதாத்திரி மகரிசி.

சான்று:

வழக்கத்தைவிட அளவுக்கு அதிகமாக உண்பது வினை. செரிக்காமல் துன்பம் தருவது விளைவு ஆகும்.

'நம்பிக்கை கொண்ட என்னுடைய அடியார்களே, உங்களுடைய இறைவனை நீங்கள் அஞ்சிக் கொள்ளுங்கள். இவ்வுலகில் நன்மை செய்தார்களே அவர்களுக்கு ஈருலகிலும் நன்மையுண்டு. அல்லாவின் பூமி விசாலமானது பொறுமையாளர்கள், அவர் தம் கூலியைக் கணக்கின்றி நிரம்பப் பெறுவார்கள்' என்றும் நீர் கூறுவீராக! *(39 - 2)*

என்பது திருக்குர்ரான் வாசகமாகும்.

‘உங்களுடைய ஒவ்வோர் எண்ணமும், ஒவ்வொரு வார்த்தையும், ஒவ்வொரு செயலும் அதற்கு ஏற்ற பலனை, உண்டாக்கும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். தீய செயல் என்பது உணர்வு நிலையில் தான் எழுகிறது என்பதைப் பற்றி ஐயமில்லை. ஆனால் அந்த தீய செயலுக்கான காரணம், அதற்கு மிகவும் உள்ளே புலன்களுக்கு எட்டாத ஆழ்ந்த உணர்வுறு பகுதிகளில் இருக்கிறது. புலனாகாத பகுதியில் இருப்பதால், அவை மிகவும் வலிமை வாய்ந்தவையாக இருக்கின்றன’ என்பார் சுவாமி விவேகானந்தர்.

‘செற்றொ ருவரைச் செய்த தீமைகள்
இம்மை யேவரும் மெய்ம்மையே’
என்பார் சுந்தரர்
‘மனிதன் எதை விதைக்கிறானோ அதன்
விளைச்சலையே அறுவடை செய்வான்’ (கலாத்தியர் 6-8)
என்பது பைபிள் வாசகமாகும்.
அறியாமையே துன்பத்திற்குக் காரணம்
அறியாமல் செய்வது தவறு அறிந்து செய்வது தப்பு.

அறியாமல் நிகழ்வது தவறு, அதற்கு திருத்தம் உண்டு. விளைவு அறிந்து செய்வது தப்பு, அதற்கு தண்டனை உண்டு. அதுவே துன்ப விளைவாக வருகிறது.

மனிதன் இன்பமாக வாழ ஏற்ற வழிமுறைகளை முன்னோர் ஆராயந்து எடுத்துரைத்தனர்.

இறை வழிபாடு:

‘இயற்கையை உணர்ந்து, இயற்கைக்கு முரண்படாது அற நெறியோடு வாழ்வதே இறை வழிபாடு.

‘விளைவறிந்த வழிப்பு நிலை என்பது, கடந்த கால அனுபவம், நிகழ்கால சூழ்நிலை, எதிர்கால விளைவு மூன்றையும் கணித்துச் செயல்படும் முக்கால அறிவு ஆகும்’

என்பார் வேதாத்திரி மகரிசி.

ஒவ்வொரு செயலுக்கும் ஏற்ற விளைவைத் துல்லியமாகத் தக்க நேரத்தில், விளைவாக அளித்துக் கொண்டிருக்கும் இறையாற்றலை உணர்ந்து, விளைவறிந்த விழிப்போடு வாழ்க!

Shakthi Pennithazh

Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)

3/422, Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu - 625 018.
Ph : +91 7871123226, +91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ளகருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும்.
அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

புதிய வெளியீடுகள்





விலை ரூ120

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18. போன் 7010997639

தனிச்சுற்றுக்கு மட்டும்